விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபத்து நான்கு

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 13 புதன்கிழமை (25.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 128

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கைப் பயணம் குறித்து
# பிரதமருக்கு விளக்கியது குழு

## அறிக்கையை கையளிக்க பணிப்பு

(புதுடில்லி)

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் 12 பேர் கொண்ட குழு, கடந்த வாரம் இலங்கையில் மேற்கொண்ட பயணம் குறித்து, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் விவரித்திருக்கிறார் அந்தக் குழுவுக்கு தலைமை வகித்த சுஷ்மா சுவராஜ். (24ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோர் தாக்கியதில் இளைஞன் சம்பவ இடத்தில் பலி



(கரவெட்டி)

வடமராட்சிப் பகுதியில் நேற்று மதியம் 1.30 மணியளவில் பொது மக்கள் மத்தியில் இளைஞன் ஒருவரை இனந்தெரியாத இரு நபர்கள் தாக்கியதில் அவர் அதே இடத்தில் துடிதுடித்துப் பலியானார்.

தொண்டைமானாறு பிள்ளையார் கோவில் வீதியை சேர்ந்த சிவஞானம் சிவரூபன் (வயது–28) என்பவரே இந்த சம்பவத்தில் பலியானவர் ஆவார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தனது மாமனாருக்கு சாப்பாடு (24ஆம் பக்கம் பார்க்க)

# 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் தீர்வை வெளிப்படுத்த வேண்டும்!

## ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு மக்களின் நெருக்கடி தொடர்பில், அரசாங்கம் உத்தேசித்துள்ள 13–வது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அப்பாற்பட்ட தீர்வினை நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி கோரியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தெரிவுக்குழு ஊடாக வழங்கப்படும் தீர்வுக்கு ஐக்கிய தேசியக்கட்சி பூரண ஆதரவளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். அடிப்படை யோசனை ஒன்று இருக்குமாயின் அது பேச்சுவார்த்தைக்கு சிறந்த அடித்தளமாக அமையும்.

13 ஆம் திருத்தம் தொடர்பான கருத்துக்களை தெளிவு படுத்தினால் இதனை முன்கொண்டு செல்வதற்கு (24ஆம் பக்கம் பார்க்க)

## ரூபாயின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் மதிப்பு நேற்று செவ்வாய்க்கிழமை வரலாறு காணாதவகையில் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

வரும் மே மாதம் தொடக்கம் இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்க்கான கொடுப்பனவுகளை அமெரிக்க டொலரில் வழங்குவதில்லை என இலங்கை மத்திய வங்கி முடிவு செய்துள்ளது.

இதன் காரணமாக இலங்கை ரூபாயின் மதிப்பு மேலும் வீழ்ச்சியடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (24ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய கடற்பரப்புக்குள் நுழைந்தால் அமைச்சர் டக்ளஸ் கைதாகலாம்!

## தமிழக சட்டத்தரணி தெரிவிப்பு

(சென்னை)

தமிழகம் இராமேஸ்வரத்தில், தமிழக மீனவர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தை நடத்தவிருப்பதாகவும் எவ்வாறான பிரச்சினை ஏற்பட்டாலும், இந்த ஆர்ப்பாட்டத் தீர்மானத்தில் இருந்து விலகப் போவதில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய கடற்பரப்புக்குள் பிரவேசித்தால் எந்தவொரு இந்திய பிரஜையும் அவரைத் தடுத்து வைக்க முடியும் என்று சட்டத்தரணி பி.புகழேந்தி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸின் கருத்து தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே சட்டத்தரணி (24ஆம் பக்கம் பார்க்க)

# இந்துக்களின் சுதந்திரத்தை பாதிக்கும் எந்த முயற்சியையும் பொறுக்க முடியாது

## இந்துமா மன்றம் கண்டனம்

(கொழும்பு)

பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வர ஆலயச் சூழலில் பௌத்த சமயத்தைப் பரப்பும் நோக்குடன் அரசாங்கத்தினதோ, இராணுவத்தினதோ ஆதரவால் எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளை தான் கண்டிப்பதாக அகில இலங்கை இந்துமா மன்றம் தெரிவித்துள்ளது.

இந்துமா மன்றத்தின் தலைவர் வி.கயிலாபிள்ளை, பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்து மக்களின் சுதந்திரத்தைப் பாதிக்கின்ற எந்தவொரு முயற்சியையும் பொறுக்க முடியாது, (24ஆம் பக்கம் பார்க்க)

## மின்னல் தாக்கி தாயும் மகனும் காயம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை பெரியவிளான் பகுதியில் இடி மின்னல் தாக்கி படுகாயமடைந்த நிலையில் தாயும் மகனும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சி.சந்திராதேவி (வயது 42) அவரது மகன் கே.கிங்சிலி (வயது 11) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர். இவர்களது வீடும் முற்றாக சேதமடைந்ததுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (எ–11)

# மதங்களிடையே சகவாழ்வை ஏற்படுத்தும் திட்டம் அரசிடமில்லை

## கரு ஜெயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு)

தம்புள்ளையில் நடைபெற்ற சம்பவத்தை நாம் பக்கசார்பின்றி அவதானித்தால் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த மக்களிடையே சகவாழ்வை கட்டியெழுப்புவதற்கான உபாயம் அரசாங்கத்திடம் இல்லையென்பது நிரூபணமாகின்றது என ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

தம்புள்ளை விவகாரம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே கரு ஜெயசூரிய இவ்வாறு தெரிவித்துள்ளார் அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் யுத்தம் முடிபடைந்த பின்னர் வெவ்வேறு இன, மத குழுக்கள் ஐக்கியத்தையும் நல்லிணக் (24ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆட்கள் இல்லாத சமயம் பார்த்து கந்தர்மடத்தில் துணிகரக் கொள்ளை

## திருடருக்கு சாதகமான 1 1/2 மணி நேரம்

(யாழ்ப்பாணம்)

பூட்டிய வீட்டின் கதவினை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 22 பவுண் தங்க நகைகள், இலத்திரனியல் சாதனங்கள், பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு யாழ்.கந்தர்மடம் அரசடி வீதியில் உள்ள வீட்டில் இடம்பெற்றுள்ளது.

முன்னாள் இந்து விவகார அமைச்சின் செயலாளரும், முன்னாள் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரும் முன்னாள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பதிவாளருமான க. பரமேஸ்வரனின் வீட்டிலேயே இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

நானும் எனது மனைவியும் நேற்றிரவு (நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு) 7 மணியளவில் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டத்திற்காக நல்லூர் முருகன் கோவிலுக்கு அண்மையிலுள்ள எனது தங்கையின் வீட்டுக்கு சென்றிருந்தோம்.

இரவுவேளை என்பதால் தங்க நகைகளை அணிந்து செல்வதற்கு தயக்கமாக இருந்தது. அதனால் தங்க நகைகளை வீட்டில் பத்திரமாக வைத்துவிட்டு சென்றிருந்தோம்.

பின்பு இரவு 8.30 மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டோம். வீட்டிற்கு வந்தபோது வீட்டின் முன்பக்க வாயில் உடைக்கப்பட்டிருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தேன்.

7 மணிக்கு வீட்டை விட்டு வெளியேறி 8.30 மணிக்கு வந்து விட்டோம். ஒன்றரை மணித்தியால இடைவெளியில் எனது வீட்டிற்குள் திருடர்கள் உள்நுழைந்து கொள்ளையடித்துள்ளனர்.

வீட்டினுள் பூட்டி வைக்கப்பட்டிருந்த 2 அலுமாரிகள் உடைக்கப்பட்டு தங்கநகைகளைத் திருடியதோடு உடுப்புக்களையும் சிதறிவிட்டுச் சென்றுள்ளனர்.

எனது மனைவியின் 11 பவுண் தாலிக் கொடி, 4 சோடி காப்பு (8 பவுண்), ஒன்றரைப் பவுண் சங்கிலி, அரைப் பவுண் தோடு, ஒரு பவுண் தங்கக் காசு, 200 அமெரிக்க டொலர் 60 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம், லப்டொப் வகைக் கணனி என்பன திருடப்பட்டுள்ளன.

அத்தோடு குளிர்சாதனப் பெட்டிக்குள் இருந்த குளிர்களியையும் எடுத்துக் குடித்ததோடு அதற்குள் தங்க நகைகளை மறைத்து வைத்திருக்கக் கூடுமெனவும் தேடுதல் போட்டுள்ளனர் என்பதை குளிர்களிகள் சிந்தப்பட்டிருப்பதன் மூலம் அறிய முடிகின்றது.

இது தவிர வீட்டின் சமையலறைக்குள் இருந்த பாத்திரங்களையும் சமையலுக்கு பயன்படும் உலர் உணவுப் பொருட்களையும் ஆராய்ந்துள்ளனர். அத்தோடு வீட்டில் இருந்த கத்தி, கோடரி போன்ற ஆயுதங்களையும் தமது பாதுகாப்புக்காக எடுத்து வைத்திருக்கின்றனர் என்பது அவை போடப்பட்டிருந்த இடத்தின் ஊடாக அறிய முடிகின்றது என வீட்டின் உரிமையாளரான க.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தெரியப் படுத்தியதோடு முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவும் நேற்றுக் காலையும் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

திருடர்களின் கைரேகை பதியப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்ட சில பொருட்களையும் பொலிஸார் தடயப்பொருளாக எடுத்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறு குடாநாட்டில் திருட்டுச் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது குறிப்பிடத்தக்கது. (எ-4,6)

## பாம்பு கடித்து பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்தபோது நாக பாம்பு தீண்டி குடும்பப் பெண்ணொருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்பாம்பு தீண்டிய சம்பவம் நேற்று மாலை 4.00 மணியளவில் இணுவிலில் இடம்பெற்றுள்ளது. அதேயிடத்தைச் சேர்ந்த சிவஞானம் றஜனி (வயது 34) என்ற குடும்பப் பெண்ணே பாம்புக்கடிக்கு இலக்கானவரா வார்.

தோட்டத்தில் வேலை செய்து கொண்டு இருந்தபோது அருகிலிருந்த கல்லினுள் இருந்து வெளிக்கிளம்பிய நாக பாம்பே அவரைத் தீண்டியது.

இதேவேளை தற்போது பாம்புக் கடிச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுவதாகவும் இது விடயங்களில் வயல்களில்; காணிகளில் வேலை செய் வோர் அவதானத்துடன் வேலை செய்யுமாறு வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பாம்புக் கடிக்கு இலக்கானவரை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதுடன். தீண்டிய பாம்பினையும் முடிந்தால் அடையாளம்காணுமாறும்யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர் தெரிவித்துள்ளார்.(எ-4)

## மஹோற்சவம்

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்மனின் வருடாந்த மஹோற்சவம் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி சனிக் கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. மஹோற்சவத்தின் ஒவ்வொரு நாளும் அன்னதானம் வழங்கப்படும். (எ-11)


YAALH ENGLISH ACADEMY
(077 3212 711)
வழங்கும் இன்றைய தேவை
BASIC + INTERMEDIATE + ADVANCED
PRACTICAL ENGLISH COURSES
FOR ADULTS + SCHOOL STUDENTS
கற்க. கற்பவை கற்க. கற்பவை, கசடறக் கற்க.
True ease in Language Use
comes from proper practice,
not chance
As they walk with grace,
who've learned to dance !
(8213)
வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி : யாழ்நகர்



Personal Classes
English Spoken with
Grammar & School book
உங்கள் வீடுகளிற்கு வந்து
சரளமாக பேச வைப்பதற்கு
கற்பிக்கப்படும்.
Contact: 0776393868
By: M. Nelson
(C-6436)


## கொள்கலன் வாகனம் மோதி 11 எருமைகள் பலி

(கொழும்பு)

பங்கதெனிய தெமட்டபிட்டிய சந்தியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை வேகமாகச் சென்ற கொள்கலன் ட்ரக்கொன்று மோதியதன் காரணமாக 11 எருமை மாடுகள் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இரு எருமை மாடுகளின் கால்கள் முறிவடைந்து படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

சிலாபத்திலுள்ள ராஜகடலுவ பலுகஸ்வெவ தோட்டத்திலுள்ள எருமை மாடுகள் நெரிபட்டு வீதிக்கு வந்தபோது இச்சம்பவம் இடம் பெற்றது. எருமை மாடுகளின் சடலங்கள் உடனடியாகவே அகற்றப்பட்டதாகவும் தோட்ட முகாமையாளர் கூறினார்.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.(எ-11)

## சிகிச்சைக்கு சென்ற கைதி தப்பியோட்டம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

யாழ்ப்பாண சிறைச்சாலையில் இருந்து தலையில் ஏற்பட்ட காயத்துக்காக 24 ஆம் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இவர் நேற்று மாலை 4 மணியளவில் தப்பிச் சென்றுள்ளார்.

என்.நிதர்சன் (வயது-21) என்ற கைதியே தப்பிச் சென்றவராவார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)


1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பொன்னன் சின்னத்துரை



ஆண்டு ஒன்று ஆனதாயினும்
ஆறவில்லை எம் துயரம்
என்றும் கலங்கரை விளக்காய்
நின்று கனிவோடு வழிகாட்டினீர்கள்
நாங்கள் எண்ணிய எண்ணமெலாம்
இனிதே நிறைவேற திண்ணிய மனதுடன்
தொடர்ந்து என்றும் உழைத்தீர்கள்
எங்கள் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும்
அரும்பாடுபட்டு எங்களுடன் வாழ்ந்த
பசுமையான இனிய நினைவுகளுடன்
மனதை தேற்றிக் கொள்கின்றோம்.

– குடும்பத்தினர்

மலர்வு 14 . 07 . 1924
உதிர்வு 07 . 05 . 2011
திதி : 25. 04. 2012

நவரட்ணராஜா வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(C-6439)





# புகைப்படக் கண்காட்சியும் போட்டியும்

'நல்லிணக்கமும் சமாதானமும்' என்னும் தொனிப் பொருளில் பாடசாலை மாணவர்கள் தனியாகவும், ஏனையோருக்கும் இரு வகையில் போட்டி நடத்தப்படவுள்ளது.

புகைப்படங்கள் 2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

புகைப்படத்தின் Soft Copy (CD/Flash) சமர்ப்பிக்கப்படவேண்டும். ஒருவர் ஆகக் கூடியது 5 புகைப்படங்கள் வரையிலும் அனுப்ப முடியும்.

29.04.2012ஆம் திகதிக்கு முன்னர் புகைப்படங்களின் Soft Copy (CD/Flash) யாவும் 'இல.347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும். மின் அஞ்சல் ஊடாக அனுப்ப விரும்புவர்கள், comvofm2011@gmail.com என்னும் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்.



தொனிப்பொருளுக்கு அமைவாக எடுக்கப்படும் செய்திப்படங்களில் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படுபவை கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் என்பதுடன் போட்டியின் இரு பிரிவுகளிலும்

முதலிடத்துக்கு 10,000/=,
இரண்டாம் இடத்துக்கு 7,000/=,
மூன்றாம் இடத்துக்கு 5,000/=
அத்துடன் 10 புகைப்படங்களுக்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படும்.

சுதந்திர ஊடகக் குரல்
இல.347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

விளம்பர அனுசரணை:
நல்லூர்
சரவணா ரெக்ஸ்

# இன்று ஒரு தகவல்

## அறியாமை சுகம்

இந்த உலகத்தில் உண்மையாகவே வேதாந்தம் பேசுபவர்களும் உண்டு. உள்ளுக்குள் ஒன்றை நினைத்துக்கொண்டு வெளியில் வேதாந்தம் பேசுபவர்களும் உண்டு.

ஒரு ஆள் இருந்தார். அவர் ஒரு கடை வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார். மகா கஞ்சன். யாருக்கும் எந்த உதவியும் செய்யமாட்டார்.

எச்சில் கை என்ன... ஈரக்கையைக் கூட உதறமாட்டார். அப்படிப்பட்ட மனிதர். அந்த ஊருக்கு ஒரு முனிவர் ஒரு வருடத்திற்கு ஒரு தடவை வருவார். ஒரு நாள் அல்லது இரண்டு நாள் தங்கிவிட்டு அதன்பின் போய் விடுவார்.

அந்த முனிவர் வரும்போதெல்லாம் இந்த ஆள் எழுந்து ஓடிப்போய் வரவேற்பான். தான் பெரிய வேதாந்தி மாதிரி அவரிடம் பேசிக்கொண்டிருப்பான்.

"காயமே இது பொய் வெறும் காற்றடைத்த பை" என்பான். "தர்மம் தலை காக்கும்" என்பான்.

"பணம் என்ன பணம்? இன்றைக்கு ஒருவனுடைய கையில் இருக்கும். நாளைக்கு இன்னொருத்தன் கையில் இருக்கும். எல்லாம் மாயம். எனக்குத்தான் இந்த சம்சார பந்தத்திலிருந்து விடுபடுவதற்கு நேரம் வரவில்லை" என்பான்.

அந்த முனிவரும் இந்த ஆள் இப்படிச் சொல்வதைக் கேட்டவுடன், "ஏன்னப்பா அப்பீடிச் சொல்கிறாய்? இப்பொழுது கூட சரி என்று சொல் உனக்கு தீட்சை கொடுத்து இதிலிருந்து விடுபடுவதற்கு ஞானத்தைப் போதிக்கிறேன்" என்றார்.

உடனே அந்த ஆள் என்ன சொல்வான் தெரியுமா?

"ஐயோ சா்மி... இப்பொழுது அது எப்படி முடியும். பிள்ளைகளெல்லாம் சின்னஞ்சிறுசுகள். அதுகளுக்கெல்லாம் கலியாணம், காட்சி என்று செய்து கடமையை முடித்து விட்டால் நீங்கள் சொல்வதுபோல் செய்து விடலாம்" என்பான்.

முனிவரும் சரியென்று போய்விடுவார். அடுத்த வருடம் வருவார். இவன் வழக்கம் போல் வேதாந்தம் பேசுவான்.

"சரி தீட்சை கொடுக்கிறேன் வா" என்று கேட்டால் பேரன், பேர்த்தியைப் பார்க்க வேண்டும். நீதிமன்ற வழக்கொன்று இருக்கிறது. அது முடிய வேண்டும்" என்று தயங்க ஆரம்பித்து விடுவான்.

எல்லாம் சொல்வான். ஆனால், குடிப்பதற்கு தண்ணீர் கூட தரமாட்டான்.

பல வருடங்கள் கழித்து மறுபடியும் ஒரு நாள் அந்த ஊருக்கு முனிவர் வந்தார். இவனுடைய கடைக்கும் வந்தார். அங்கே கல்லாவில் நம்ம ஆள் இல்லை. அவனுடைய பிள்ளைதான் உட்கார்ந்திருந்தான். அப்பாவைப் போல பிள்ளையும் எழுந்து ஓடி வந்து முனிவரை வரவேற்றான்.

"அப்பா எங்கே?" என்று கேட்டார் முனிவர்.

"ஐயோ அதை ஏன் கேட்கிறீங்கள் சாமி? உங்களிடம் தீட்சை வாங்கி இந்த சம்சார பந்தத்திலிருந்து விடுபட வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பார். அது நிறைவேறாமலே போய்ச்சேர்ந்து விட்டார். போன மாதம் ஒரு நாள் திடீரென நெஞ்சுவலி வந்து இறந்து விட்டார்" என்று புலம்பினான் பையன். இதை கேட்டதும் முனிவர் சிரித்தார்.

"அவன் எங்கேடா போவான்? உன் அப்பன் எங்கேயும் போகவில்லை. இதோ வாலை ஆட்டிக் கொண்டு உன் காலடியில் இருக்கிறான் பார்" அங்கே நின்று கொண்டிருந்த ஒரு நாயை சுட்டிக்காட்டினார்.

"என்ன சாமி சொல்கிறீங்கள்?" என்று ஆச்சரியமாகக் கேட்டான் பையன்.

உடனே முனிவர் அந்த நாயின் தலையில் தட்டி "பேசடா" என்றார். உடனே அந்த நாய் வேதாந்தம் பேச ஆரம்பித்தது. "காயமே இது பொய் வெறும் காற்றடைத்த பை" என்றது. முனிவர் சொன்னார் "ஆடேய்! இப்ப ஒன்றும் கெட்டுப்போகவில்லை. நீ விரும்பினால் சொல் உனக்குத் தீட்சை கொடுத்து என்னோடு அழைத்துப்போய் உனக்கு ஞானத்தைப் போதிக்கிறேன் வருகிறாயா?" என்றார்.

உடனே அந்த நாய் சொல்லியது "ஐயோ அதை ஏன் கேட்கிறீர்கள் சாமி? நான் ஏராளமான சொத்து சேர்த்து வைத்துவிட்டேன். என் பிள்ளைகள் அதன் பெருமை தெரியாமல் இரவில் கதவைத்திறந்து விட்டு தூங்கி விடுவார்கள். அதனால் இப்படி நாயாகப் பிறந்து இரவு பகலாக சுற்றிச்சுற்றி வந்து காவல் காத்துக்கொண்டிருக்கிறேன். இப்ப எப்படி சாமி வரமுடியும்?" என்று கேட்டதாம்.

அறியாமையிலே சுகம் கண்டு இப்படியிருக்கும் ஆட்களுக்கு எப்ப விடுதலை கிடைக்கும் என்று கேட்கிறார் தசாவதானி திருக்குறள் பெ.இராமையா?

அவர் கேட்பதும் நியாயம்தானே இந்த காலப் பையன் ஒருத்தன் அப்பாவிடம் சொன்னான்: "அப்பா... இன்றைக்கு நான் ஒரு ரூபாய் மிச்சப்படுத்தினேன்" என்றான். "அப்படியா! என்ன செய்தாய்?" என்று கேட்டார் அப்பா.

"பஸ்ஸில் ஏறாமல் அதன் பின்னாலே ஓடி வந்தேன். ஒரு ரூபாய் மிச்சம்" என்றான் பையன்.

"அட பாவி! ஒரு ஆட்டோக்குப் பின்னால் ஓடி வந்திருந்தால் பத்து ரூபாய் மிச்சம் ஆகி இருக்குமே வீணாக்கி விட்டாயே" என்றானாம் அவனுடைய அப்பன் காரன்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# பயனாளிகள் எட்டுப்பேருக்கு தூவல் நீர்ப்பாசன கருவிகள்

(மல்லாவி)

முல்லை. மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள 8 பயனாளிகளுக்கு 12 இலட்சம் ரூபா பெறுமதியான தூவல் நீர்ப்பாசன கருவிகளின் தொகுதிகள் வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக முல்லை. மாவட்ட கமநல சேவை ஆணையாளரிடம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கையளிக்கப்பட்டுள்ளதாக முல்லை. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பணிப்பாளர் பி.ஆர். என். குலாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் கந்த காலங்களில் உரிய பயனாளிகள் விபரம் திரட்டப்பட்டிருந்த நிலையில் 12 இலட்சம் ரூபா பெறுமதியான 8 தூவல் நீர்ப்பாசன தொகுதிகள் கமநல சேவை ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தூவல் நீர்ப்பாசன தொகுதியின் பெறுமதியில் ஒரு பகுதி மானிய அடிப்படையிலும் மிகுதித் தொகை மாதாந்தம் பயனாளிகளிடம் இருந்தும் அறவிடப் படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-15)

# தென்னங்கன்றுகள் நாட்டும் திட்டம்

(மல்லாவி)

இலங்கை தெங்கு அபிவிருத்தி அமைச்சினால் இவ்வாண்டு 3 இலட்சம் தென்னங்கன்றுகளை நாட்டும் திட்டத்தின் கீழ் நாட்டில் உள்ள தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவர்களின் மூலமே இச் செயற்றிட்டத்தை செயற்படுத்தவுள்ளனர்.

எனவே, துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவர்களில் தமது வீட்டுத் தோட்டத்தில் தென்னங்கன்றுகளை நடுகை செய்யக் கூடிய இடவசதி உள்ள மாணவர்களின் விபரங்களினை பாடசாலை அதிபர்கள் பாடசாலைக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றுநிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து இன்று புதன்கிழமை மாணவர் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர், துணுக்காய் கல்வி வலய அலுவலகம், துணுக்காய் கல்வி வலயம் என்ற முகவரிக்கு உடன் அனுப்பி வைக்குமாறு துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவர்களில் விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு தலா இரண்டு நல் இன தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளதால் பாடசாலை அதிபர்கள் இதனைக் கருத்திற் கொண்டு உடன் செயற்படுமாறு அவர் அறிவித்துள்ளார். (அ-3-15)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 30 |
| உருளைக்கிழங்கு | 85 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 35 | 30 | 40 |
| தக்காளி | 70 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 10-15 | 10 | 30 |
| கரட் | 30 | 40 | 60 |
| பூசணி | 20 | 20 | 30 |
| புடோல் | 35 | 40 | 40 |
| வாழைக்காய் | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 40-70 | 40-90 | 50-80 |
| பெரிய வெங்காயம் | 85 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 70 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 80 |
| பயற்றங்காய் | 70 | 80 | 40 |
| லீக்ஸ் | 70 | 90 | 90 |
| பீற்றூட் | 20 | 50 | 60 |
| கறிமிளகாய் | -- | 40 | 40 |
| முருங்கைக்காய் | 300-320 | 350 | 280 |
| போஞ்சி | -- | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | -- | 30 | -- |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 40-50 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 20 | 25 |

# இராசி பலன்

25.04.2012
(சித்திரை 13, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 8.44 மணிவரை
ரோகினி காலை 8.07 மணிவரை
இராகுகாலம் 11.59-1.29 மணிவரை
சுபநேரம் 4.29-5.29 மணிவரை
சதுர்த்தி விரதம்.

**மேடம்** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், வாக்கு மேன்மையால் பிறரைக் கவர்வீர்கள், குடும்பத் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** ஆன்மீக நாட்டம் மேலோங்கும், பெரிய மனிதர்களின் வருகையால் உங்கள் தகுதி உயர்வடையும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், வேலைச்சுமை கூடும், சயன சுகக்குறைவான நாள், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும்.

**கடகம்** எடுத்த காரியங்களில் முத்தான வெற்றி கிடைக்கும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், வருமானங்கள் திருப்தி தரும், போசன சுகமுண்டு.

**சிங்கம்** பெரியவர்களின் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், மனதில் உற்சாகமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொழிலில் அதிகாரிகளை அனுசரித்து செல்ல வேண்டிய நாள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, கட்டுப்பாடான நாள்.

**துலாம்** எடுத்த காரியங்களில் தடை, தாமதங்கள் ஏற்படலாம், குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையலாம், மனதில் உற்சாகம் குறையும்.

**விருச்சிகம்** குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும், கௌரவமான நாள், எடுத்த காரியங்களில் எளிதான வெற்றி கிடைக்கும், செய்தொழிலில் மேன்மையுண்டு.

**தனுசு** பகைவரால் நன்மையுண்டு, தொழில் நன்மைக்காக அதிகம் பாடுபடுவீர்கள், உங்கள் செயற்பாடுகளுக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.


**மகரம்** புத்திரர்களின் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், வியாபார விருத்தியுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**கும்பம்** தொழில் நன்மையுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும், உறவினர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வாகன சுகத்தால் வளம் காணும் நாள்.

**மீனம்** எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

வளவன்



யாழ். மாவட்ட பாதுகாப்பு படைப்பிரிவின் ஒத்துழைப்புடன் கட்டுவன் ஏழாலையில் வசிக்கும் 20 வயதுடைய கிருஸ்ணகுமார் கஜேந்தினி என்ற பெண்ணுக்கு ஏற்பட்ட இருதய நோய்க்கு சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டு பூரண குணமடைந்த நிலையில் அவரது இருதய நோயைக் குணப்படுத்த உதவியவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு நேற்று யாழ். பாதுகாப்பு படைப்பிரிவின் பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வில் வரவேற்பு நடனம் இடம்பெறுவதையும் யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

## சங்கு பிடித்தவருக்கு 3500ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

அனுமதியின்றி சங்கு பிடித்த குற்றச்சாட்டில் கடற்படையினரால் கைது செய்த நபருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் 3 ஆயிரத்து 500 ரூபா அபராதமாக விதித்துள்ளது.

அனலைதீவு கடற்பரப்பில் அதேயிடத்தினை சேர்ந்த தொழிலாளி அனுமதியின்றி சங்கு பிடித்தார் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதவான் மகேந்திரராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கினை விசாரணை செய்த நீதவான் குறித்த நபருக்கு ரூபா 3 ஆயிரத்து 500 அபராதமாக விதித்து தீர்ப்பளித்தார். (அ-4)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசார திணைக்களத்தினால் கலைத்துறையில் உன்னத பங்களிப்பு செய்துள்ள ஆனாலும் இதுவரையில் கௌரவிக்கப்படாத கலைஞர்களை தெரிவு செய்து கலாபூஷண விருது வழங்கி கௌரவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 60 வயதினை பூர்த்தி செய்த கலைஞர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் விண்ணப்படிவங்களை பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு சண்டிலிப்பாய்பிரதேசசெயலாளர் அறிவித்துள்ளார். (அ)

## சிறையிலும் மோதல்;இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் இரு கைதிகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்றுக்காலை 8.00 மணியளவில் யாழ். சிறைச்சாலையில் நடைபெற்றுள்ளது.

குறித்த இருவரும் ஏற்கனவே குற்றம் ஒன்றிற்காக யாழ். நீதவானின் உத்தரவிற்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கொட்டடியினைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் தலையில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணை மேற்கொண்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக தெரிவித்தனர். (அ-4)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சரவணை- பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி ஆலய அறங்காவலர் சபையின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரியும் அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக ப. தேவநாதன், செயலாளராக த. அருணகிரிநாதன், பொருளாளராக ப. ஞானபண்டிதன், உபதலைவராக சொ. சிவயோகலிங்கம், உபசெயலாளராக சு. மகேந்திரன், காப்பாளராக நா. மகாலிங்கம், கணக்காய்வாளராக திருமதி கலைச்செல்வி ரமணன் ஆகியோரும் தெரிவாகினர். அத்துடன் பத்து செயற்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக செயலாளர் அறிவித்துள்ளார். (அ-9)

## தேசிய மட்ட புதுவருட விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய-இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண தேசிய இளைஞர் விவகார அமைச்சின் தேசிய மட்ட தமிழ்-சிங்கள புதுவருட விளையாட்டு விழா யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் முதன் முறையாக நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி லலித் பியூம் பெரேராவின் தலைமையில், நாளை வியாழக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும கலந்து கொள்வார் என யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப்பணிப்பாளர் ரி.ஈஸ்வரராஜா அறிவித்துள்ளார். (அ-9)

## சிறுவர்களுக்கான நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

முன்பள்ளி பிள்ளைகளின் வாசிப்புத்திறன் மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையில் தொண்டைமானாறு வளர்மதி முன்பள்ளிச் சிறுவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்குமான ஆக்கத்திறன் முகாம் இன்று புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு வல்வெட்டித்துறை வளர்மதி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் குழந்தைகளுக்கான கதை கூறும் நிகழ்வு, ஓவியம் வரைதல், பொருட்கூட்டங்களை இணைத்தல், சொற்களை ஒன்று சேர்த்தல், கணித எண்ணக்கரு, விஞ்ஞான எண்ணக்கரு, எழுத்துக்களை இனங்காணல், பெரிய அழகிய புத்தகங்களை பார்வையிடுதல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறவுள்ளதாகவும் சகல பெற்றோர்களையும் சமூகமளிக்குமாறு வல்வெட்டித்துறை நகர பிதா.ந. அனந்தராஜ் கேட்டுள்ளார். (அ)




## கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

மீசாலை வடக்கு தட்டான் குளம் திருநீலகண்ட பிள்ளையார் ஆலய நவகுண்ட மகா கும்பாபிஷேக பெருவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 9.50 மணி வரையுள்ள சுப நேரத்தில் தேவ சிவாகம வித்வத் ஜோதி பிரம்மஸ்ரீ பா. முரளிதரக் குருக்களால் நடத்தப்படவுள்ளது. (அ-3-29)

## நாகர் கோவில் பகுதிக்கு வருகிறது பேருந்து சேவை

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதிக்கு விரைவில் போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இப்பகுதியில் அண்மையில் மக்கள் மீள்குடியேறியதை அடுத்து அம்மக்களின் நலன் கருதி இப்போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

மற்றும் யுத்தத்தினால் அங்கிருந்து இடம்பெயர்ந்த நாகர் கோவில் மகா வித்தியாலயமும் மீள அப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (அ-3-10)

## இணுவில் திருநெறிய தமிழ்மறை கழகத்தின் பண்ணிசைப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் ஆலய திருநெறிய தமிழ் மறைக்கழகத்தின் இவ்வாண்டு மஹோற்வசத்தை முன்னிட்டான பண்ணிசைப்போட்டி எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் கோவில் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் கீழ்ப்பிரிவு (தரம்4,5,6), மத்திய பிரிவு (தரம் 7,8,9), மேற்பிரிவு (தரம்10,11,12) ஆகிய மூன்று பிரிவுகளிற்குமே நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்ப படிவங்களை மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் இணுவில் தெற்கு திருநெறிய தமிழ் மறைக் கழக அமைப்பாளர் திருமதி வை. கணேசபிள்ளை அல்லது இணுவில் தெற்கு ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் ஆலய மணி மண்டபம் அல்லது இணுவில் பொதுநூலக சனசமூக நிலையம் என்ற முகவரியில் ஒப்படைக்குமாறும் திருநெறிய தமிழ் மறைக் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9)

## இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யா/சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியின் சித்திரக்கலை 10 ஆம் தர, 11 ஆம் தர உயர்தர பாடத்திட்டத்திற்கமைவான ஒலி ஒளி தொகுப்பு இறுவெட்டு வெளியீடு இன்று புதன்கிழமை தி. திலக்ஷன் தலைமையில் பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி சிவபாதசுந்தரம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சிரேஷ்ட எந்திரி வி. உமாபதி, சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், நுண்கலைப்பீட விரிவுரையாளர் வை. சிவசுப்பிரமணியம் (ரமணி) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த இறுவெட்டுக்களை கல்லூரி முதல்வர் மன்ற போசகர் வ.ஸ்ரீகாந்தன், வலிகாமம் கல்வி வலய சித்திர பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி ம. இளமுருகன், இணுவில் மத்திய கல்லூரி ஆசிரியர் செல்வி சி. யோகேஸ்வரி ஆகியோர் வெளியீட்டு வைக்க திருமதி திலகவதி குலரட்ணராஜா, திருமதி குணராணி ஞானேஸ்வரி, திருமதி திருவரங்கன் சற்குணவதி ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இதில் ஆசியுரையினை கல்லூரி முதல்வர் வ.ஸ்ரீகாந்தன், ஆய்வுரையினை குடியப்புலம் அ.த.க. பாடசாலை ஆசிரியர் திருமதி சுதர்சினி விக்னமோகன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (அ-9)

# 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து நான் எதுவுமே பேசவில்லை

## சுஷ்மாவுக்கு டிமிக்கி கொடுத்த மஹிந்த

(கொழும்பு)

**இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜுக்கு 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தையோ அதற்கு அப்பாற்பட்ட விடயங்களையோ நடைமுறைப்படுத்துவதாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எந்த வாக்குறுதியையும் கொடுக்கவில்லை என்று இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது.**

12 பேர் கொண்ட இந்திய நாடாளுமன்றக் குழுவுக்குத் தலைமை தாங்கி இலங்கை வந்த சுஷ்மா சுவராஜ் இந்தப் பயணத்தின் முடிவில் கடந்த சனிக்கிழமை கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்திருந்தார்.

அப்போது 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தனக்கிருப்பதாக இலங்கை ஜனாதிபதி உறுதியளித்ததாக அவர் கூறியிருந்தார்.

ஆனால், இலங்கை ஜனாதிபதி அவ்வாறான எந்த வாக்குறுதியும் சுஷ்மா சுவராஜுக்கு கொடுக்கவில்லை என்று இலங்கை அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வெள்ளி, சனி ஆகிய நாட்களில் இருமுறை இலங்கை ஜனாதிபதியை சுஷ்மா சுவராஜ் சந்தித்திருந்த போதும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறான வாக்குறுதி கொடுக்கப்படவும் இல்லை கோரப்படவும் இல்லை என்று இலங்கை அரசு வட்டாரங்கள் கூறியுள்ளன.

முன்னதாக கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தமக்கு இலங்கை ஜனாதிபதி 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட அரசியல்தீர்வை நடைமுறைப்படுத் துவதாக வாக்குறுதி கொடுத்திருப்பதாக கூறியிருந்தார்.

ஆனால் பின்னர் அவ்வாறான வாக்குறுதி கொடுக்கப்படவில்லை என்று இலங்கை அரசாங்கம் கைவிரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## நிர்வாகிகள் தெரிவு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் வருடாந்த பொதுசபைக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 22 ஆம் திகதி யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் இடம் பெற்றது.

இதில் தலைவராக நா.நாகேஸ்வரன், செயலாளராக வவா, உபதலைவராக எஸ். சிவசாமி, பொருளாளராக க.நடராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் ந.குகானந்தன், சி.ஸ்ரீஸ் கந்தராசா, கி.மனோரஞ்சன், ஸ்ரீமோகன் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-64)

# தம்புள்ள பள்ளிவாசலினை வேறொரு இடத்தில் நிர்மாணிக்க இணக்கம்

## பிரதமர் ஜெயரட்ன கூறுகிறார்

வரலாற்றுப் புகழ்மிக்க ரங்கிரி தம்புள்ள புனித பூமி பிரதேசத்தில் தற்போது ஏற்பட்டிருக்கும் சமய புனிதஸ்தலம் தொடர்பான பிரச்சினை தொடர்பில் உயிரைப் பணயம் வைத்தாவது பௌத்த தர்மத்தைப் பாதுகாப்பதற்கு எமது அரசாங்கம் எப்போதும் கடமைப்பட்டுள்ளது என பிரதமர் தி.மு.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இன மற்றும் மத ரீதியான பிரச்சினைகள் எழும்போது சிறு சிறு கருத்து வேறுபாடுகளை பூதாகரமாக மாற்றுவதற்கு இடமளிக்கக் கூடாது எனவும் அவ்வாறான பிரச்சினைகளின் போது சகல தரப்பினர்களினதும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தீர்வொன்றுக்குச் செல்ல வேண்டும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கலகெதர பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தம்புள்ளை புதின பூமிப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகக் கூறப்படும் முஸ்லிம் பள்ளிவாசல் தொடர்பாக நான் விசாரித்துப் பார்த்தேன். தம்புள்ளை பிரதேசத்திற்கு வரும் முஸ்லிம் வியாபாரிகள் தமது சமயக் கிரியைகளை மேற்கொள்வதற்காக கட்டப்பட்ட பள்ளிவாசலான இது சுமார் அறுபது வருடங்களுக்கு மேலான வரலாற்றைக் கொண்டதாகும்.

பௌத்த சாசனத்தைப் பாதுகாத்துப் போஷிப்பதாக அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. உயிரைப் பணயம் வைத்தாவது பௌத்த தர்மத்தைப் பாதுகாப்பதற்கு எமது அரசாங்கம் எப்போதும் கடமைப்பட்டுள்ளது. ஆனாலும் ஏனைய மதங்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்துவதற்கு அகௌரவப்படுத்துவதற்கு எமக்கு எந்த உரிமையும் இல்லை.

நாம் இன, மத மற்றும் கலாசார ரீதியாக வேறுபட்டிருந்தாலும் ஒருவரையொருவர் மதிக்க வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது. எப்படியிருப்பினும் தம்புள்ளை புனித பூமிப் பிரதேசத்தில் அமைந்தள்ள முஸ்லிம் பள்ளிவாசலினை வேறோர் இடத்தில் நிர்மாணிப்பதற்கு தற்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனம் மதங்களுக்கிடையில் ஒற்றுமையையும் சமத்துவத்தையும் உறுதி செய்வதற்கும் நாம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். (அ-2)

## புத்தாண்டு நிகழ்வுகள்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை பிரதேச செயலகமும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையமும் மீண்டும் இணைந்து நடாத்தும் தமிழ் சிங்கள புத்தாண்டு நிகழ்வுகள் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுக்களும் கலை நிகழ்வுகளும் தமிழ் சிங்கள கலைஞர்களின் ஒரே மேடையிலான இசைச் சங்கமும் நடைபெறவுள்ளன. (அ-9)

## மழைக் காலநிலை நீடிக்கும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

தற்போதைய மழைக்கால நிலையை அடுத்து வரும் இரண்டொரு தினங்களுக்கு நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.ஏ.ஆர். ஜயசேகர தெரிவித்துள்ளார்.

வடபகுதியிலிருந்து தென்பகுதிக்கு வீசும் காற்றும் தென்பகுதியிலிருந்து வடபகுதிக்கு வீசும் காற்றும் சந்திக்கும் வலயம் கிழக்குப் பகுதியில் காணப்படுவதால் இக்காலநிலை அடுத்துவரும் இரண்டொரு தினங்களுக்கு நீடிக்கும் எனவும் அவர் கூறினார்.

வளிமண்டலத்தில் ஏற்பட்டிருக்கும் இக்குழப்ப நிலை காரணமாக நாடெங்கிலும் மழை பெய்யும். இது பிரதேசத்திற்கு பிரதேசம் கூடிக்குறைய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழை காரணமாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐந்து குளங்களும் பதுளை மாவட்டத்தில் மூன்று குளங்களும் குருநாகல் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் இரு குளங்களுமாக மொத்தம் பத்து குளங்கள் நிரம்பி வழிவதாக நீர்ப்பாசன திணைக்கள அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

இதேவேளை, வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜயசேகர மேலும் கூறுகையில், மழைவீழ்ச்சி பதிவுப்படி ஆகக் குடிய மழை 76.8 மில்லி மீற்றர்கள் பெய்துள்ளது என்றார். (அ-2)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### OBTAINING LEGAL CONSULTATION SERVICES

Applications are invited by me up to 11.05.2012 from qualified Attorney-at-Laws with not less than three years experience in court work, Legal work relating to corporations/ companies and drafting legal documents.

The following tasks are expected to be carried out under this:

1. Drafting legal documents
2. Execution of Bond Agreement
3. Legal advice regarding cases filed against the University
4. Documentation of Legal matters.

Those who are willing to apply can send their Bio- Data with two recent testimonials from non related referees for registering with University. Rates of payments and other modalities are negotiable. Further details on terms of references etc., will be notified later.

**REGISTRAR**
**University of Jaffna,**
**23.04.2012**

(சி/6438)

# ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குறித்து பங்காளிக்கட்சிகளுடன் ஆலோசனை

(கொழும்பு)

**உண்மையை கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் மீண்டும் சந்தித்து விவாதிக்கவுள்ளன.**

எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள இச்சந்திப்பில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் கையளிக்கும் அறிக்கைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள், தலைவர்கள் கலந்து கொள்ளும் இந்தக் கூட்டத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் எந்தெந்த பரிந்துரைகளை நிறைவேற்றுவது என்பது குறித்தும் விரிவாக ஆராயப்படும் எனத் தெரிய வருகிறது.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் செயற்றிட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

இதன் முதற்கட்டமாக வெளிவிவகார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளின் உதவியுடன் இத்தகைய திட்டம் ஒன்றுக்கான ஆரம்ப வரைவு ஒன்றை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தயாரித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனை வோஷிங்டனில் அடுத்த மாதம் 18 ஆம் திகதி சந்திக்கும் போது இது தொடர்பில் பீரிஸ் எடுத்துக்கூறவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனூடாக ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கடந்த கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசாங்கம் நிறைவேற்ற முயல்கிறது என்பதனை கிளின்டனுக்கு கூறி அமெரிக்காவை திருப்திப்படுத்துவதற்கு பீரிஸ் முனைவார் எனத் தெரிகிறது.

அதேவேளை, ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத் துவது தொடர்பில் விரிவான செயற்றிட்டத்தை மட்டுமல்ல மனிதவுரிமைகள் மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறப்பட வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ந-8-11)

## தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம்

# ரஜமஹா விகாரை புனித பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய 6 மாத காலக்கெடு!

(கொழும்பு)

தம்புள்ள நகரில் உள்ள ரஜமஹா விகாரையின் புனிதப் பிரதேசம் என்று பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தை எதிர்வரும் 6 மாதங்களுக்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டுமென்று தம்புள்ளயில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புத்த சாசன அமைச்சின் ஏற்பாட்டில் அமைச்சின் செயலாளர், மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் மற்றும் தம்புள்ள ரஜமஹா விகாரையின் தலைமை மதகுரு இனாமலுவே சுமங்கள தேரர் ஆகியோர் கலந்துகொண்ட இந்த கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வரும் 6 மாதங்களுக்குள் சகல சட்டவிரோதமான கட்டடங்களும் அகற்றப்படும் என்று தீர்மானிக்கப்பட்டதாக இனாமலுவே சுமங்கள தேரர் கூறியுள்ளார்.

1982 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்ட புனிதப் பிரதேசத்தின் திட்டவரைபடத்தில் முஸ்லிம் பள்ளிவாசலோ இந்துக்கோவிலோ இருக்கவில்லை என்று கூறிய சுமங்களதேரர் அந்த வழிபாட்டுத் தலங்களும் அகற்றப்படும்.

அதே வேளை, கடந்த 20 ஆம் திகதி தான் தலைமை தாங்கி நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின் போது வன்முறைத் தனமாக நடந்து கொண்டதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தவறானவை என்றும் அவர் கூறினார்.

ஊடகங்களே போலியான வீடியோ காட்சிகள் மூலம் திரிபுபடுத்தப்பட்ட செய்திகளை வெளியிட்டதாகவும் சுமங்களதேரர் குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, தம்புள்ள ரன்கிரி பிரதேசத்தில் சர்ச்சைக்குட்படுத்தப்பட்டுள்ள ஹைரியா ஜும்ஆ பள்ளிவாசலை சூழ பாதுகாப்பு நிமித்தம் விசேட அதிரடிப் படைகளினால் பாதுகாப்பு கம்பி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ், இராணுவம், விசேட அதிரடிப் படையினர் என குவிக்கப்பட்டுள்ளதாக நம் பகத்தகுந்த தகவல்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, நேற்று முன்தினம் தம்புள்ள நகரில் உள்ள முஸ்லிம் வர்த்தக நிலையங்களில் சிங்களவர்கள் எவரும் பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடாது என்று பௌத்த விகாரையின் பிரதம சங்க நாயக்கர் மூலம் சகல சிங்கள கிராமங்களுக்கும் தகவல் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (அ-2)

# செயலமர்வு

(மல்லாவி)

வடமாகாண கல்வி திணைக்களத்தின் கீழ் உள்ள 12 கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 10,11 இல் குடியுரிமை பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை மருதனார்மடத்தில் உள்ள வடமாகாண கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளதாக வடமாகாண கல்வி திணைக்களத்தின் மேலதிக கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் நடத்தப்படும் இச் செயலமர்வில் ஒவ்வொரு வலயத்தில் இருந்தும் குடியுரிமை பாடம் கற்பிக்கும் 3 ஆசிரியர்களும் சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகரும் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-15)

# இருபத்தொரு பீரங்கிகள் தீர்க்கப்பட கொரியாவில் இறங்கினார் ஜனாதிபதி

தென் கொரியாவுக்கான நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கொரிய சியோல் விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் அந்நாட்டின் நேரப்படி முற்பகல் 11.40 இற்கு சியோல் விமான நிலையத்தைச் சென்றடைந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் கிமிசுங் ஹா தலைமையிலான அரச உயர் மட்டக்குழுவினர் வரவேற்றனர். இலங்கை ஜனாதிபதியைக் கௌரவிக்கும் வகையில் 21 பீரங்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டுள்ளன.

தென்கொரிய ஜனாதிபதி லீ மையூம் பகின் அழைப்பினை ஏற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முதல் பெண்மணி திருமதி ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோர் தென்கொரியாவுக்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி தலைமையிலான இத் தூதுக்குழுவில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், பாராளுமன்ற உறுப்பினர்கள் சஜின்வாஸ் குணவர்தன, நிஷாந்த முத்துஹெட்டிகம, ரொஷான் ரணசிங்க, சனி ரோஹன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க,மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் இலங்கையின் முன்னணி வர்த்தகர்கள் குழுவினரும் தென் கொரியா சென்றுள்ளனர்.

ஜனாதிபதி தென்கொரியாவில் தங்கியுள்ள நாட்களில் அந்நாட்டின் ஜனாதிபதி லீ-மையூம் பக் அவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையை மேற்கொள்வதுடன் இரண்டு நாடுகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த சில உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படவுள்ளன.

அதனையடுத்து கொரியாவின் சியோல் நகரிலுள்ள நான்கு முன்னணி வர்த்தக சங்கங்கள் ஏற்பாடு செய்துள்ள விசேட வர்த்தகச் சந்திப்புக்களிலும் ஜனாதிபதி பங்கேற்பதுடன் பூசான் வர்த்தக் கைத்தொழில் சம்மேளனம் ஏற்பாடு செய்யவுள்ள இலங்கை- கொரிய வர்த்தக பேரவை நிகழ்விலும் விசேட உரையாற்றவுள்ளார்.

இலங்கைக்கும் கொரியாவுக்குமிடையிலான நல்லுறவுகள் 1967 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 1977 இல் தென்கொரியாவுக்கான் தூதுவர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் 1987 இல் சியோல் நகரில் இலங்கைத் தூதரக வதிவிடத் தூதுவரும் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தந்தை செல்வா 35 ஆவது ஆண்டு நினைவு நாள்

## அஞ்சலியும் நினைவுரையும்



காலம் :-26.04.2012 வியாழக்கிழமை
முற்பகல் 9.30 மணி

இடம்:-தந்தை செல்வா நினைவிடம்
(தந்தை செல்வா சதுக்கம் ,யாழ்ப்பாணம்)

தலைவர்:-அருட்கலாநிதி சு.ஜெபநேசன் அவர்கள்
(தலைவர்,தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு)

தந்தை செல்வா சிலைக்கு மலர்மாலை அணிவித்தலும்
மலர்அஞ்சலி செலுத்தலும்.

நினைவுரை:- திரு செல்லையா இராசதுரை அவர்கள்
(மட்டக்களப்பு முன்னாள் பா.உ.)

தமிழ் தேசியத்தின் தந்தை அவர்களை நினைத்து இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம்
22.04.2012

தந்தை செல்வா
நினைவு அறங்காவற் குழு

# சித்திரை மாத இராசி பலன்கள்

# 13.04.2012 - 13.05.2012



## சிம்மம்

மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

## மனக்குழப்பம் அகன்று மதிப்பு, மரியாதை கூடும் ஆபரணச் சேர்க்கைக்கு அத்திவாரம் இடுவீர்கள்

**சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவுக்கு வரும்!**

**செல்லும் இடங்களில் எல்லாம் செல்வாக்கு அதிகம்பெற்ற சிம்ம இராசி நேயர்களே!**

விடாமுயற்சி இருந்தால் விதியைக்கூட மாற்றிவிடலாம் என்று சொல்பவர்கள் நீங்கள். பின்விளைவை பற்றி சிந்திக்காமல் பேசுவீர்கள். பிரச்சினைகள் வந்தால் அதற்கு தலைமை தாங்கி முடிவெடுப்பீர்கள். பொதுநலமும், சுயநலமும் கலந்த வாழ்க்கைதான் உங்கள் வாழ்க்கை. புகழ் ஏணியின் உச்சத்துக்குச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் இளமையிலேயே உங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும்.

உங்களுக்கு இந்த சித்திரை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, மாதத் தொடக்க நாளில் விரயாதிபதி சந்திரனை குரு பார்க்கிறார். இராசியிலேயே யோகாதிபதி செவ்வாய் சஞ்சரிக்க, அதையும் குரு பார்க்கிறார். எனவே, குடும்பத்தில் மங்கள ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும். இடம், பூமி, வாங்குவதில் இருந்து வந்த தடைகள் அகலும். உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்ட முன்வருவர். புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

சனி வக்ர இயக்கத்தில் இருப்பது குறிபிடத்தக்கதாகும். ஏழரைச்சனியின் ஆதிக்கம் மீண்டும் தொடர்வதால் எதிலும் நிதானத்துடன் செயற்படுவது நல்லது. வரவு நிறைய வந்தாலும், செலவும் அதைப்போல இருமடங்காக இருக்கும். எவரிடமும் எந்த பணியை நம்பி ஒப்படைத்தாலும், அதில் சில இடர்பாடுகள் ஏற்பட்டு, முடிவடையும். பிரச்சினைகள் தீர அர்ச்சனைகள் வைக்க, ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைக்கவேண்டும்.

குறிப்பாக, இதுபோன்ற காலங்களில் சனி பகவானுக்கு அர்ச்சனை செய்வதன் மூலமும், சந்நிதியில் எள்தீபம் ஏற்றுவதன் மூலமும், துயரங்களிலிருந்து விடுபட இயலும்.

பத்தில் இராகு இருப்பதால், தொழில் தொடர்பு நன்றாகவே இருக்கும். துணையாக இருக்கும் மாற்றினத்தவர்கள் தோள்கொடுத்து உதவ முன்வருவர். திடீர் முடிவுகளை எடுப்பதை தவிர்ப்பது நல்லது. பாகப்பிரிவினைகள் சம்பந்தமாக எடுத்த பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவுக்கு வரும். சனி வக்ர நிவர்த்திவரை பொறுமையாக செயற்படுவது நல்லது.

மேஷ இராசியில் புதன் ஏப்ரல் 29 ஆம் திகதி சஞ்சரிக்கப்போகிறார். உங்கள் இராசிக்கு 2,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கும்போது, பணப்புழக்கம் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். மனக்குழப்பம் அகன்று மதிப்பும், மரியாதையும் கூடும். வாங்கல், கொடுக்கல்களை ஒழுங்குசெய்து கொள்வீர்கள். தேங்கிய காரியம் சுறுசுறுப்பாக நடைபெறும். சிக்கனத்தைக் கையாண்ட நீங்கள், இனி செலவுக்கு அஞ்சமாட்டீர்கள்.

மே 2 ஆம்திகதி மிதுன இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப்போகிறார். உங்கள் இராசிக்கு 3,10 க்கு அதிபதியான சுக்கரன் இலாபஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். தொழில் வளர்ச்சி மேலோங்கும். அந்நிய தேசத்தில் இருந்து அனுகூலச் செய்தி வந்துசேரும் பழைய தொழில்கள் நடத்துவதோடு, புதிய தொழில் ஒன்றும் தொடங்கவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். ஆபரண சேர்க்கைக்கும் அஸ்திவாரம் இடுவீர்கள். பிள்ளைகளுக்கான வைப்பு நிதியை உருவாக்க உதிரி வருமானங்கள் கைகொடுத்து உதவும். இம்மாதம் குருவழிபாடும், செவ்வாய் தோறும் அங்காரக வழிபாடும் முறையாகச் செய்தால், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

இம்மாதம் பணவரவு திருப்தி தரும் மாதமாக இருக்கிறது. பிள்ளைகளின் திருமண நிகழ்ச்சிகளும், குடும்பத்தில் மூத்தவர்கள் சம்பந்தமான சுபகாரியங்களும், நல்ல முடிவுக்கு வரும். கணவன்- மனைவிக்குள் கனிவு கூடும். விலகிச் சென்றவர்கள் விரும்பிவந்து சேருவர். பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இலாகா மாற்றங்கள் ஏற்படும். புதிய இடம் வாங்கி, வீடு கட்ட வேண்டுமென்ற எண்ணத்தை பூர்த்திசெய்ய அருகில் இருப்பவர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். அரசுவழி ஒத்துழைப்பும் கிடைக்கும். ஏழரைச்சனி மீண்டும் தொடர்வதால், சனிபகவான் வழிபாடு உங்கள் சஞ்சலங்களைத் தீர்க்கும்.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## கன்னி

உத்திரம் 2, 3, 4 பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 பாதங்கள்

## மறைந்த புதன் நிறைந்த தனலாபம் தரும் நல் வாய்ப்புகள் பலவும் இல்லம் தேடிவரும்

**ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய நேரம் இது !**

**நிதானத்தோடு நடந்துகொண்டால், வெற்றி நிச்சயம் என்று சொல்லும் கன்னி இராசி நேயர்களே !**

வேகமும், விவேகமும் கொண்டவர்கள் நீங்கள். சிக்கனம் உங்கள் உடன்பிறப்பாக இருக்கும். செயற்பாடுகளில் பிறரது குறுக்கீடு உங்களுக்குப் பிடிக்காது. மற்ற மனிதர்களைப்போல, பிறந்தோம், வளர்ந்தோம் என்று இருக்காமல் பிறர் போற்றும் அளவிற்கு ஏதாவது செய்யவேண்டும் என்று நினைப்பீர்கள்.

உங்களுக்கு இந்த சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, இராசிநாதன் புதன் உச்சம்பெற்று உங்கள் இராசியையே பார்க்கிறார். ஜென்மச்சனியின் ஆதிக்கம் வக்ர இயக்கத்தில் இருக்கிறது. எனவே, ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லைகள் ஏற்பட்டு அகலும். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு வைத்தியச் செலவுகள் ஏற்படுகின்றதே என்று கவலைப்படுவீர்கள். சொத்து பிரச்சினைகளில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் முடிவுக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம்.

என்ன இருந்தாலும், 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. எதிரிகளை சரணடைய வைக்கும் என்றாலும், இனம்புரியாத கவலை மேலோங்கும். பிள்ளைகள் வழியில் திடீர் பிரச்சினைகள் உருவாகலாம். உங்கள் கவனம் பிள்ளைகள்மீது தேவைப்படும் நேரம் இது. வாகன மாற்றம், இடமாற்றம், வீடு மாற்றம், இலாகா மாற்றம், நாடு மாற்றம் என்று அவரவர் ஜாதக அமைப்பிற்கு ஏற்றவாறு ஏதாவது ஒரு மாற்றம் வரக்கூடிய சூழ்நிலை உண்டு.

சுய ஜாதகம் வலிமையாக இருந்தால் வந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ளலாம். இல்லையேல், சனியின் வக்ர இயக்கம் முடியும்வரை, சற்றுப்பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. வியாழன் அஷ்டமத்தில் சஞ்சரிப்பதால், வழக்குகள், எதிர்ப்புகள், வரவேண்டிய தொகைகளில் தாமதம், உறவில் விரிசல் போன்றவைகள் உருவாகலாம். அவைகள் அகல குரு வழிபாட்டை வியாழக்கிழமை தோறும் செய்துவருவது நல்லது.

உங்கள் இராசிநாதன் புதன் ஏப்ரல் 29 ஆம் திகதி அஷ்டமத்தில் சஞ்சரிக்கப் போகிறார். மறைந்த புதன் நிறைந்த தன இலாபத்தைக் கொடுக்கும் என்றாலும், உடல் ஆரோக்கியத்தில் திடீர் நலக்குறைவையும் கொடுக்கலாம். எனவே, கூடுதல் கவனம் தேவைப்படும் நேரம் இது. தொழில் கூட்டாளிகள் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்துகொள்ளமாட்டார்கள். கணக்கு, வழக்குகளை கச்சிதமாகப் பார்த்துக்கொள்வது நல்லது.


உங்கள் இராசிக்கு 2, 9 க்கு அதிபதியான சுக்கிரன் பத்தாம் இடத்தில் மே 2 ஆம் திகதி சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக, நல்ல வாய்ப்புகள் பலவும் இல்லம் தேடி வரப்போகின்றன. பெண்வழிச் சிக்கல்கள் அகலும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். மாற்றுகருத்துடையோர். மனம் மாறுவர். கூட்டு முயற்சியிலும், கொடுக்கல்- வாங்கல்களிலும், தகராறுசெய்து வந்தவர்கள் விலகுவார்கள். விலை உயர்ந்த பொருட்களை வீட்டுத் தேவை குறித்து வாங்குவீர்கள். குடும்ப ஒற்றுமை பலப்பட, உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பயணங்கள் அதிகரிக்கும். பால்ய நண்பர்களைச் சந்தித்து புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக்கொள்வீர்கள். இம்மாதம் காலையில் விநாயகப் பெருமானையும், மாலையில் சனிபகவானையும், அனுமனையும் ஒரே நாளில் வழிபட்டு வந்தால், உற்சாகத்தோடு பணிபுரிய இயலும்.

விரயாதிபதி பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கும் இம்மாதத்தில் விரயங்கள் அதிகரிக்கும். விரும்பிய பொருளை விரும்பிய நேரத்தில் வாங்கி மகிழ்வீர்கள். வக்ரச் சனியின் இயக்கம் இருப்பதால், உடல் ஆரோக்கியத்தில் மட்டும் ஒவ்வொரு நாளும் கவனம் செலுத்த வேண்டும். கணவன்- மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதே ஒற்றுமைக்கு வழி வகுக்கும். உங்கள் பெயரில் இருக்கும் சேமிப்பு கரையலாம். மாதத்தின் மையப் பகுதியில் தாய்வழி ஆதரவு கிடைக்கும். விரதங்களும், வழிபாடுகளும் வியக்கும் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

(தொடரும்)

# சித்தர்களை தரிசித்து முக்தி பெறும் ஜாதகர்கள்

ஆயுள் பாகம் என்பது ஒரு அற்புதமான கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். ஆயுள் பாகத்திற்கும் செல்வத்திற்கும் சம்பந்தமில்லை என்பதே உண்மை. சிலர் செல்வந்தராக இருப்பார்கள். ஆனால் ஆயுள் குறைவாக இருக்கும். சிலர் நீண்ட ஆயுள் உடையவராக இருப்பார்கள். ஆனால் பரம ஏழையாக இருப்பார்கள். பலர் கடனாளியாகவே 90 வயது வரை வாழ்வதையும் பார்க்கின்றோம். அதுபோன்று ஆயுள் பாகம் முடிவது பலவாறு இருப்பதையும் காண்கின்றோம்.



பாவ கிரகங்கள் 3,6,11 இல் இருந்து சந்திரன் 6,8 இல் வீற்றிருக்க குரு கேந்திரம் ஏறினால் அந்த ஜாதகர் பெரிய பட்டினங்களுக்கு தலைவராகவும் நீண்ட காலம் வாழ்பவராகவும் இருப்பார்.

லக்னாதிபதிக்கு கேந்திரத்தில் குரு நின்று பாவ கிரகங்கள் கேந்திரம் அல்லது கோணத்தில் இல்லாமல் இருந்தால் அந்த ஜாதகர் எல்லாவித்மான மகிழ்ச்சியையும் அனுபவித்து 100 ஆண்டுகள் வாழ்வார்.

குரு கேந்திரம் ஏறி சூரியன் செவ்வாய் லக்னத்திலோ அல்லது எட்டிலோ இருந்தால் இந்த யோகத்தில் பிறந்த ஜாதகர் பெரும் செல்வந்தராகவும் செல்வாக்கும் சொல்வாக்கும் பெற்று சிறந்த அரசியல் தலைவராகவும் நீண்டகாலம் ஜீவித்திருப்பார்.

குரு லக்ன கேந்திரத்தில் சுக்ரன் சதுர்த்த கேந்திரத்தில் சந்திரனும், சனியும் சேர்ந்து பாவ கிரகங்களுடன் சேர்ந்திராமல் பத்தில் இருந்தால் அந்த ஜாதகர் பலவிதமான கல்வி, சாஸ்திரஞானம் பெற்றவராகவும் நீண்டஆயுள் உடையவராகவும் இருப்பார்.




உதாரணமாக கூறினால், அஷ்டமாதிபதி சந்திரனாக அமைந்து அல்லது அஷ்டமாதிபதி சந்திரன் சம்பந்தப்பட்டு பாவ கிரகத்துடன் கூடி சுப கிரகத்தால் பார்க்கப்படும் போது கங்கையில் அல்லது புண்ணிய நதியில் அவருக்கு மரணம் உண்டாவதை காண்கின்றோம். இது அந்த சம்பந்தப்பட்ட தசையிலோ பாவகிரகத்தின் தசையிலோ உண்டாவதைப் பார்க்கின்றோம்.

இது தொடர்பாக பலவித அபிப்பிராய பேதங்கள் ஜோதிட நூல்களில் காணப்படுகின்றது.

லக்னத்துக்கு அதிபதியாக விளங்கும் கிரகமும் சந்திரபகவான் நின்ற வீட்டிற்குரிய கிரகமும் சேர்ந்து எட்டாம் இடத்தை அடைய எட்டுக்குடையவன், கேந்திரத்தில் நிற்க அந்த ஜாதகர் அரசியல் தலைவராகவும் சிறந்த புகழையும் பெற்று 60 இலிருந்து 66 வயது வரை உயிர் வாழ்வார்.

4 ஆம் இடமாகிய சதுர்த்த கேந்திரத்தில் ஒரு கிரகம் இருந்து அசுர குருவும் தேவ குருவும் கேந்திரம் ஏற அந்த ஜாதகர் நல்ல குணத்துடன் பல தொண்டுகள் புரிந்து மக்களுக்காக வாழ்ந்து 60 வயதில் தேவலோகத்தை அடைவார்.

சனீஸ்வர பகவான் நீச்சமடைந்து கேந்திர திரிகோணங்களில் வீற்றிருக்க சுப கிரகமும் கேந்திரங்களை அடைய சூரியன் சுபகிரகம் சம்பந்தம் அடைந்து கேந்திரம் ஏற அந்த ஜாதகர் முற்போக்கான கொள்கையுடன் மக்களை வழிநடத்தி தலைமை ஏற்று 65 வயது வரை உயிர் வாழ்வார்.

சூரிய பகவானும் அங்காரகனும் சனி பகவானும் ஆறாம் பாவாதிபதியும் கேந்திரம் ஏறி குரு சந்திரன் நல்ல நிலைமையில் இருக்க அந்த ஜாதகர் உயர்ந்த கல்வி பெற்றவராகவும் தர்மங்கள் செய்பவராகவும் திகழ்ந்து எல்லாவிதமான உயர்ந்த பதவியையும் அடைந்தவராகவும் விசாலமான புத்தியுடையவராகவும் இருந்து 70 ஆவது வயதில் மரணமடைவார்.

மாசி மாதம் கும்ப லக்னத்தில் பிறந்தவர்களுக்கு குரு மீனத்திலோ, மகரத்திலோ இருக்க அந்த ஜாதகர் சித்தர் காட்டிய வழியில் ஆயிரம் வருடங்களுக்கு மேல் உயிர் வாழ்வார். ஜனங்களால் மகா சித்தர் என அழைக்கப்படுவார். (ஸ்ரீராகவேந்திரர் போன்ற மகான்கள் அருவமாய் இருந்து அருள் புரிவதை பார்க்கின்றோம். திருவண்ணாமலை போன்ற புண்ணிய இடங்களில் அருணகிரி நாதர் போன்ற சித்தர்கள் நீண்ட காலம் உயிர் வாழ்ந்து மக்களுக்கு நன்மை புரிவதை கேள்விப் படுகின்றோம்.)

சனீ லக்ன கேந்திரம் ஏறி சூரியனும் அங்காரகனும் சதுர்த்த கேந்திரத்தில் இருக்க தன விரய ஸ்தானத்தில் மற்ற கிரகங்கள் இருந்தால் அந்த ஜாதகர் 2 ஆயிரம் வருடம் வாசியோகம் பயின்று ஜீவித்திருப்பார்.

தனுசு அல்லது மீன லக்னத்தில் பிறந்தவர்களுக்கு லக்னாதிபதி குரு லக்னத்தில் இருக்க சுக்ரன் கேந்திரம் ஏறி மிதுனத்தில் கிரகம் இல்லாமல் இருந்தால் அந்த ஜாதகர் சித்தர்களை தரிசனம் செய்து ஞானத் தெளிவடைந்து அற்புத பாடல்கள் பல இயற்றி ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பூமியில் வாழ்ந்து பின் தேவலோகத்தை அடைவார்.

எல்லா சுப கிரகங்களும் அசுப கிரகங்களுடன் கூடி கேந்திரம் அல்லது திரிகோணம் ஆகிய ஒரே ராசியில் நின்று ஜனித்த ஜாதகர் பிறந்தவுடன் மரணத்தை சந்திப்பார். இதில் மீண்டால் பாரத தேசம் எங்கும் சுற்றி பல மகான்களை தரிசித்து அற்புதமான மந்திரங்களை ஜெபித்து பரமஹம்சராக ஆயிரக்கணக்கான வருடம் ஜீவித்திருப்பார். ரிஷப லக்னத்தில் பிறந்தவருக்கு லக்னத்தில் சுக்ரன் இருக்க குரு கேந்திரம் ஏற மற்ற கிரகங்கள் 3,6,11 இல் இருக்க அந்த ஜாதகர் நல்ல குரு உபதேசம் பெற்று மந்திர சித்திகள் பல அடைந்து நீண்ட காலம் வாழ்ந்து பின் இந்திர பதவியை அடைவார்.

கடக லக்னத்தில் பிறந்த ஜாதகருக்கு சனி, சந்திரன் உச்சம் பெற்று குரு நீச்சம் பெற்றிருந்தால் அவர் எல்லா விதமான சுகங்களையும் அனுபவித்து அற்புதமான யோகங்கள் பயின்று சித்தர்கள் அருளால் மந்திர சித்தி அடைந்து இறந்த பின் பிரம்மலோகம் சென்றிடுவார்.

## கலைமகளின் சாதனைகள்

முல்லைத்தீவு வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இப்போட்டியில் முல்லை/ கலைமகள் வித்தியாலய 15 வயதுப்பிரிவு ஆண், பெண், 17 வயதுப்பிரிவு ஆண், பெண், 19 வயதுப்பிரிவு ஆண்கள் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டனர் என வித்தியாலய அதிபர் கே. ஜெயவீரசிங்கம் அறிவித்துள்ளார். (அ-9)

## பாதுகாப்புச் செயலரின் செயற்பாட்டால் விசனமடைந்த சிரேஷ்ட அமைச்சர்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் கோத்தபாய ராஜபக்ஷ மீதான எதிர்ப்பு மேலெழுந்துள்ளது. இதனால் பாதுகாப்புச் செயலாளரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிரேஷ்ட உறுப்பினர்கள் பகிரங்கமாக விமர்சிக்கவும் ஆரம்பித்துள்ளனர்.

அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் சிரேஷ்ட அமைச்சர்கள் என முன்னாள் பிரதமர் ரட்னசிறி விக்ரமநாயக்க, அமைச்சர் ஜோன் செனவிரட்ன ஆகியோரே கோத்தபாய ராஜபக்ஷ மீது பகிரங்க விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

நகர அபிவிருத்தி அதிகார சபைத்தலைவரும் பாதுகாப்பு செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவ அதிகாரிகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களாக நியமித்து கட்சியை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதாக அவர்கள் குற்றம்சுமத்துகின்றனர்.

கோத்தபாய ராஜபக்ஷவின் இந்த செயற்பாடு கட்சியின் யாப்பிற்கு முற்றிலும் முரணானது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் கோத்தபாய ராஜபக்ஷ எந்தவொரு சிரேஷ்ட உறுப்பினர்களின் கருத்துக்களையும் கவனத்தில் கொள்வதில்லை எனவும் அனைத்து மாவட்டங்களிலும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இராணுவத்தினரின் உதவியைப் பெற்றுவருவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதனால் அந்தந்த தொகுதி அமைப்பாளர்களும் செல்லாக் காசாகவே பார்க்கப்படுவதாகவும் இந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாகத்தையோ அதிகாரங்களையோ கோத்தபாய தன் கையில் எடுக்க முடியாது எனவும் இந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். (அ-2)


## பதவி வெற்றிடம்

★ ஒவ்செற் இயந்திர இயக்குநர்கள் (பயிலுநர், ஆண்கள்)

★ பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள்)

மேற்படி இரண்டு வெற்றிடங்களுக்கும் கிளிநொச்சி முல்லைத்தீவைச் சேர்ந்தவர்களிட மிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. தெரிவு செய்யப்படுவர்களுக்கு தகுந்த வேதனத்துடன் உணவு மற்று தங்குமிடவசதி வழங்கப்படும்.

பொருத்தமானவர்கள் தங்கள் விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை

மனிதவள முகாமையாளர்
வலம்புரி
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்


## அரசை கவிழ்க்க அமைச்சரவையால் முடியும்

### அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)


அரசாங்கத்தை கவிழ்க்க அமைச்சரவையில் இருக்கின்றவர்களுக்கே இயலும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவ்வாறின்றி வேறு யாராலும் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாதென அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் களனி தொகுதிக்கான காரியாலயத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இதேவேளை, அமைச்சர் மேர்வின் சில்வா தொடர்ந்தும் களனி தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக செயற்பாடுவார் என அமைச்சர் குறிப்பிட்டார். (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 111




உக்ரேனில் சோவியத்தின் போலி இராணுவநிலை

நடவடிக்கையை பெரும் ஆழத்தில் வெற்றிகரமாக நடத்தமுடிந்தது.


ஆகஸ்ட்டு 20 ஆம் திகதி காலையில் பலத்த பூர்வாங்க பீரங்கிப்படை, விமானப்படையின் தாக்குதலுக்குப்பின் 2-வது, 3-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் தாக்குதலில் இறங்கின.

2-வது உக்ரேனிய சேனையின் முக்கிய தாக்குதல் படைத்திரட்டின் யூனிட்டுகள் முற்பகலில் எதிரிதற்காப்பின் இரண்டு மண்டலங்களைப் பிளந்தன. இப்பிளவினுள் அனுப்பப்பட்ட 6-வது டாங்கிப்படை நாளின் இறுதியில் மாரே மலைத் தொடர் அருகேயிருந்த எதிரியின் 3-வது தற்காப்பு மண்டலத்தை அடைந்தது. அங்கே காலாட்படை, டாங்கிகளின் உறுதியான எதிர்ப்பைச் சந்தித்தது.

3-வது உக்ரேனிய சேனையின் எதிரியின் 13வது டாங்கி டிவிஷனை முறியடித்து, 30 கி.மீ. ஆழம்வரை பிளந்து சென்று 6வது ஜேர்மனியப் படை 3-வது ருமேனியப்படையிலிருந்து துண்டிக்கப்படும் உண்மையான ஆபாயத்தை ஏற்படுத்தின.

அடுத்து வந்த நாட்களில் இரண்டு சேனைகளும் சற்றும் குன்றாத சக்தியுடன் தொடர்ந்து முன்னேறின. 2-வது உக்ரேனிய சேனையின் 18 வது டாங்கி கோர்பஸ் ஆகஸ்ட் 23 ஆம் திகதியன்று ஹூஷி பிரதேசத் தில் புருட் ஆற்றை அடைந்தது. 3-வது உக்ரேனி சேகையின் இயந்திரப்படை கோர்பஸ்கள் முனைப்போடு முன்னேறி லியோவிற்கு வடக்கேயிருந்த பிரதேசத்தில் புருட் ஆற்றை அடைந்து வடகிழக்கை நோக்கிய திசையில் தற்காப்பை மேற்கொண்டன. புருட் ஆற்றின் பின் எதிரியின் கிஷினேவ்

நேச அணிகளின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து சிசிலி, இத்தாலிபடைகள் இத்தாலியினூடாக வெளியேறுகின்றனர்



3-வது உக்கேரனிய சேனையின் படைத்தலைமையகத்தின் முன் நாள் தலைவர் கேர்னல் ஜெனரல் பிருஸோவ் நினைவு கூறும்படி எல்லாமே மிகத் துல்லியமாகச் செய்யப்பட்டது. இந்தச் செயல்முறை உருமாற்ற நடவடிக்கைகள் அனைத்தும் முழுவதுமாக தம்மை நியாயப்படுத்தின என்பதைக் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிட்டியது. எதிரியின் தற்காப்பு பிளக்கப்பட்ட சமயத்தில் மட்டு மின்றி எங்களது தாக்குதலின் எதிரி கிஷினேவ் திசையில் தொடர்ந்து எதிர்பார்த்தான்... கடும் சண்டைகள் இடம்பெற்ற இரண்டாம் நாளின் இறுதியில்தான் எதிரி தனது நிலையின் சோகத்தன்மை முழுவதையும் புரிந்துகொண்டான்.

தாக்குதலுக்கு முன்னதாக ருமேனியாவின்பால் சோவியத் அரசின் கொள்கையைப் போர்வீரர்கள் நன்கு அறிந்துகொள்வதற்காக துருப்புகளில் பெரும்கவனம் செலுத்தப்பட்டது. ருமேனிய இராணுவம் சோவியத் பூமியில் இழைத்த கொடுமைகளுக்குப் பழிவாங்கும் உணர்வோடு சோவியத் அரசாங்கம் செயற்படவில்லை. மாறாக ஜேர்பாளனாக அல்லாமல் பாசிசக் கொடுமையிலிருந்து ருமேனிய மக்களை விடுவிப்பவனாக, உழைக்கும் மக்களின் பாதுகாவலனாக ருமேனியாவினுள் நுழைகிறது என்று கோடிட்டுக் காட்டப்பட்டது.

நடவடிக்கைக்கான தயாரிப்புகளின் போது மல்தாவியக் குடியரசின் உழைப்பாளிகள் 2-வது, 3-வது உக்ரேனிய சேனையின் துருப்புகளுக்கு பெரிதும் உதவினர். இவர்கள் 58 இருப்புப் பாதைப் பாலங்களை புனரமைத்தனர். 700 கி.மீ இற்கும் அதிகமான இருப்புப் பாதையையும் 2 ஆயிரத்து 300 இற்கும் அதிகமான வாகனங்களையும் டஜன் கணக்கான பீரங்கிகள், டாங்கிகளையும் பழுது பார்த்தனர். தற்காப்பு அரண்கள், விமானத்தளங்களின் கட்டுமானம், போர்முனை நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்களை புனரமைத்தல் ஆகியவற்றில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். நூறாயிரக் கணக்கான பவுண்ட் ரொட்டியும்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

சோவியத் இராணுவம் ஊக்ரேன் சமரின்போது



மனியின் பாசிசத்தை முறியடிப்பது என்ற திட்டவட்டமான கடமையை நிறைவேற்றும் அவசியத்தின் காரணமாக இயங்குகிறது என்றும் ருமேனியப் போர்வீரர்களை சோவியத் மக்களுக்கு எதிராக அனுப்பிய யுத்தக் குற்றவாளிகளிடமிருந்து உழைப்பாளிகளை நன்கு வேறுபடுத்திப் பார்க்க வேண்டும் என்றும் போர்வீரர்களுக்கு விளக்கப்பட்டது. சோவியத் இராணுவம் ஆக்கிரமிப் மற்றப் பொருட்களும் துருப்புகளுக்கு அனுப்பப்பட்டன.

நடவடிக்கையின் ஆரம்பத்தில் இரு சேனைகளின் துருப்புகளுக்கும் 2 முதல் 4 வரை ஆயுதத் தளவாட ரேசன்களும் 8-9 முறை எரிபொருள் சப்ளையும் இருந்தன. 4-7 நாட்களுக்கான உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன. இந்த அளவு உணவுப் பொருட்கள், எரிபொருள் மற்றும் ஆயுதத் தளவாடங்கள் இருந்ததால் இராணுவ நடவடிக்கைகளும் வெற்றிகரமாக நடந்தன. எதிரி தனது முதல் பதுங்கு குழிகளில் பலத்த எதிர்ப்பைக் காட்டாது குழம்பிப் போகும் அளவிற்கு துருப்புகளின் தாக்குதல் ஒற்றுமையானதாகவும் முனைப்பானதாயும் இருந்தது. நாளின் இறுதியில் துருப்புகள் தற்காப்பின் பிரதான மண்டலத்தை முற்றிலுமாகப் பிளந்து ஆங்காங்கே எதிரியின் இரண்டாவது தற்காப்பு மண்டலத்தின் ஊடே புகுந்தன.

நடவடிக்கையின் இரண்டாம் நாளாகிய ஆகஸ்டு 21 ஆம் திகதி 2-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் ருமேனியாவின் பெரும் நிர்வாக, பொருளாதார மையாமகிய யாஸ்ஸி என்னுமிடத்தைக் கைப்பற்றின. எதிரியின் மூன்று தற்காப்பு மண்டலங்களையும் கடந்து செயல்முறை இடத்துக்கு வந்துசேர்ந்தன. அதே நாளன்று இயந்திர மயப்படுத்தப்பட்ட குதிரைப்படைத் தொகுதியும் 18-வது டாங்கி கோர்பசும் பிளவினுள் அனுப்பப்பட்டன.

அதே நாளன்று 3-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் 7வது மற்றும் 4-வது கார்ட்டு இயந்திரப்படை கோர்பசுகளை பிளவினுள் அனுப்பி


நேச அணிகளின் சுவரொட்டி-ஜப்பானுக்கெதிரானது




படைத்திரட்டு பின்வாங்கிச் செல்வது தடுக்கப்பட்டது. அடுத்த நாளன்று ஒன்றையொன்ற சந்தித்த சேனைகளின் மொபைல் துருப்புகள் ஹூசி, ஃபேல்ச்சியூ பகுதியில் ஆற்றைக் கடக்குமிடத்தைக் கூட்டாகக் கைப்பற்றன. இதன் மூலம் எதிரியின் கிஷினெவ் படைத்திரட்டைச் சுற்றிவளைப்பது நிறைவேற்றப்பட்டது. 18 ஜேர்மனிய டிவிஷன்கள் வலையில் வீழ்ந்தன.

(தொடரும்)







தங்கத்திருநாளாம் அட்ஷய திருதியை நேற்று கொண்டாடப்பட்டது. இதன்போது யாழ்.நகரில் இடம்பெற்ற நகைக் கொள்வனவுகளை படங்களில் காணலாம்.

# அம்பாந்தோட்டையின் அபிவிருத்தியால் மஹிந்த அரசிற்கு இருக்கிறது ஆப்பு

## பொருளாதார நிபுணர்கள் கருத்து

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறுவியுள்ள துறைமுகம், விமான நிலையம் ஆகியவற்றைப் பயன்படுத்த அனைத்துலக கப்பல் மற்றும் விமான நிறுவனங்கள் ஆர்வம் காட்டாதது அரசாங்கத்திற்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம் திறந்து வைக்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகளாகியுள்ள நிலையில் அங்கு குறிப்பிட்ட சில கப்பல்களே வந்துள்ளன.

துறைமுகத்தின் நுழைவாயிலில் காணப்பட்ட பாரிய கற்பாறைகளை அகற்ற பல மில்லியன் டொலரை அரசு செலவிட்ட போதும் இங்கு போதிய கப்பல்கள் வராதது அரசாங்கத்தை ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

இந்த நிலையில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு கப்பல்களை அனுப்புமாறு பங்களாதேசுடன் இலங்கை அரசு பேச்சுக்களை நடத்தியுள்ளது. வேறும் பல நாடுகளுடனும் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன.

அதேவேளை, கொழும்பு துறைமுகத்தின் ஊடாக இறக்கப்பட்டு வந்த மீளப் புதுப்பிக்கப்பட்ட வாகனங்களை அம்பாந்தோட்டை துறைமுகத்திலேயே இறக்க வேண்டும் என்று இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளது.

இதனால் வாகன இறக்குமதியாளர்கள் விசனமடைந்துள்ளனர். அதேவேளை, அம்பாந்தோட்டையில் மத்தால என்ற இடத்தில் அமைக்கப்பட்டு வரும் இலங்கையின் இரண்டாவது விமான நிலையம் இந்த ஆண்டு இறுதியில் திறக்கப்படவுள்ளது.

இதன் கட்டுமானப் பணிகள் 70 வீதம் முடிவடைந்துள்ளன. இந்த ஆண்டு இறுதியில் திறக்கப்படவுள்ள இந்த விமான நிலையத்துக்கு சேவையை ஆரம்பிப்பதில் அனைத்துலக விமான நிறுவனங்கள் ஏதும் ஆர்வம் காட்டவில்லை. ஆறு நிறுவனங்கள் சேவையை ஆரம்பிக்க முன்வந்துள்ளதாக அரசாங்கம் கூறியுள்ள போதும் அது இன்னமும் உறுதியாகவில்லை. இதனால் சீனா, ரஷ்யா போன்ற தமக்கு நெருக்கமான நாடுகளிடம் இலங்கை அரசு உதவி கோரிப் பேச்சு நடத்தவுள்ளது.

மத்தால விமான நிலையத்துக்கு சீனா, ரஷ்யாவில் இருந்து சேவைகளை நடத்த அரசாங்கம் இந்த நாடுகளிடம் கோரவுள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தால அனைத்துலக விமான நிலையம் ஆகியவற்றுக்கு அரசு பல பில்லியன் டொலரை கொட்டிய போதும் அதன்மூலம் பெரும் வருவாயை ஈட்ட முடியாது என்று பொருளாதார நிபுணர்கள் பலரும் முன்னரே எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# நூல் வெளியீடு

(ஆனையிறவு)

கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு பேரவையினால் அமரசிங்கம் கேதீஸ்வரனின் திட்டமிடல் மூலதத்துவங்கள் நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான முருகேசு சந்திரகுமார், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-264)

# கொக்கிளாய் மக்களை ஆளுநர் சந்தித்தார்



(முல்லைத்தீவு)

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கொக்கிளாய் பிரதேசத்திற்கு கடந்த 21 ஆம் திகதி விசேட விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது அப்பிரதேச மக்களுக்கு தேவையான வீடமைப்பு, பாடசாலை, விளையாட்டு மைதானம், சுகாதாரம், உட்கட்டுமானம் ஆகியவை தொடர்பாக விரிவாக ஆராய்ந்துள்ளார். அத்துடன் வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்துள்ளார்.

வவுனியா மாவட்ட பிராந்திய ஆணையாளர் ஐ.எம்.எஸ்.மொகைதீன் இவருடன் சென்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# முல்லை.நாயாற்று பிதேசத்தில் அத்துமீறும் தென்பகுதி மீனவர்கள்

## மக்கள் விசனம்

முல்லைத்தீவு - நாயாற்றுப் பகுதியில் தென்பகுதி மீனவர்களுக்கு வழங்கப்பட்ட தொழில் அனுமதியினை வைத்துக் கொண்டு ஏராளமான மீனவர்கள் அந்தப் பகுதிக்குள் தொடர்ந்தும் உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நாயாற்றுப் பகுதியில் சுமார் 30 வரையான மீனவர்கள் தற்காலிகமாக வந்து தங்கி நின்று ஆழ்கடல் தொழில் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தினசரி தென்னிலங்கையிலிருந்து மீனவர்கள் அந்தப் பகுதிக்கு வந்து கொண்டிருப்பதாக பிரதேச மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை சுமார் 70 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வந்து கரையோரத்தில் குடிசைகளை அமைத்து தங்கி விட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் சமாசத்திற்குத் தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர். மேலும் இந்த விடயம் குறித்து அரசாங்க அதிபருக்கும் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தரப்பிலிருந்தும் நடவடிக்கை எதுவும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வந்து தங்கியிருக்கும் மீனவர்கள் பெரும்பாலும் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள தொழில் முறைகளையே கையாள்வதாகவும் தெரிவித்துள்ள மீனவர்கள் மீன்வளம் விரைவில் அடிநிலைக்குச் செல்லும் எனவும் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

இதேபோன்று இந்த கடல்பகுதியில் செய்யப்படும் தொழிலை நம்பி கள்ளப்பாடு, செம்மலை, அலம்பில், சிலாவத்தை, வண்ணாங்குளம், செல்வபுரம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த வாழ்வாதார ரீதியாக மிகவும் மோசமான நிலையிலுள்ள மக்கள் பாதிக்கப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

(அ-2)

# 107 ஆவது ஜெயந்தி விழா

மௌனகுரு- சிவ ஸ்ரீ முருகுப்பிள்ளை கடவுள் சுவாமிகளின் 107 ஆவது ஜெயந்தி விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பூசைகள், பஜனைகள், ஆராதனைகள், சொற்பொழிவுகள் என்பன இடம்பெறவுள்ளன. (அ-9)

# விடுதலையானது பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தி

(பூநகரி)

பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கடந்த பல வருடங்களாக இயங்கி வரும் இராணுவமுகாமை மாற்றுவதற்காக 12 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பூநகரி பிரதேச செயலக மண்டபத்தில் பூநகரி பிரதேச செயலர் தே. என்.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற பிரதேச காணி பயன்பாட்டுத் திட்டமிடல் குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பூநகரி 4 ஆம் கட்டைப்பகுதியில் உள்ள அரச காணியில் இந்நில ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நீண்ட காலமாக இப்பாடசாலைக் கட்டடங்கள் கல்வி நடவடிக்கைக்காக மீள ஒப்படைக்க வேண்டும் என கல்விச் சமூகத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்த நிலையில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அரச காணிகளில் கலாசார மண்டபம் அமைப்பதற்காகவும் சந்தைகளை புதிதாக அமைப்பதற்கும் காணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்நிகழ்வில் காணி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை அலுவலர், கிராமசேவை அலுவலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கமக்கார அமைப்பினர் எனப்பலர் கலந்து கொண்டனர். (அ-84)

# மலேரியாவை விரட்டுவோம்

## இன்று உலக மலேரியா தினம்

இலங்கையில் காலத்திற்குக்காலம் நுளம்புகளினால் பரப்பப்படும் நோய்கள் மக்களுக்கு மாத்திரமல்ல சுகாதாரத் திணைக்களங்களுக்கும் பெரும் சவால்களாக காணப்படுகின்றன. இலங்கையில் மலேரியா நோய்த்தாக்கத்தின் அபாயம் குறைவடைந்து வருகின்றது. உதாரணமாக 2000 ஆம் ஆண்டளவில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மலேரியா நோயாளிகள் இனங்காணப்பட்டனர். எனினும் சுகாதாரப் பணியாளர்களினதும் மக்களினதும் அர்ப்பணிப்பான ஒத்துழைப்பினால் அவை குறைவடைந்துள்ளன.

கடந்த வருடம் சில நூற்றுக்கணக்கான மலேரியா நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். 2014 ஆம் ஆண்டில் *மலேரியா அற்ற இலங்கை* எனும் நோக்கில் சுகாதார அமைச்சு பல்வேறு வேலைத்திட்டங்களை நாடளாவிய ரீதியில் மேற்கொண்டு வருகின்றது.

இன்று உலக மலேரியா தினமாகும். மலேரியா இல்லாத இலங்கை என்ற தொனிப்பொருளில் உலக மலேரியா தினம் இலங்கையில் கொண்டாடப்படுகிறது. இம்மாதம் 23 ஆம் திகதியில் இருந்து எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதிவரையான காலப்பகுதிகளில் மலேரியா விழிப்புணர்வச் செயற்பாடுகள் அனுஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இலங்கையில் ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, மொனராகல, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் அநேக மலேரியா நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இப்பிரதேசங்களில் பல்வேறுதேவைகளுக்காகசென்று தங்கி மீண்டும் தமது பிரதேசங்களுக்கு செல்லும் 'நபர்கள்மலேரியாநோயை காவிச் செல்லும் வாய்ப்புடையவர்களாக காணப்படுகின்றனர். குறிப்பாக கடமையின் நிமித்தம் செல்லும் பாதுகாப்பு படையினர், உத்தியோகத்தர்கள், வியாபாரிகள் போன்றவர்களை குறிப்பிடலாம்.

மலேரியா நோய்த்தாக்கம் அதிகளவு காணப்படும் நாடுகளுக்கு சென்று திரும்பும் பயணிகள் மீண்டும் தமது நாட்டிற்கு திரும்பி வரும் போது மலேரியா நோய்க்காரணிகளையும் அந்நாடுகளிலிருந்து தமது நாட்டிற்கு தமது உடலில் கொண்டுவரும் அபாயம் உள்ளது.

குறிப்பாக ஆபிரிக்க நாடுகளுக்கு, இந்தியா, கெயிட்டி போன்ற நாடுகளுக்கு சென்று திரும்புபவர்களில் மலேரியா நோயை இங்கு பரப்பும் சாத்தியம் அதிகளவு உண்டு. மலேரியா அபாயமுள்ள நாடுகளுக்கு செல்வதற்கு முன்பு ஒரு கிழமைக்கு முன்னரும் அங்கு தங்கியுள்ள காலப்பகுதியிலும் அங்கிருந்து திரும்பிவந்த பின்னர் தொடர்ந்து 4 கிழமைகளுக்கும் கிழமைக்கு ஒரு தடவை என்ற வகையில் வைத்தியரின் ஆலோசனைப்படி சரியான அளவுகளில் மலேரியாத்தடை மாத்திரைகளைஉட்கொள்வதனால்மலேரியா நோய்த்தாக்கத்தை தவிர்க்க முடியும்.

குறிப்பாக குளோரேகுயின் Chloroquine மாத்திரையை குறிப்பிடலாம். வெளிநாட்டில் இருந்து திரும்புபவர்கள் ஒரு மாத த்தினுள் தமது குருதியை மலேரியாவுக்காக பரிசோதிக்க வேண்டும்.

மலேரியா நோய்க்காரணி வெற்றுக் கண்ணுக்கு புலப்படாத பிளஸ்மோடியம் வைவெக்ஸ்Plasmodium Vivax அல்லது பிளஸ்மோடியம் fபல்சிபெரம் Plasmodium falciparum ஆகும். இவை பொதுவாக அனோபிலிஸ்வகை நுளம்புகளினால் காவப்பட்டு மனித உடலில் குருதி உறுஞ்சும் போது தொற்றடைகின்றன.

இந்நோய்க்காரணியானது மனித உடலில் பல்கிப்பெருகி ஒட்டுண்ணியாக வாழ்ந்துகுருதிமற்றும்ஈரல்போன்ற அங்கங்களின் தொழிற்பாட்டை பாதிக்கச் செய்வதுடன் உடலில் காய்ச்சலையும் வெளிக்காட்டுகின்றன.

குருதிப் பரிசோதனையின் மூலம் இந்நோய்க் காரணி இலகுவாக இனங்காணப்பட்டால் வைத்திய ஆலோசனைப்படி சரியான அளவுகளில் மாத்திரைகளை உட்கொள்ளவதால் பூரணமாக இந்நோளை குணமாக்கலாம்.

குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள் மலேரியா அபாயமுடைய பகுதகளில் வசித்தால் குருதிப்பரிசோதனையை முன்வந்து செய்து பார்ப்பதுடன் வைத்தியரின் ஆலோசனையை சரியான முறையில் பின்பற்றவும் வேண்டும்.

இலங்கையில் மலேரியா தடை இயக்க காரியாலயம் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ளது. இதன் செயற்பாட்டினால் பல்வேறு பிராந்திய வைத்தியசாலைகளிலும் குருதி மாதிரிகளை பெற்று மலேரியா பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் நடமாடும் சேவைகள் மூலமும் பிரதேசங்களில் குருதி மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகின்றன. எனவே, யாவரும் ஒருங்கிணைந்து மலேரியா இல்லாத இலங்கையை உருவாக்க அர்ப்பணிப்படன் செயற்படுவோம் என உறுதி கொள்வோம்.

***வை.பிறேமகுமார்***
***(முன்னாள் பொது சுகாதார பரிசோதகர், கொழும்பு தேசிய வைத்தியசாலை)***

# மாதகல்-திருவடி நிலையில் சிங்களக் குடியேற்றம்?

## நிறுத்தக்கோருகிறார் விநாயகமூர்த்தி எம்.பி.

(கொழும்பு)

**யாழ்.மாதகல்-திருவடி நிலையில் சிங்கள குடியேற்றங்களை அமைக்க கடற்படையினர் மேற்கொண்டுள்ள முஸ்தீபுகளை உடனடியாக நிறுத்தி அந்தப் பகுதி மக்களை மனிதநேய அடிப்படையில் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கோரிக்கை விடுத்திருக்கின்றார்.**

இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கடற்படை அதிகாரிக்கு இன்று அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக உயர்பாதுகாப்பு வலயமாகவுள்ள திருவடி நிலை, புளியந்துறை, சவுக்கடி, தெல்லியான், காட்டுப்புலம் ஆகிய பகுதிகளில் மக்கள் மீள்குடியேற தொடர்ந்தும் அனுமதி மறுத்துவரும் கடற்படையினர் குறித்த பகுதியை அதியுச்ச கடற்படை முகாமாக மாற்றியும் வருகின்றனர்.

இந்த நிலையில் சுமார் 422 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 527 பேர் சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாத நிலையில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்து வார்த்தைகளால் சொல்ல முடியாதளவில் இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அவர்களுடைய நிலத்தில் பாரியளவு கடற்படை முகாம்களும் பௌத்த விகாரைகளும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இதனை நேரடியாகச் சென்று நான் பார்வையிட்டுள்ளதுடன் அதற்கான ஆதாரங்களும் எம்மிடம் உள்ளது. அதேபோன்று அந்தப் பகுதி மக்கள் தங்கியிருக்கும் இடங்களுக்கு நேரடியாகச் சென்று மக்களைச் சந்தித்து அவர்களுடைய நிலைப்பாட்டை தெரிந்து கொண்டது மட்டுமல்லாமல் அவர்களுடைய வாழ்வை நான் நேரடியாகவே பார்வையிட்டுள்ளேன்.

எனவே, அப்பகுதி மக்களை தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்ற ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன். இதன் அடுத்தகட்டமாக மக்களை திரட்டி மக்களுடைய ஆதரவுடன் நீதிமன்றில் வழக்கொன்றை தொடர விருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(அ-2)


# NEWZELANDஇல் உயர் கல்வி

கட்டணங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் G.C.E. O/L இல் ஆறு பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் நியூசிலாந்தில் உயர் கல்விகளுக்கு செல்லலாம்.



**தேவையான கல்வித் தகைமைகள்**

G.C.E. O/L ஆறு பாடங்கள் சித்தி
ENGLISH பாடத்தில் சித்தி தேவையில்லை
IELTS பாடநெறி தேவை இல்லை

கட்டணம் முன்பை விட குறைக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி குறைந்த கட்டணத்தில் கல்வியைத் தொடர்வதுடன் படிக்கும் காலத்தில் மாதாந்த சம்பளமாக 1000 டொலர்வரை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் Newzeland நிரந்தர வதிவிட உரிமையை பெற்றுக் கொள்வதுடன் உங்கள் குடும்ப அங்கத்தவரையும் Newzeland இல் குடியேற்ற முடியும்.

மேலதிக விபரங்களுக்கு:-
RAINBOW TRAVELS & TOURS
113,CHATHAM ST
COLOMBO-01
Tel:-0778980652

(சி/6417)


# 20 வருடங்கள் பயன்படுத்தக்கூடிய எல்.ஈ.டீ.மின்குமிழ்கள் அறிமுகம்

(கொழும்பு)

இருபது வருடங்கள் அல்லது 30 ஆயிரம் மணித்தியாலங்கள் பயன்படுத்தக் கூடிய மின்சாரத்தை சிக்கனமாக மீதப்படுத்தும் எல்.ஈ.டீ. மின்குமிழ் ஒன்றை உலகிற்கு அறிமுகம் செய்வதற்கு அமெரிக்க கம்பனி ஒன்று தயாராகி வருகின்றது.

அமெரிக்காவின் வலு திணைக்களத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட போட்டியிலும் 10 வோட் அளவினைக் கொண்ட எல்.ஈ.டீ மின்குமிழுக்கே முதலிடம் கிடைத்துள்ளது.

மூன்று வருட உத்தரவாதத்தினைக் கொண்ட இந்த மின் குமிழை சந்தைப்படுத்த தயாராகி வரும் அதன் உற்பத்தி நிறுவனம் ஒரு மின்குமிழின் விலை 60 அமெரிக்க டொலராக நிர்ணயித்துள்ளது. (7 ஆயிரத்து 800 ரூபா) சீ எல்.எவ் மின்குமிழை விடவும் ஒருபடி முன்னேற்றமான முறையில் மேற்படி மின்குமிழ் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்த மின்குமிழ் சந்தைக்கு வந்த உடனேயே இதனை மக்கள் அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்வதற்கு அதிகம் முன்வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாத போதிலும் காலப் போக்கில் மக்கள் இதனை கொள்வனவு செய்ய முன்வருவார்கள் என்ற நம்பிக்கை உள்ள்தாதகவும் அமெரிக்காவின் டைம்ஸ் சஞ்சிகை தெரிவிக்கின்னறது.

(அ-2)


# அன்பான வடமாகாண Nokia வாடிக்கையாளர்களே உங்களுக்கு ஓர் அன்பான அறிவித்தல்

NOKIA Connecting People

Nokia நிறுவனம் வடமாகாணத்தில் காலடி வைத்ததை நினைத்து பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். நீங்கள் கடைகளில் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு Nokia கையடக்கத் தொலைபேசியானது அசலானதா (Original) அல்லது நகல் ஆனதா(Dupplicate ) என்பதை நிரூபிப்பதற்கு அதின் உட்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள கிமி இலக்கங்களை (Himi Numbers ) ஐ வடமாகாணத்தின் Nokia கையடக்க தொலைபேசியின் ஏக விநியோகஸ்தரான SVM TECHNOLOGY (PVT)LTD 158 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொண்டு அறியமுடியும்.

**மேலதிக தகவல்களிற்கு எங்கள் யாழ்ப்பாண தொலைபேசி இலக்கங்களான:–0212220293, 0214925828, 0773659359, 0777705934 என்ற இலக்கங்களுடனும் வவுனியா பிரதேசமாயின் (வன்னி மாவட்டம்) 0773659360, 0772441681 என்ற இலக்கங்களுடனும் தொடர்பு கொண்டு அறியமுடியும்.**

எமது ஸ்ரீலங்கா (Srilanka ) ஏக விநியோகஸ்தரான Softlogic Communication (Pvt)Ltd இன் உயர் அதிகாரிகள் வடமாகாணத்தில் மேற்கொண்ட சந்தை ஆராட்சி மூலம் பின்வரும் போலி விற்பனையாளர்களை கண்டறிந்துள்ளனர். ஒரு சில வியாபாரிகள் Nokia கையடக்க தொலைபேசியின் அசல் (Original) உதிப்பாகங்களை மாற்றி (Battery, Charger, Headset) போலியான உதிரிப்பாகங்களை அதனுள் பொருத்தி வாடிக்கையாளர்களிற்கு விற்பதனால் அந்த உதிப்பாகங்கள் 3 மாதங்களில் முற்றாக செயல் இழந்து விடுகிறது. ஆனால் அசல் Nokia (Original Nokia)உதிப்பாகங்கள் நீண்ட காலங்களிற்கு உழைக்கக் கூடியவை. இதனை உறுதி செய்ய மேலே குறிப்பிட்ட ஸ்தாபனத்துடன் தொடர்பு கொள்ளவும். அவர்கள் அதனை இலங்கை தொலைத் தொடர்பு ஆணைக்குழுவிற்கு அறிவிப்பார்கள்.

எமது Nokia வாடிக்கையாளர்களே நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு கையடக்க தொலைபேசிக்கும் இலங்கையின் ஏக பிரதிநிதிகளான Softlogic Communication (Pvt)Ltd இனால் வழங்கப்படும் உத்தரவாத அட்டையை கேட்டு வாங்கி (Warrenty Card ) மிகவும் கவனமாக வைத்து இருந்தால் உங்களுக்கு என்ன பிரச்சினை வந்தாலும் உத்தரவாத அட்டை உங்கள் கையில் இருக்கும் வரை (Warrenty Card) உங்களுக்கு நாங்கள் அதற்குரிய அட்டையுடன் வந்தால் அதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதை அறிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

NOKIA Connecting People

From:-
Softlogic Communication (Pvt)Ltd
No 4, Defonseka Road,
Colombo-05

SVM TECHNOLOGY (PVT)LTD
158 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/6052)

# ஹிருனிகாவிற்கு அநாமதேய கொலை அச்சுறுத்தல் விடுப்பு

முல்லேரிய துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் கொல்லப்பட்ட பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருனிகா பிரேமச்சந்திர, தமக்கு நேற்று இரவு அநாமதேய கொலை அச்சுறுத்தல் விடுக்கும் தொலைபேசி அழைப்பு ஒன்று கிடைத்ததாக முறையிட்டுள்ளார்.

ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் தம்மை கொலை செய்ய திட்டம் ஒன்று உள்ளதாக அந்த தொலைபேசி குரல் கூறியதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் பெயர் குறிப்பிடப்படாத தொலைபேசி அழைப்பொன்றின் மூலம் அச்சுறுத்தப்பட்டேன். என்னை கொலை செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாக அந்த குரல் எச்சரித்தது.

தற்போது இடம்பெற்று வரும் விசாரணைகளின் அடிப்படையில் இது முதன்முறையாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும். அது சிலவேளைகளில் உண்மையாகவும் இருக்கலாம் என நான் நம்புகின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார். இது குறித்து ஹிருனிகா பொலிஸில் முறைப்பாடு ஒன்றையும் செய்யுதுள்ளார். தமது வாழ்க்கைக்கு இது பெரும் அச்சுறுத்தலாக அமையும்.

தற்போதைய நிலைமையில் தமக்கு உறுதியாக புலப்படாத ஒரு விடயம் தொடர்பாக பொலிஸின் பாதுகாப்பை பெறுவதற்காக தாம் பொலிஸாரை நாடி முறைப்பாடுகளை செய்துள்ளதாகவும் ஹிருனிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார். (அ-2)


# 3 கைதிகளுக்கு உடல் நிலை சோர்வு; வைத்தியர் விரைவு

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் நேற்று எட்டாவது நாளாக மாலையில் உண்ணா நிலையில் இருந்து வரும் 13 ஈழ கைதிகளில் 3 பேருக்கு உடல் நிலை சோர்வுற்று மோசமானது. சிலருக்கு மயக்கம் வந்துள்ளது.

மோசமாக பாதிக்கப்பட்டுள்ளோரில் சதீஸ்குமா ர் ஏற்கனவே சிறுநீரக நோயால் அவதியுற்று வருகிறார். பராகரனுக்கு வலிப்பு நோய் உள்ளது. இதில் சதீஸ்குமார் இன்றோடு 8 நாட்கள் உண்ணாநிலையில் இருந்து வருகின்றார்.

சோர்வுற்ற நிலையை மாவட்ட நிர்வாகம் அறிந்து கொண்ட நிலையில் நேற்று மாலை 6 மணிக்கு செங்கல்பட்டு அரசு மருத்துவர் ஒருவர் அவசரமாக சிறப்பு முகாமிற்கு வந்து எல்லோரையும் பரிசோதித்துள்ளார்.

உண்ணாநிலையில் இருப்போருக்கு உடல் மோசமானால் வைத்தியசாலைக்கு அரசு தரப்பு அழைத்துச் செல்லும். அப்படி வரும் நாட்களில் வைத்தியசாலைக்கு சென்றாலும் தங்களது உண்ணாநிலை தொடரும் என்று உண்ணா நிலையில் இருந்து வரும் அனைவரும் உறுதியோடு இருக்கின்றனர். (அ-2)





கந்தர்மடம் அரசடி வீதியில் நேற்று முன்தினம் இரவு பூட்டிய வீட்டின் கதவினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் தங்க நகைகள் மற்றும் பெறுமதிமிக்க பொருட்களை திருடிச் சென்றனர். வீட்டில் இருந்த பொருட்கள் சேதமாக்கப்பட் டிருப்பதை படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச்செய்தியாளர்)

# யாழ். இந்து மகளிரில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வெற்றிடமாகவுள்ள 1 ஏபி தரப் பாடசாலையான யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அதிபர் பதவிக்கான விண்ணப்பம் யாழ். கல்வி வலய பாடசாலைகளில் பணிபுரியும் இலங்கை கல்வி நிர்வாக சேவை மற்றும் வகுப்பு I அல்லது வகுப்பு 2- I ஐச் சேர்ந்த அதிபர் சேவை உத்தியோகத்தர்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தை பெற்று எதிர்வரும் மே 9 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராஜா கேட்டுள்ளார். (அ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## தோல் நோய்களில் மூலிகை பாவனை

தோல் நோய் என்பது மக்களிடையே அதிகமாகக் காணப்படும் நோய்களில் ஒன்றாகும். இந்நோய் நோயாளிக்கு மிகவும் தொல்லை கொடுக்கின்றது. உச்சி முதல் உள்ளங்கால் வரை தோலால் நமது உடல் அமைந்திருக்கின்றது. நமது உடலில் மொத்த எடையில் 16 வீதம் தோல் தான் ஆக்கிரமதித்துள்ளது. தோல் உடம்பின் மேல் போர்வை போல அமைந்து நமது உடலில் உள்ள உள் உறுப்புக்களை பாதுகாக்கின்றது.

சித்த மருத்துவ கோட்பாட்டின் படி 525 தோல் நோய்கள் உள்ளன. ஒப்பீட்டளவில் தோல் நோய்கள் நமது நாட்டை விட வளர்ச்சியடைந்த வெளிநாட்டில் அதிகமாகும்.

ஒவ்வொரு தோல் நோய்க்கு ஒவ்வொரு காரணம் உள்ளது என்றாலும் பொதுவான காரணங்களாக ஒவ்வாமை, தொற்று நோய்க்கிருமிகள், குடற்புழுக்கள், உணவுப்பற்றாக்குறை, சத்தற்ற உணவுகள், மலச்சிக்கல், உடற் பருமன், பரம்பரை, அதிக சூரிய வெப்ப தாக்குதல், அதிக குளிர் உடலைத் தாக்குதல் போன்ற சில காரணங்களும் தோல் நோயை உருவாக்கும். மலக்குடல், நுரையீரல், சிறுநீரகம் போன்ற உறுப்புக்கள் நமது உடலில் கழிவுப்பொருட்களை வெளியேற்றுகின்றன.

இந்த உறுப்புக்களால் கழிவுப் பொருட்களை சரிவர வெளியேற்ற முடியாத பட்சத்தில் இந்த தோல்தான் முக்கியமாக வெளியேற்றுகின்றது.

நடுத்தோலிலுள்ள நரம்பு முடிவுகள் சூடு, குளிர், வலி, அழுத்தம் , கடினத்தன்மை , மென்மை போன்ற உணர்வுகளை மூளைக்கு தெரிவிக்கின்றன.

அதனால் உடல் முன்கூட்டியே எச்சரிக்கப்பட்டு உடலுக்கு தீங்கு உண்டாக்காமல் பாதுகாக்கிறது.

நடுத்தோலிலுள்ள எண்ணெய்ச்சுரப்பிகள் ஒரு விதமான நெய்பான எண்ணெயை உற்பத்தி செய்து தோலை மிருதுவாகவும் முடிகளை மினுமினுப்பாகவும் வைத்திருக்க உதவுகின்றன.


அத்துடன் தோல் உலர்ந்துவிடாமல் தடுக்கவும் செய்கின்றன. மொத்தத்தில் தோல் உடலுக்கு பாதுகாப்பையும் அழகையும் கவர்ச்சியையும் அழிக்கின்றது.

**தோல் நோய்களில் மூலிகைப் பிரயோகம்**

கோடையானாலும் குளிர்காலமானாலும் எப்போதும் மிதமான சுடுநீரில் குளித்தால் தோலிற்கு நன்மையாகும்.

**குளியல்பொடி**

முழுப்பச்சைப் பயறு ஒரு கிலோ, கடலைப்பருப்பு 1/2 கிலோ , நன்னாரிக்கிழங்கு 50 கிராம், கோரைக்கிழங்கு 50 கிராம், வெட்டிவேர் 50 கிராம், சிகைக்காய் 50 கிராம், கஸ்தூரி மஞ்சள் 10 கிராம் இவற்றுள் தானியங்கைள மட்டும் 6 எலுமிச்சைப்பழச்சாற்றில் கலந்து ஊறவைத்து பின் அவைகளை உலர்த்தி பின்னர் மற்றச் சரக்குகளையும் உலர்த்தி அனைததையும் கலந்து மிஷினில் அரைத்து ஆறவைத்து சேகரித்து கொள்ளவும்.





தினமும் 4 தேக்கரண்டி தூளை தண்ணீரில் குழப்பி உடம்பு முழுவதும் சோப்பு போல் தடவி குளிக்க தேகம் பளபளக்கும். தோல் நோய்கள் வராமல் தடுக்கும்.

பொன்னாங்காணி கீரை அல்லது சிவப்பு பொன்னாங்காணிக்கீரையை வாரத்தில் 3 நாட்கள் தொடர்ந்து ஆறுமாதம் சாப்பிட்டு வருவதும் தோல் நோய்களுக்கு சிறந்ததாகும்.

வசம்பு, பச்சைப்பயறு சமமாக எடுத்து மைபோல அரைத்து தலைமுடிகளை ஒதுக்கி அங்கங்கு நன்றாக தேய்த்து 1/2 மணி நேரம் கழித்து தலைக்கு குளிக்க வேண்டும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் 3 முறை குளித்து வர பொடுகு மறையும்.

பூவரசு மரத்தின் காய்களை 2 ஆக நறுக்கினால் வரும் பாலை படர்தாமரை உள்ள இடத்தில் கனமாக பூசினாலும் மறையும் அல்லது பப்பாளி மரத்தின் இலைகளை கொண்டு வந்து சுத்தம் செய்து இடித்து கசக்கிப் பிழிந்து சாற்றை படர்தாமரை இருக்கும் இடத்தில் கனமாக பூசி வைத்துவிட வேண்டும். காலையிலும் போட்டு மாலையிலும் போட்டு கழுவிவர படர்தாமரை மறையும்.

தோல் வியாதிகளில் அரிப்பு ஏற்படும் போது ஆவாரம் பூ இதழ்கள், அதேயளவு பாசிப்பருப்பையும் மைபோல அரைத்து அரிப்புள்ள இடங்களில் காலை, மாலை பூசி 30 நிமிடங்கள் கழித்து குளிக்க குணமாகும். அல்லது கீழ்காய் நெல்லி இலைகளை மைபோல அரைத்து பூசலாம்.

கொய்யா இலைகளை சுத்தம் செய்து ஒரு கைபிடியளவு எடுத்து 2 டம்ளர் (400 மில்லி) தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டிய குடிநீரை தோல் பூராகவும் தேய்த்து 1/2 மணி நேரம் கழி த்து குளிக்க வேண்டும். தோல் நோய்க ளிற்கு சிறந்த நிவாரணியாகும்.

மஞ்சள் நிறமாக பழுத்து கீழே விழுந்த பூவரசு இலைகளை கனிந்த தணலின் மேல் போட்டு கரிபோல கருகியபின் அம்மி யில் வைத்து அரைத்து அரித்து ஒரு கிண் ணத்தில் போட்டு தேங்காய் எண்ணெய் விட்டு களிம்பு போல் குழப்பி காலையில் சிரங்கை சுத்தம் செய்து பின் மருந்தை தடவ வேண்டும். சிரங்கை சுத்தம் செய்ய வேப் பிலை, மஞ்சள் அவித்த நீர் அல்லது புளியிலை அவித்த நீரை பயன்படுத்தலாம்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

சேற்றுப்புண்ணிற்கு மஞ்சளுடன் வேப் பிலையை அரைத்து புண் உள்ள இடத்தில் காலை கனமாகத் தடவி மாலை சுத்தம் செய்து மீண்டும் தடவி வரை வேண்டும். அல்லது சிறிது உளுந்து மாவில் எலு மிச்சை சாறு கலந்து குழப்பி புண்கள் மீது காலை, மாலை 3 நாட்கள் தடவி வர குணமாகும். அல்லது மருதாணி இலை களை மைபோல அரைத்து புண்கள் மீது தடவி வரலாம்.

தேமலிற்கு தொட்டாச்சுருங்கி இலைகளை மைபோல் அரைத்து தேமல் உள்ள இடத்தில் 3 நாட்ள் தொடர்ந்து பூசி 2 நாட்கள் இடைவெளிவட்டு மீண்டு பூசலாம். அல்லது நாயுருவி இலைகளுடன் சாதிக்காய் வைத்து மைபோல அரைத்து தேமல் மீது பூசிவரலாம். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

81

## அம்புலி மாமா கதைகள்

# மன்னனின் குரங்கு




லட்சுமிபுரத்தில் நந்தன் என்ற குரங்காட்டி வசித்து வந்தான். அவனிடம் ஓர் ஆண் குரங்கும் பெண் குரங்கும் இருந்தன. லட்சுமிபுரமும் அதன் சுற்று வட்டார கிராமங்களும் மருங்காபூரி ஜமீன்தாரின் ஆதிக்கத்தில் இருந்தன. நந்தன் தினமும் தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு ஒவ்வொரு கிராமமாகச் சுற்றி வந்து தன் குரங்குகளை வைத்து வேடிக்கை காட்டுவான்.

பின்னர் இரண்டு குரங்குகளும் கையில் தட்டை ஏந்திக் கொண்டு மக்களிடையே சுற்றி சாடையாக காசு கேட்க அவர்களும் சில்லறைகளை போட்டு அனுப்புவார்கள். அந்த வருமானத்தைக் கொண்டு நந்தனும் அவன் மனைவியும் வயிற்றுப் பிழைப்பைச் சமாளித்து வந்தனர். எப்படியாவது தன் குரங்குகளை மருங்காபுரி ஜமீன்தாரின் முன் வித்தை செய்வித்து அவர் மனதைக் கவர்ந்து அவரிடம் விவசாயம் செய்யத் தனக்கு ஒரு சிறிய நிலம் பெற்று விட வேண்டுமென்றும் நந்தன் நெடு நாளாகக் கனவு கண்டு கொண்டிருந்தான்.

ஒருநாள் கங்கை புரத்தில் குரங்கு வித்தைக் காட்டிக் கொண்டிருக்கையில் திடீரென மழை பெய்யத் தொடங்கியதால் நந்தன் தன் மனைவி மற்றும் குரங்குகளுடன் அருகிலுள்ள அனுமார் கோயிலுக்குள் புகுந்தான். அவர்களைக் கண்டதும் அனுமார் கோயில் அர்ச்சகருக்கு எரிச்சல் உண்டாயிற்று.

உன் குரங்குகள் கோயிலை அசுத்தம் செய்துவிடும்! நீ அவற்றை அழைத்துக் கொண்டு வேறு எங்காவது செல்! என்று அவர் அதட்ட தய்வு பண்ணுங்கள் ஐயா! கொட்டும் மழையில் நான் வேறு எங்கே போவேன்? என்று நந்தன் கெஞ்சிக்



கொண்டிருக்கையில் சற்றும் எதிர்பாராமல் பெண் குரங்கு அர்ச்சகர் முன் சென்று தன் வயிறைத் தொட்டுக் காட்டி விட்டு கீழே விழுந்து அவரை வணங்கியது.

பெண் குரங்கை உற்று நோக்கிய அர்ச்சகர் வியப்புடன் ஆகா! இந்தப் பெண் குரங்கு கர்ப்பமாக உள்ளது என்பதையே என்னிடம் சுட்டிக் காட்டியது. இத்தகைய அறிவாளியான குரங்கை அதுவும் அனுமாரின் பிரதிநிதியை இந்த நிலையில் தங்க விடாமல் விரட்டுவது பாவம்! என்றவர் நந்தனை நோக்கி பிரசவம் ஆகும் வரை நீ இங்கேயே தங்கு! என்று அனுமதி கொடுத்தார்.

சில மணி நேரங்களிலேயே பெண் குரங்கு ஓர் ஆண் குட்டியை ஈன்றது. உடனே தகப்பன் குரங்கு அர்ச்சகரைச் சென்று வணங்கி சைகையில் ஏதோ கேட்டது. நந்தனின் மனைவி அர்ச்சகரே! தாங்கள் இடம் கொடுத்ததற்கு நன்றி கூறுகிறது. மேலும் தன் பிள்ளையின் எதிர்காலத்தைப் பற்றி உங்களிடம் ஆருடம் கேட்கிறது என்றாள்.

நான். மனிதர்களுக்குத்தான் ஆரூடம் சொல்வது வழக்கம் என்றவர் பின்னர் ஒரு தாளில் குட்டி பிறந்த நேரத்தை எழுதி ஏதோக் கணக்குப்போட்டார். பின்னர் நந்தனை நோக்கி இப்போது பிறந்துள்ள ஆண் குட்டி மற்ற குரங்குகளை விட இது அபாரமாக வித்தை காட்டும். ஆனால் ராஜ வமிசத்தினரைத் தவிர மற்றவர்களின் காணிக்கையை இது ஏற்காது என்றார். ஆகா என் கனவு பலிக்கும் நாள் வந்து விட்டது என்று குதூகலித்த நந்தன் பின்னர் அர்ச்சகருக்கு நன்றி தெரிவித்து விடைப் பெற்றுக் கொண்டான்.

ஒரே ஆண்டில் பல அபாரமான வித்தைகளைக்



கற்றுக் கொண்ட குட்டிக்குரங்கு சென்ற இடமெல்லாம் காண்பவர்களின் பலத்த கை தட்டலைப் பெற்றது. ஆனால் அர்ச்சகர் கணித்தப்படியே அவர்கள் தரும் காணிக்கைகளை அது ஏற்க மறுத்து வந்தது. அதையே ஒரு பெரிய வியப்பான விடயமாக எடுத்துக் கொண்டு பொதுமக்கள் அந்தக் குரங்கை மிகவும் போற்றிப் புகழ்ந்து விட்டு சில்லறைகளை அவற்றின் பெற்றோரிடமே கொடுத்தனர்.

காண வந்தவர்களிடமெல்லாம் நந்தன் அதன் பெருமையை எடுத்துக் கூறி ராஜ வமிசத்தைச் சேர்ந்தவர்களிடம் மட்டுமே இது காணிக்கையை ஏற்றுக் கொள்ளும் என்று கூறுவான்.இதனால் மக்கள் அதைச்செல்லமாக மன்னனின் குரங்கு என்று அழைத்தனர்.இவ்வாறு குட்டிக்குரங்கின் பெயரும் புகழும் எல்லா கிராமங்களிலும் பரவி இறுதியாக மருங்காபுரி ஜமின்தாரின் காதுகளையும் எட்டியது. அதை ஜமின்தார் ரசிக்கவில்லை. ஆகையால் தன் திவானை அனுப்பி விசாரித்து வரும்படி கூறினார்.

முழு விபரங்களுமறிந்த பின் திவான் ஜமீன்தாரிடம் வந்து ஐயா ராஜ வமிசத்தைச் சேர்ந்தவர்களிடம் மட்டுமே அந்தக் குரங்கு அது பணத்தை ஏற்குமாம் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நமது ஜமீனுக்கு அந்தக் குரங்காட்டியை அழைத்து குரங்கை வித்தைகள் காட்டச் சொல்வோம். நீங்கள் மாறுவேடமணிந்து வாருங்கள் கடைசியில் எல்லாரும் காசு கொடுக்கும்போது நீங்களும் அதற்கு கொடுங்கள்.

அது உங்களிடம் மட்டுமே பெற்றுக் கொண்டால் நீங்கள் ராஜ வமிசத்தைச் சேர்ந்தவர் என்று மக்கள் புரிந்து கொள்வர். அப்படி நடந்தால் அவனுக்கு ஏதாவது பரிசு கொடுங்கள் என்று கூறியவுடன் ஜமீன்தாருக்கே அந்தக் குரங்கைக் காண ஆர்வம் ஏற்பட்டது. உடனே அவர் அதற்கான ஏற்பாட்டை செய்தார். செய்தி கேட்டு நந்தனுக்கு மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. அவன் ஆவலுடன் எதிர்பார்த்த அந்த நாள் வந்தது.

ஜமீன் மைதானத்தில் பெருந்திரள் கூட நந்தன் குட்டிக் குரங்கை வித்தை காட்டச் செய்தான். ஆனால் அவனுக்கு பெருத்த அதிர்ச்சியைத் தந்தது அன்றைய நிகழ்ச்சியைக் காண ஜமீன்தார் வராதது தான்! தன்னுடைய மனக்கோட்டைகள் இவ்வாறு இடிந்து போகும் என்று நினைக்காத நந்தன் அவ்வளவாக ஆர்வமின்றி அன்றைய நிகழ்ச்சிகளை குட்டிக் குரங்கின் மூலம் ஓர் இயந்திரம் போல் செய்வித்தான்.

நிகழ்ச்சி முடிந்ததும் எல்லாரும் குட்டிக் குரங்கை சோதிக்க சில்லறைகளைத் தந்த போது வழக்கப்படி அது யாரிடமும் ஏற்க மறுத்தது. கடைசியில் பெரிய தலைப்பாகை அணிந்த ஆஜானுபாகுவான ஓர் அயலூர் ஆசாமி ரூபாய் நோட்டுக்கள் தர அதை ஆவலுடன் பெற்றுக் கொண்டு அவருக்கு வணக்கமும் தெரிவித்தது.

ஆ! என்று வியப்புடன் கூவிய அந்த ஆள் த்ன் வேடத்தைக் கலைக்க அதுதான் மாறுவேடத்திலிருந்த ஜமீன்தார் என்று அனைவருக்கும் தெரிந்தது. ஜமீன்தார் கூடியிருந்த மக்களைப் பார்த்து இன்று நடந்த நிகழ்ச்சியிலிருந்து மிருகங்களின் அறிவாற்றலைக் கண்கூடாக காண நேர்ந்தது. எத்தனை சிறிய குட்டிக் குரங்கு எத்தனை அற்புதமாக வித்தைகள் செய்தது? அது மட்டுமல்ல! மிருகங்களுக்கும் நம்மைப் போல் சில அபூர்வ சக்திகள் உண்டென்று அறிந்தேன். இதற்குப் போய் ஏன் இந்தப் பெயர் என்று நான் முதலில் எண்ணினேன்.

இப்போது அந்த பெயர் பொருத்தமானது என்று உணர்கிறேன். இத்தகைய மிருகங்களைப் பாது காப்பது என் கடமை! ஆகவே விரைவிலேயே மிருகங்களின் சரணாலயம் ஒன்று தொடங்கப் போகிறேன். மன்னனின் குரங்கு அவற்றின் தலைவனாக இருக்கும். இறுதியாக குட்டிக் குரங்கிற்கு வித்தை கற்பித்த நந்தனுக்கு ஒரு காணி நிலம் தானமாக வழங்கப் போகிறேன்! என்று கூறி முடிக்க கூடியிருந்தவர்கள் கை தட்டினர். தான் கேட்காமலே தனக்கு நிலம் தானமாகக் கிடைத்ததை எண்ணி நந்தன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

# இந்திய அரசியல் நிலைமைகளை பொறுமையுடன் ஆராயும் வடிவேலு

ரெடி...டேக்...ஆக்ஷன் சொல்கிறார் அந்த 75 வயது லேடி டைரக்டர். எட்டு மாதம் சுமந்து என்னை ஈன்றெடுத்த தாயே- புலிகேசி வசனத்தைப் பேசி புல்லரிக்கவைக்கிறார் வடிவேலு. சுற்றி வேடிக்கை பார்க்கும் உறவுகள் கைதட்டி ஆரவாரிக்கிறார்கள்.

ஏய் வடிவேலு... சொன்னாலும் சொல்லா ட்டியும் நீ எட்டு மாசத்துலயே பொறந்த புள்ளதான். புலிகேசி டைரக்டரு அவரா இந்த வசனத்த எழுதினாரா...இல்ல நீயா எடுத்து வுட்டியா? அந்த 75 வயது டைரக்டர் விழுந்து விழுந்து சிரிக்கிறார். அவர் வடிவேலுவின் தாய் சரோஜினி. ஆத்தா...எந்தெய்வமே...ஒம் மொகத்துல இப்பத்தானே சிரிப்பைப் பார்க்குறேன். ஊரு ஒலகத்தையே சிரிக்கவெச்ச நானு ஓடுற ஓட்டத்துல ஒங்கள எல்லாம் மறந்துட்டேன் அம்மா. ஒன்னைய ஆஸ்பத் திரிக்கு அள்ளிட்டுப் போனப்ப தான் பெத்தெடுத்த இந்த ஆத்தாவை விட்டுட்டா காலுல றெக்கையக் கட்டிக்கிட்டுப் பறந் தோம்னு மனசு குறுகுறுத்துச்சு. எங்களோட வைத்தியம் முடிஞ்சிடுச்சு. இனிமே உங்க வைத்தியம் தான் வடிவேலு அம்மாவுக்கு முக்கியம்னு மதுரை அப்போலோ ஆசுபத்திரி டாக்டருங்க சொன்னப்ப தான் என் மனசு குளிர்ந்துச்சு. எந்தாயக் காப்பாத்துற பாக்கியம் எனக்கு அமையனும்கிறதுக்காகவே இறைவன் இப்படியொரு இடைவெளியை உண்டாக்கி இருக்கான்.வழக்கம் போலவே பரபரப்பா சுத் திக் கிட்டு இருந்திருந்தா இன்னிக்கு ஒம் பக்கத் துல உக்காந்து சிரிக்கவெக்கிற பாக்கியம் அத்துப் போயிருக்கும் என்னையப் பெத்த அம்மா!

**வடிவேலு கண்கலங்க ஆறுதலாக அவரை மார் போடு அணைத்துக் கொள்கிறார் சரோஜினியம்மா.**

கடந்த இரு வாரங்களாக அம்மா முன்னால் தன் காமெடிக் காட்சிகளை நடித்துக் காட்டி அவருக்கு சிரிப்பு வைத்தியம் செய்து கொண்டிருக்கிறார் வடிவேலு.

என்ன கையைப் புடிச்சு இழுத்தியா...?

இதெல்லாம் நரம்பு இல்ல தாயி... நீங்க போட்ட நூடுல்ஸூ...சங்கமே அபராதத்துல தான் ஓடிக்கிட்டு இருக்கு...

பலவித பாப்புலர் பஞ்ச்சுகளையும் வடிவேலு அள்ளிவிட...வயிறு வெடிக்கிறது சுற்றி அமர்ந்திருப்பவர்களுக்கு.

***பரபரப்பா நடிச்சுக்கிட்டு இருந்த வடிவேலு இப்படி வீட்டுக்குள்ளேயே இருக்கிறதில் உங்களுக்கு வருத்தம் இல்லையா?*** சரோஜினி அம்மாவிடம் கேட்டேன்.

"அவன் நடிச்சு ஓய்ஞ்சிட்டதா நீங்க நெனைக்கீங்களா... அடப்போங்கப்பா. அவன் சம்பாதிக்க வேண்டிய புகழும் பணமும் இனிமே தான் இருக்கு. இது வரைக்கும் அவன் நடிச்ச தெல்லாம் பத்து சதவீதந்தான். இனித்தான் இருக்கு பாக்கி தொண்ணூறும்! எம் புள்ள திரை யில நடிச்சதை நான் பாத்திருக்கேன். ஆனா



தாயுடன் வடிவேலு...

நேர்ல அவன் பண்ற கூத்தும் கும்மாளமும் கொஞ்சமா நஞ்சமா? எங்க வீட்டுக்காரரு இறந்தப்ப புள் ளைங்க எல்லாரும் வருத்தப்பட்டாக. அப்போ நான் வடிவேலுகிட்ட சொன்னேன் 'அப்பா செத் துட்டார்னு. அழாதப்பா ... நம்மளோட கஷ்டத்தை எல்லாம் அவரு அங்கே கொண்டுக்கிட்டு போயி ட்டாருனு நெனச்சு நிம்மதியா இரு'னு இப்பவும் அந்த ஓய்வு நல்லதுக்கு தான்பா... உனக்குத் கெடு தல் பண்றவங்கள நம்ம குலசாமி அய்யனார் பார் துப்பார்'னு எம் புள்ளைக்குத் தைரியம் சொல்றேன். எம் புள்ள மார்க்கெட்டு போயி வீட்ல கெடக் கல தம்பி. அது இப்போ கோடம்பாக்கத்துக்கு லீவு விட்டிருக்கு... அம்புட்டுத்தேன்! வாய் கொள்ளாத பூரிப்பில் சிரிக்கிறார் சரோஜினி.

**ஓம் பேட்டி போதும்மா... இனி நான் பேசிக்கி றேன். வான்ட்டடாக வருகிறார் வடிவேலு.**

***எப்போ தான் ரீ என்ட்ரி கொடுக்கப் போறீங்க.***

" கொடுப்போம்ணே ஏன் அவசரப்படணும்? இப்பவும் நிறையப்பேர் கூப்பிட்டுக்கிட்டுத்தான் இருங்காங்க. ஆனா இப்போதைக்கு காமமெடி ரோல் பண்ண எனக்கு விருப்பம் இல்லண்ணே. இத்தன நாள் இடைவெளிக்குப் அப்புறம் வார ப்ப நம்ம என்டரி டெரரா இருக்கணு மில்ல? அதுக் காகத்தான் ஹீரோ ரோல் பேசிக்கிட்டு இருக் கேன். புலிகேசி பார்ட் டூ ஒரு பக்கம். தெனாலி ராமன்கிற கதை ஒரு பக்கம்னு டிஸ்கஷன் ஒடிக்கிட்டு இருக்கு. சம்மர் முடியட்டும்ணே... மக்களுக்கு பம்பர் பரிசு கொடுத்திடுவோம்.

***பெத்த ஆத்தாவை தாங்கு தாங்குனு தாக்குறீங்க... ஆனா முதல்வர் அம்மாவைப் பத்தி எதுவுமே சொல்றது இல்லையே... அவங்க ஆட்சி எப்படி இருக்கு?***

ஆட்சியைப் பத்தியெல்லாம் பேசுற நிலை யில நான் இல்லண்ணே... ஆனா அவங்களைப் பத்தி நச்சுனு நாலு வார்த்தையில நான் சொல்ல நினைக்கிறது இதுதான். காலுக்கு உதவாத செருப்பை கழட்டி எறியுறதுல அவங்க கரெட்டான முதலமைச்சர்.

**தேர்தல் வெற்றிக்கு கூட்டணிதான் முக் கியம்கிற இந்தக் காலகட்டத்துல ஒருத்தங்க வேண் டாம்னா, அடுத்தவங்க சேர்த்துக்கப்போறாங்க. அப்படி ஒண்ணு நடந்தா?"**

" அது காலுக்கும் கேடு... அதை மாட்டிக் கிற ஆளுக்கும் கேடு!"


***"நீங்க இப்படிச் சொல்றீங்க. ஆனா, என்னை அடக்க நினைப்பவர்கள் அழிந்து போவார்கள்' னு சொல்றாரே விஜயகாந்த்?"***

" ஏங்காதுல அப்படி ஏதும் விழலையேண்ணே... ஏங்காதுல கேட்குற குரல் என்ன தெரியுமா ண்ணே... ' நா அடங்கிப்பல மாசமாச்சு... தேவையில் லாம ஏன் என்னையவே சீண்டுறீங்க. இது நல்லது இல்ல... யாருக்கு, எனக்கு!' அப்படின் னுதான் யாரோ புலம்புற மாதிரி இருக்கு. எம் படத்துல பாக்குற அத்தனை கேரட்டர்களை யும் ஒரு சேரப் பாக்குற மாதிரி இருக்குண்ணே. ஸ்நேப் பாபு, நாய் சேகர், கைப்புள்ளனு சிரி ப்பா பார்த்த கேரக்டர் எல்லாம் ஒண்ணு சேர் ந்து சீரியஸா பேசுற மாதிரி, தானே இருக்கு? சினிமாங்கிறது நிழல். நிஜ வாழ்க்கை வேறண்ணே... நகைச்சுவை, இசை, பைட்னு மொத்த இரத்தமும் உடலோடும் உயிரோடும், கலந்து கட்டி மெனக்கெட்டுச் செய்கிற வித்தை ண்ணே சினிமா. ஒரு மாஸ்டரும் ஏராளமான பைட்டர்ஸூம் சேர்ந்து இரத்தம் சிந்தி நம்மள தைரியசாலியாகக் காட்டுகிற வித்தியாசமான உலகம்ணே... அங்க நாக்கைத் துருத்தி சேட்டையக் காட்டலாம்ணே. ஆனா, மக்கள் பிரதிநிதிகளும் முதல்வரும் அமர்ந்திருக்கின்ற ஒரு சபையில நாக்கைத் துருத்துறது நாகரிகமாக படலையேண்ணே.... நான் அன்னைக்கு சொன் னது எல்லாம் இன்னைக்கு நடக்குறது நல்லாப் பார்த்தா தெரியும்ணே!"

***"இத்தகைய விமர்சனங்களை எல்லாம் சட்டையே செய்யாமல், நிச்சயம் ஆட்சியைப் பிடிப்போம்!'னு விஜயகாந்த் நம்பிக்கையோடு சொல்றாரே?"*** "என்னது ஆட்சியையா இம்புட் டுக்காணு பூச்சியைக்கூட அவரால பிடிக்க முடி யாது!" ***இன்றைய அரசியல் நிலவரங்களை எப்ப டிப் பாக்குறீங்க?"*** "இன்னும் நாள் இருக் குண்ணே.. ஏன் இம்புட்டு அவசரப்படுறீங்க? இவ்வளவு அவசரம் உமக்கு ஆகாதையா. நான் ரொம்பப் பொறுமையா இருக்கேன். அதனால தான் என் வீட்டுக்குப் பக்கத்துல எழுதிக் கிடக்குற கறுப்பு காமராஜரையும் கறுப்பு அண்ணாவையும் இன்னும் பல பல கறுப்புத் தலைவர்களையும் இந்தக் கறுப்பு பொறு மையோட பார்த்துக்கிட்டு இருக்கேன்!"

**நன்றி:-இணையம்**








சாவகச்சேரி நகராட்சி மன்ற ஊழியர் நலன்புரிச்சங்க கிறிஸ்து உயிர்ப்புத் திருநாள் நிகழ்வு மன்ற மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சு செயலாளர் செல்வி ஆர்.எஸ். துரைராசா மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் புனித லிகோரியார் ஆலய பங்கு சிறார்களின் நடனத்தோற்றத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு; சந்தேகநபர் விடுதலையானார்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் அமைப்பில் இணைந்து பேராயுதப் பயிற்சியும் போர் பொறிமுறைப் பயிற்சியும் பெற்றார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேக நபரினை நிரபராதி என யாழ். மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

1990 -1994 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விடுதலைப் புலிகளின் அமைப்பில் இணைந்து பேராயுதப் பயிற்சியும் போரில் பொறிமுறைப் பயிற்சியும் பெற்றவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குற்றத்தடுப்பு பிரிவினரால் குறித்த நபர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி ஓமந்தையில் வைத்து கைது செய்யப்பட்டார்.

நாவிதன் வெளி கல்முனை அம்பாறையினைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையாரான கோபாலசிங்கம் இளங்கோ வயது (38) எனும் குடும்பஸ்தரே கைது செய்யப்பட்டு பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டு குற்ற ஒப்புதல் செய்தல் வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் கடந்த மாதம் 23 ஆம் திகதி குறித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் யாழ். மேல் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டது.

குறித்த நபருக்கு கெதிராக வேறு சான்றுப்பொருட்கள் இருக்கின்றனவா என்பதனை ஆராய்வதற்காகவும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காகவும் நேற்று வரை ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மீண்டும் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேச நபர் சார்பில் சட்டத்தரணி எம்.றெமிடீயஸ் ஆஜராகியிருந்த நிலையில் குறித்த நபருக்கு எதிராக வேறு எந்த குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படாததால் குறித்த நபர் குறித்த வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

மேலும் இவருக்கெதிராக வவுனியா மேல் நீதிமன்றிலும் குறித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தினை சான்றாக வைத்து வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதனால் குறித்த நபர் தொடர்ந்தும் விளக்கமறியலில் உள்ளார். (ந-4)

## மீள்குடியேற்றத்தின் பின் 5 பாடசாலைகள் ஆரம்பம்

(மல்லாவி)

மீள்குடியேற்றத்தின் பின் துணுக்காய் கல்வி வலையத்தில் 5 பாடசாலைகள் கல்வி அமைச்சின் ஆலோசனைக்கு அமைய ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம் மல்லாவி, மு/சண்முகரத்தினம் வித்தியாலயம் மாங்குளம், மு.முத்துவிநாயகர் தமிழ் வித்தியாலயம் முத்தையன் கட்டு, மு/ ஆறுமுகம் தமிழ் த்தியாலயம் ஒட்டுசுட்டான், மு/பாண்டியன்குளம் ஆரம்ப பாடசாலை பாண்டியன்குளம் ஆகிய பாடசாலைகளே ஆரம்பிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-15)

# தமிழ் நாட்டுடன் சிறந்த உறவை அரசு மேற்கொள்ள வேண்டும்

## டியூ. தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் நாட்டுடன் சிறந்த உறவை விருத்தி செய்வதன் முக்கியத்துவத்தை கடந்த கால அரசாங்கங்களோ தற்போதைய அரசாங்கமோ உணரவில்லை. அதனால் தமிழக முதலமைச்சர் எவரும் சுதந்திரத்தின் பின் இலங்கைக்கு விஜயம் செய்யவில்லை என அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற லலித் அத்துலத் முதலி நினைவு சொற்பொழிவின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மொழி, கலாசாரம் உட்பட பல விடயங்களில் இலங்கையின் வட பகுதியிலுள்ள மக்களுக்கும் தமிழ் நாட்டிலுள்ள மக்களுக்கும் இடையில் பொதுவானவையாக உள்ளன என்பதை இலங்கை உணரத்தவறிவிட்டது.

இலங்கைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே 20 மைல்கள் மாத்திரமே இடைவெளி உள்ளது. அதேவேளை, உலக மயமாக்கலின் யதார்த்தத்தின் கீழ் இலங்கை தனது அயல் நாட்டை புறக்கணித்துவிட முடியாது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்றத் தூதுக் குழுவானது இவ்விஜயம் முழுவதும் இந்தியாவின் தேசிய நலன்களுக்காக செயற்பட்டமை இலங்கைக்க ஓர் முன்னுதாரணம் எனவும் அமைச்சர் கூறினார். புதுடில்லியை விட தமிழ் நாட்டுடனான இராஜதந்திர உறவுகளை இலங்கை ஊக்குவிக்க வேண்டும் என்றார். (அ-2)

## சேவைநலன் பாராட்டு



**திருமதி.செல்வராணி சுந்தரலிங்கம்**

இ.ஆ.சே. தரம்-I

இருபத்தெட்டு வருடங்கள் ஆசிரியராகவும் எமது பாடசாலையில் நான்கு வருடங்கள் அதிபராகவும் சிறப்புற கடமையாற்றி 14.04.2012 அன்று ஓய்வு பெற்றுச்சென்ற அதிபரின் சேவையைப் பாராட்டுவதுடன் தமது ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ இலங்கை நாயகி அம்மனின் ஆசியை வேண்டுகின்றோம்.


*பாடசாலைச் சமூகம்*

*யா/கல்வியங்காடு இ.த.க. பாடசாலை, கல்வியங்காடு.*

(8228)

# நாட்டிய மயில்-2012

### இது ஒரு போட்டி நிகழ்ச்சியாகையால்



## விதிகள்:-

**போட்டியில் கலந்துகொள்ளும் பரதநாட்டிய போட்டியாளர்கள்**

1. 18-28 வயதுக்கு இடையில் உள்ளவர்களாக இருக்கவேண்டும்.
2. போட்டிக்கு விண்ணப்பிக்கும்போது போட்டியாளர்களின் பிறப்புச்சான்றிதழ்களும் இணைக்கப்பட வேண்டும்.
3. போட்டியாளர்கள் நிகழ்வில் வர்ணம் 20-25 நிமிடம் வரை தமிழில் தயாரித்து வழங்கப்படவேண்டும்.
4. பக்கவாத்தியம், இறுவெட்டு அல்லது ஒலிநாடா பாவிக்கலாம்.
5. விண்ணப்பதாரிகள் இலங்கையில் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும் அல்லது அவர்களது பெற்றோர்கள் இலங்கையில் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
6. விண்ணப்பங்கள் 31.05.2012 க்கு முதல் கீழ்க்காணும் முகவரியில் சமர்ப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:- (இலவச சிங்கள ,ஆங்கிலக் கல்விநிலையங்கள்)

| | | |
|---|---|---|
| 29,பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் T.P:-0217200157 | 27/1, குளுதாகொட வீதி, மௌண்ட்லவேனியா. T.P:-0113088961 | A 9 வீதி, நுணாவில், சாவகச்சேரி, T.P:-0217200738 |

நிகழ்ச்சி அழைப்புக்குழுவின் தலைவர்
M.T.S இராமச்சந்திரன்( சட்டஆலோசகர்)

(சி-6411)

## பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பதவி- வாகனச்சாரதி

1. சம்பள குறியீட்டு இலக்கம்-312/13 சுற்றுநிருப இல.165/88
2. சம்பள அளவுத்திட்டம் :- ரூபா- 9950-11700 / 85 ×10-90 ×10

(சுற்றுநிருப இல-66/2006)

3. தகைமைகள்

5 ஆம் வகுப்பு சித்தியுடன் லொறி/ டிராக்டர் பெட்டியுடன் செலுத்தும் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் குறைந்தது நான்கு (04) வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

பதவி- வாகனச் சுத்திகரிப்பாளர்

1. சம்பள குறியீட்டு இலக்கம்-314/14 சுற்றுநிருப இல 165/88
2. சம்பள அளவுத்திட்டம் :- ரூபா -9200-10650 / 70 ×10 - 75×10

(சுற்றுநிருப இல-66/2006)

3. தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் ஒரு (01) வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது

ஆ) ஐந்தாம் (05) வகுப்பில் சித்தி பெற்றிருப்பதுடன் சிறந்த திடகாத்திரமுள்ளவராய் இருத்தல் வேண்டும்.

**பொது**

1. மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் சங்கத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தி விண்ணப்பத்தை தலைவர், பச்சிலைப்பள்ளி, பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து), புலோப்பளை வீதி, பளை எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
2. சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களின் சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
4. வயது 18 தொடக்கம் 45 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
5. விண்ணப்ப முடிவுத் திகதி -10.05.2012
6. இப்பதவிகளுக்கு விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தால் குறிப்பிடப்படும் றொக்க ஆதனப் பிணையைச் செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

செ.மார்க்கண்டு
தலைவர்
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்(வ-து)
பளை.

(சி-6434)

# சுஸ்மா சுவராஜ் குழுவினர் இங்கு வந்தது இலங்கை-இந்திய உறவைப் பலப்படுத்தவே



இந்திய நாடாளுமன்றக்குழுவின் இலங்கை விஜயமானது, இலங்கை-இந்திய அரசின் திட்டமிட்ட ஒரு நடவடிக்கை என்ற சந்தேகத்தை உருவாக்கியுள்ளது.

இந்த சந்தேகத்துக்கு பல காரணங்களை அடுக்ககூடிய அளவுக்கு இந்திய நாடாளுமன்றக் குழு இலங்கையில் செயற்பட்டுள்ளது. ஏறக்குறைய விடைகளுடன் இலங்கை வந்த குழு அவர்களின் விடைகளுக்கு கணக்கையே செய்துள்ளது.

இந்திய நாடாளுமன்ற குழு, இலங்கைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டது தொடக்கம் நாடாளு மன்றக் குழுவின் இலங்கை விஜயம் தொடர்பில் பல்வேறு கருத்துரைப்புகளும் வாதப்பிரதிவாதங்களும் தமிழகத்திலும் பேரினவாத தேசத்திலும் தமிழ்த் தேசியவாதிகளிடம் எழுந்துள்ளது.

குறிப்பாக, மூன்று இலட்சம் மக்கள் வவுனியா நலன்புரி நிலையங் களில் பாரிய ஒரு மனித அவலத் திற்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்தபோது, கலைஞர் கருணாநிதி அவரது மகள் தொடக்கம் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் இந்திய நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஈழத் தமிழருக்காக குரல் கொடுத்து வருபவருமான திருமாவளவன் வரை இலங்கைக்கு அனுப்பினார்.

இலங்கை ஜனாதிபதியுடன் உண வருந்திய தி.மு.க., 1200 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரம் பேர் மட்டுமே நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் இப்போது, இந்திய நாடாளு மன்ற குழுவில் தி.மு.க. இடம் பெறாது என அறிவித்தமையானது, ஈழத்தமிழர்களை மட்டுமின்றி வடக்கு-கிழக்கு தமிழர்களையும் ஏமாற்றும் ஒரு நாடகம் என்பதை புரிந்து கொள்ள ஆழ்ந்த அரசியல் அறிவு தேவையற்றதாகும்.

**நன்றி, இணையம்**

கொழும்பு வந்திறங்கிய இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை பாராளுமன்றம் சென்றதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடங்கலான அரசியல் கட்சியை சந்தித்தனர்.

அதன் பின்னர் கருத்து வெளியிட்ட குழுவின் தலைவரும் இந்திய தேசத்தின் எதிர்க்கட்சித் தலைவருமான சுஸ்மா சுவராஜ், இலங்கை அரசாங்கம் அபிவிருத்தி வேலைகளை செய்வதை விடுத்து, இனப் பிரச் சினைக்கான தீர்வினை அரசு முன்வைக்க வேண்டுமென்றே மக்கள் விரும்புகிறார்கள் என தெரிவித்தார்.

இந்திய ஜனநாயக குடியரசின் எதிர்க் கட்சி தலைவரின் இந்த அறிவிப்பானது, உண்மையில் சிறுப்பிள்ளைத்தனமானது என்றே எண்ணத் தோன்றுகிறது. உண்மையில் இலங்கையைப் பொறுத்தவரை தென்னிலங்கையைவிட வடகிழக்கிலே அரசும் அரசு சாராத தொண்டு நிறுவனங்களும் பல்வேறு அபிவருத்தி வேலைகளை செய்கின்றமையினை யாரும் மறுக்க முடியாது.

அபிவிருத்திக்கூடாக இன நல்லிணக்கம் என்ற பேரினவாதத்தின் சிந்தனாசக்தியை தமிழ்மக்கள் ஏற்கனவே உடைத்தெறிந்துள்ளார்கள்.

குறிப்பாக, இறுதியாக யாழ்குடாவில் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும்கட்சி தனது அமைச் சர் பட்டாளத்தைக் கொண்டு யாழ்ப் பாணத்தில் முகாமிட்டு அமைச்சரின் கையைப் பலப்படுத்த பல்வேறு அபிவிருத்தி வேலைகளையும் திட்டங்களையும் உதாரணம் காட்டியபோதும் மக்கள் ஆளும் கட்சியை தமது வாக்குகளால் நிராகரித்த அதே வேளை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசு ஒதுக்கும் பணத்தைக் கூட சரியான வழியில் மக்களுக்கு செலவு செய்யாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே வெற்றிபெறச் செய்தார்கள்.

இதற்கான பிரதான காரணம், சலுகைகளையல்ல உரிமைகளையே தமிழ்த் தேசம் நாடியுள்ளது என்பது புலனாகியுள்ளது. இந்நிலையில் மக்கள் தமது வாக்குகளால் பேரினவாதத் தேசத்திற்கு சொன்ன விடயத்தை சுஸ்மா சுவராஜ் பேரினவாதத் தேசத்திற்கு சொன்னதை சிறு பிள்ளைத்தனமான விடயம் என சொல்வதைவிட எவ்வாறு அழைக்கலாம்.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் தேசியக்கூட்டப்பை சந்தித்தபோது தமிழர் பிரச்சினை தொடர்பில் எடுத்து கூறியதாகவும் தற்போதைய வடக்கின் நிலைபற்றி விளக்கியதாகவும் அறிவித்தார்.

இலங்கையில் தமிழர்களுக்கு இருக் கின்ற பிரச்சினை என்னவென்பது தெரியாமலா இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை வந்தனர்? இன்னும் 6 மாதம் சென்ற பின்னர் வேறு ஒரு குழு இலங்கை வந்தாலும் கூட்டமைப்பினரை சந்திப்பார்கள். அப்போதும் கூட்டமைப்பு தமிழர் பிரச்சினை தொடர்பில் குழுவினருக்கு எடுத்துரைத்ததாக ஊடகங்களுக்கு அறிக்கை விடுவார்கள்.

குறிப்பாக, யாழ் சென்ற இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ் அரச அதிபரை சந்திக்காத அதே வேளை, காணாமல் போனோரைத் தேடி கண்டறியும் குழுவினரையும் சந்திக்காமல் தவிர்த்து அமைச்சரை ஈழத்தின் எம்.ஜி.ஆர் என வர்ணித்ததுடன் அமைச்சரின் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே செயற்பட்டதை உணரமுடிகிறது.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நல்லூர் ஆலயத்தைத் தரிசிக்க எண்ணியபோதும் அமைச்சரால் நல்லூர் பகுதியில் யாழ்குடாவின் மீனவர்களை கொண்டு இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை இரகசியமாக ஒழுங்கு செய்தபோதும் அதனை அறிந்து கொண்ட இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நல்லூர் செல்லும் தமது திட்டத்தை கைவிட்டார்கள்.

அமைச்சரின் இரகசிய திட்டத்தை அறிந்துகொண்டு உடனடியாக தமது நிகழ்ச்சி நிரலினை மாற்றியமைத்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கூட்டமைப்பு எடுத்துக் கூறித்தான் வடக்கின் நிலைமை தெரியுமா என எண்ணுவதில் என்ன தவறு?

இலங்கையில் ஆயுதப் போராட்டத்தை ஊக்குவித்ததில் அன்றைய இந்திரா காந்தி தலைமையிலான இந்தி அரசிற்கு பெரிய பங்கு உண்டு. என்பது நாம் அறிந்த விடயமே. அவ்வாறாயின் இந்தியாவின் வெளிநாட்டு கொள்கை வகுப்பாளர்களுக்கும் றோ அமைப்பிற்கும் தெரியாத ஒன்றினையா கூட்டமைப்பு இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிற்கு விளக்கியுள்ளது?

வவுனியா புனர்வாழ்வு முகாமிற்கு சென்ற இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வவுனியா அரச அதிபரை கேட்ட கேள்விகளில் இருந்தே இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலங்கை தொடர்பில் எவ்வித அறிவும் அற்றவர்கள் என்பது தெளிவாகியது.

இலங்கை தொடர்பில் அறிவற்ற ஒரு குழுவை இந்திய வெளிநாட்டு கொள்கை வகுப்பாளர்கள் அனுப்பியமையானது இந்திய-இலங்கை அரசின் திட்டமிட்ட ஒரு செயல் என்பதை புரிந்துகொள்ளாத அளவிற்கு தமிழர்கள் ஒன்றும் ஞானசூன்யங்கள் அல்ல.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வவுனியா மெனிக்பாம் முகாமில் வவுனியா அரச அதிபரையும் மக்களையும் கேட்ட கேள்விகளை சுட்டிக்காட்ட வேண்டிய தேவை இருக்கின்றது.

முகாமிலிருந்து மக்கள் வெளியே செல்லாமா?

மக்களுக்கு உணவு கொடுக்கின்றீர்களா?

பாடசாலை இருக்கின்றதா? ஆசிரி யர்கள் இருக்கின்றார்களா?

எத்தனை குடும்பங்கள் உள்ளார்கள்?

காணி உள்ளதா? காணிக்கு உறுதி இருக்கின்றதா?

உங்கள் உறவினர்களை சந்திக்க அனுமதிக்கின்றார்களா?

என்பது போன்ற கேள்விகளையே கேட்டார்கள். இந்தியா நாடாளுமன்ற உறுப்பினர்களின் இவ்வாறான கேள்விகளுக்கான காலம் 2009 களின் இறுதிப் பகுதிகளிலும் 2010 களின் ஆரம்பங்களிலேயே இருந்தது.

2009 களில் இருந்து மீளாதவர்களையும் இலங்கையில் சமகால அறிவு அற்றவர்களையும் இந்தியா திட்டமிட்டே இலங்கைக்கு அனுப்பியதன் ஊடாக, மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக வாக்களித்த இந்தியா சிங்கள தேசத்துடன் அதன் உறவை பலப்படுத்தவே அன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ அல்லவென்பது தெரிகிறது.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான என்.வி.எஸ் நாச்சியப்பன் வவுனியா நலன்புரி நிலைய மக்களுடன் உரையாடியபோது, பிரபாகரனின் அட்கள்தான் ரஜீவ் காந்தியை கொன்றதாகவும் அப்படியிருந்தும் சோனியா அம்மா உங்களுக்கு உதவ எங்களை அனுப்பி இருக்கின்றார்கள் என தெரிவித்ததுடன், நாங்கள் மகிந்த ராஜபக்சவை சந்தித்து உங்களை சொந்த இடங்களில் குடியேற்ற ஒழுங்கு செய்கிறோம் என சொன்னதை எவ்வாறு எடுத்துக் கொள்வது.

தமிழகத்தில் எழுந்த ஈழ ஆதரவு கோசத்தை தவிர்க்கமுடியாத இந்தியா, இலங்கைக்கு எதிராக ஐ.நா. வின் மனிதஉரிமை பேரவையில் வாக்களித்ததையடுத்து, சீனாவின் பக்கம் அதிகமாக இலங்கை சாய்வதை தடுக்கவே இந்தியா நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை இந்தியா இலங்கைக்கு அனுப்பியது.



சர்வதேச ரீதியாக போர் குற்றம் மனித உரிமைக்கு மதிப்பளிக்காமை என பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியுள்ள இலங்கை அதனை பயன்படுத்த திட்டமிட்ட அதேவேளை இந்தியாவின் உறவை முற்றாக முறித்துக்கொண்டு சீனாபக்கம் சாயுமானால் மீள ஒரு அயுதமோதலை இலங்கையில் இந்தியா உருவாக்கும் என்ற நியாயமான பயமும் இலங்கைக்கு உண்டு.

# பதவியை துறந்தார் அஞ்சலா செனவிரட்ன

(கொழும்பு)

முன்னாள் அழகியும் நடிகையுமான அஞ்சலா செனவிரட்ன தாம் போதைப்பொருள் சஞ்சிகை சம்பவத்தில் தாம் அபகீர்த்திக்கு உட்பட்டுள்ளதாக சவுதி அரேபிய தூதுவராலய பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இங்கிலாந்தில் இருந்து அஞ்சலாவின் பெயருக்கு அனுப்பப்பட்ட மூன்று பொதிகளில் ஹசீஸ் போதைப்பெர்ருள் அடங்கிய சஞ்சிகைகள் அண்மையில் மத்திய அஞ்சல் பரிமாற்றகத்தில் சிக்கின.

இந்த நிலையில் அவர் இதுவரை வகித்து வந்த சவுதி அரேபிய தூதுவராலய தொழிலையும் நேற்று முன்தினம் இராஜினாமா செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த அஞ்சல்மூல போதைப் பொருள் கடத்தல் சம்பவத்திற்கும் தமக்கும் தொடர்பில்லை எனவும் சில ஊடகங்கள் தம்மீது குற்றம் இருப்பதாக தெரிவித்து செய்திகளை பரப்பி வருவதாகவும் அஞ்சலா கவலை வெளியிட்டுள்ளார்.

தாம் இவ்வளவு காலத்திற்கு எந்தவொரு போதைப் பொருள் கடத்தல் சம்பவத்துடனும் தொடர்புபட்டதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

356 கிராம் நிறையுடைய ஹசீஸ் போதைப்பொருள் அனுப்பப்பட்ட வீட்டு முகவரியில் தாம் 10 வருடங்களுக்கு முன்னரே வசித்ததாக அவர் கூறியுள்ளார்.

(அ-2)

# மேர்வின்ன தொகுதி அமைப்பாளராக ஏற்றுக்கொள்ள முடியாது

(கொழும்பு)

மக்கள் தொடர்பு அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் களனி பிரதேச தொகுதி அமைப்பாளருமான மேர்வின் சில்வாவை ஏற்றுக் கொள்ள முடியாது என களனி பிரதேச சபையின் தலைவர் பிரசன்ன ரணவீர உள்ளிட்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் ஒழுக்காற்று விசாரணைகள் துரிதகதியில் மேற் கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்துள்ளனர். எத்தனை கட்சிக் காரியாலயங்கள் அமைக்கப்பட்டாலும் அமைச்சர் மேர்வின் சில்வாவின் கீழ் வேலை செய்யமாட்டோம் என பிரதேச சபைத் தலைவர் பிரசன்ன ரணவீர தெரிவித்துள்ளார்.

தொகுதி அமைப்பாளராக அவரை ஏற்றுக்கொள்ளவும் மாட்டோம். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் சுயாதீனமாக சேவையாற்றுவோம்.

அமைச்சருக்கு எதிரான விசாரணைகள் துரிதகதியில் நடத்தப்பட வேண்டும். மாவட்டத் தலைவரான பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதி மற்றும் கட்சித் தலைமையுடன் எப்போதும் கைகோர்த்து செயற்படுவோம்.

ஆனால், மேர்வின் சில்வாவுடன் இணைந்து செயற்பட முடியாது.

(அ-2)

# 13+ திருத்தத்திற்கு அப்பால் மஹிந்த அரசாங்கம் பாயுமா?

## தெளிவுபடுத்த கோருகிறது ஐ.தே.க.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் இந்தியாவிற்கு அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட வாக்குறுதி குறித்து அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

13 ஆம் திருத்தச் சட்டமூல அமுலாக்கம் அல்லது அதனைத் தாண்டிய அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் ,

13 ஆம் திருத்தச் சட்ட மூலத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டமொன்றை வழங்குவதாக இலங்கை வாக்குறுதி அளித்துள்ளதாக இந்திய நாடாளுமன்ற பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் உண்மை நிலை மையை இலங்கை மக்களுக்கு அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். அரசில் தீர்வுத்திட்டம் தொடர்பில் தொடர்ந்தும் பரஸ்பர விரேதமான கருத்துக்களை வெளியிடுவதனை அரசாங்கம் இப்போதாவது நிறுத்திக் கொள்ள வேண்டும்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை முன்மொழிவுகள் தொடர்பில் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு இன்னமும் வெளியிடப்படவில்லை.

ஆளும் கட்சியில் அங்கம் வகிப்போர் ஆணைக்குழு முன்மொழிவுகள் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என கூறியுள்ளார்.

(அ-2)




★ 1607-எண்பதாண்டுப் போர்: கிப்ரால்ட்டரில் டச்சுக் கடற்படையினர் ஸ்பானிய கடற்படை கப்பலை தாக்கி அழித்தனர்.

★ 1829-மேற்கு அவுஸ்திரேலியாவில் சார்ல்ஸ் ஃபிரெமாண்டில் சலேஞ்சல் என்ற கப்பலில் வந்து தரையிறங்கி சுவான் ஆற்று குடியேற்றத்தை ஆரம்பித்தார்.

★ 1861-அமெரிக்க உள்நாட்டுப்போர்: கூட்டணி படைகள் வோஷிங்டன் டிசியை அடைந்தன.

★ 1862-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டணிப் படைகள் டேவிட் பராகுட் தலைமையில் நூசியானா வின் நியூ ஓர்லென்ஸ் நகரை கூட்டமைப்பினரிடம் இருந்து கைப்பற்றின.

★ 1864- அமெரிக்க உள்நாட்டுப் போர் ஆர்கன்சஸ் மாநிலத்தில் இடம் பெற்ற போரில் கூட்டமைப்பினர் பெரும் வெற்றி பெற்றனர்.

★ 1898-ஐக்கிய அமெரிக்கா ஸ்பெயின் மீது போரை அறிவித்தது.

★ 1915-முதலாம் உலகப் போர்: அவுஸ்திரேலியா, பிரித்தானியா, நியூசிலாந்து மற்றும் பிரெஞ்சுப் படைகள் துருக்கியின் கலிப் பொலியை முற்றுகையிட்டனஒஒ.

★ 1916-அயர்லாந்தில் இராணுவச் சட்டத்தை ஐக்கிய இராச்சியம் பிறப்பித்தது.

★ 1916-அன்சாக் நாள் முதற் தடவையாக நினைவு கூரப்பட்டது.

★ 1945-நாசி ஆக்கிரமிப்பு இராணுவம் வடக்கு இத்தாலியில் இருந்து விலகியது.

★ 1961-ரொபர்ட் நொய்ஸ் ஒருங்கிணைந்த மின்சுற்றுக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.

★ 1966-தாஷ்கெண்ட் நகரத்தின் பெரும் பகுதி நிலநடுக்கத்தால் அழிந்து 3 இலட்சம் பேர் வீடுகளை இழந்தனர்.

★ 1974-போர்த்துக்கலில் 40 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்த பாசிச அரசு கவிழ்க்கப்பட்டு மக்களாட்சி ஏற்படுத்தப்பட்டது.

★ 1982-காம்ப் டேவிட் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இஸ்ரேலியப் படைகள் முழுவதுமாக சினாய் தீபகற்பத்தில் இருந்து வெளியேறியது.

★ 1983-பயனியர் 10 விண்கலம் புளூட்டோ கிரகத்தின் சுற்றுப்பாதை யைத் தாண்டிச் சென்றது.

★ 1983-ஹிட்லரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் ஹிட்லரின் நாட்குறிப்புக்கள் நூலின் முதல் பகுதியை ஜேர்மனியின் ஸ்டேர்ன் இதழ் வெளியிட்டது.

★ 1986-சுவாசிலாந்தின் மன்னனாக மூன்றாம் முசுவாட்டி முடிசூடினார்.

★ 1988-இரண்டாம் உலகப் போரில் இழைத்த குற்றங்களுக்காக ஜோன் டெம்ஜானுக் என்பவருக்கு இஸ்ரேல் மரண தண்டனை விதித்தது.

★ 2005-இத்தாலிய ஆக்கிரமிப்பாளர்களால் 1937 இல் களவாடப்பட்ட 1700 ஆண்டுகள் பழைமையான சதுர நினைவுத்தூபியின் கடைசித் துண்டு எதியோப்பியாவுக்கு கொண்டு வரப்பட்டது.

★ 2005-ஜப்பானில் தொடரூந்து விபத்தில் 107 பேர் உயிரிழந்தனர்.

★ 2006-கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் தற்கொலைதாரியினால் மேற்கொள்ளப்பட்ட குண்டுவெடிப்பில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா படுகாயமடைந்து, 5 பாதுகாவலர்கள் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1599-ஒலிவர் குரொம்வெல், இங்கிலாந்தில் முடியாட்சியை நீக்கியவர் (இ.1658)

★ 1840-பியோத்தர் சாய்க்கோவ்ஸ்கி, ரஷ்ய இசையமைப்பாளர் (இ.1893)

★ 1906-புதுமைப்பித்தன், நவீன தமிழ் இலக்கியத்தின் ஒரு முன்னோடி (இ.1948)

★ 1940-அல் பசீனோ, அமெரிக்கத் திரைப்பட நடிகர்

★ 1976-டிம் டங்கன், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### சிறப்பு நாட்கள்


★ போர்த்துக்கல் -சுதந்திர தினம் (1974)

★ இத்தாலி நாசிகளிடம் இருந்து சுதந்திரம் (1945)



★ 1874- வானொலியைக் கண்டு பிடித்தவர் மார்க்கோனியின் பிறந்த தினம் (இ.1937)


# இளைஞர்களும் ஆன்மீகமும்



## ஆன்மீகம் 37

அறிவாளிகளில் பலர் தற்கொலை செய்துகொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குள் வறட்சியை, குறையை உணர்கிறார்கள். ஆதரவு உள்ளிருந்து கிட்டவேண்டும். தேவைப்படுபவை உணவும் தண்ணீரும் மட்டுமல்ல. ஆன்மீக பலம் உன்னைத் தூக்கி விடும். ஆன்மீகம் உன் வாழ்விலுள்ள வெற்றிடத்தை நிரப்பும். தற்கொலை விகிதங்களும், மனச்சோர்வடைவோரின் எண்ணிக்கையும் கூடிக் கொண்டே போகின்றன. ஏனெனில், சேவை செய்வதின் மதிப்பை பற்றி பேசப்படுவதில்லை. வாழ்க்கையில் திருப்தி அடையவேண்டுமானால் நீ சேவை செய்யவேண்டும்.

சேவை, செயல்களில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு உனக்கு சாதனா (ஆன்மீகப் பயிற்சிகள்) அவசியம். இல்லாவிட்டால், எல்லாசக்தியும் இழந்தது போல் உணர்வாய்.



விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இரு, நீ எப்போதெல்லாம் பொதுச்சேவை, சமூக சேவையில் ஈடுபடுகிறாயோ, அப்போதே நீ விமர்சனங்களைச் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும், நீ ஓர் உறுதியான பாறை போலிருக்க வேண்டும். எதுவும் உன்னை அசைக்க முடியாது, நீ விமர்சனங்களை வரவேற்க வேண்டும் சில சமயங்களில் விமர்சனம் கோபத்தால் அல்லது பொறாமையால் வரலாம். ஆனால், எந்த விதமான விமர்சனமும் உன்னை ஒதுங்கிப் போகவோ, மங்கிப் போகவோ செய்யக்கூடாது. யாராவது, உன்னை விமர்சித்தால் நீ ஒரு மூன்றாவது நபர்போல் நடந்துகொள். அப்போது உன்னை எதனாலும் தீண்டமுடியாது. உன்னால் அதிலிருந்து நல்ல சிலவற்றை எடுத்துக்கொள்ள முடிந்தால், நீ எரிய மாட்டாய்- உள்ளுக்குள் எரிந்து போகமாட்டாய்- உன்னால் அதை விட்டுவிட முடியும். உனக்கு விமர்சிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். தேவைப்படும்போது யார் விமர்சிப்பதில்லையோ, அந்த நண்பர்கள் பயனற்றவர்கள்! விமர்சனத்தின் நோக்கம் செம்மைப்படுத்திக் கொள்வதும் ஏற்றுக்கொள்வதும், மாற்றிக் கொள்வதும்தான். ஆனால், விமர்சனம் செய்யும் முறை கேட்டுக்கொள்ள முடியாத விதத்திலிருந்தால் எப்படி மற்றவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்? அம்பு அதன் இலக்கைத்தான் அடைய வேண்டும். உன்னுடைய விமர் சனம் வீணாகாமல் பார்த்துக்கொள். நீ இந்தத் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். இதைக் கற்றுக்கொள்ள முடியாது. அந்த மனிதர் அதை ஏற்றுக்கொள்ளக் கூடிய மனநிலையில் இருக்கிறாரா? என்று ஒரு சொந்தமான உணர்வுடன், ஆதரவாகப் பார்.

நீ எதையாவது செய்ய நினைக்கும்போது, உன் பலத்தைக் கவனி, உன்னுடைய பலவீனம் எதுவென்றால், நீ அடுத்தவர்களின் பலத்தைப்பார்ப்பதே. நீ பந்தயத்தில் ஓடிக் கொண்டிருக்கும்போது, உன்னுடைய கவனம் பாதையில் இருக்க வேண்டுமே தவிர, யார் உனக்கு அடுத்ததாக வருகிறார் என்பதில் இல்லை. கடிவாளம் பூட்டிய குதிரையைப் போன்று உன் பாதையை மட்டுமே பார். யார் வேண்டுமானாலும் (அவனோ, அவளோ), எது வேண்டுமானாலும் செய்துகொள்ளட்டும்.

நீ எந்த வேலையைச் செய்தாலும் அது கடமை உணர்வோடு செய்யப்பட வேண்டும். இல்லாவிட்டால், உனக்கு விருப்பம் இருக்கும் போது ஒன்றைச் செய்வாய், இல்லாதபோது அதை நிறுத்திவிடுவாய்.

உன்னுடைய விருப்புகளும், வெறுப்புகளும் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும். சேவை செய்வதன் மூலம் உண்மையான சந்தோசத்தைக் காண முடியும். உன்னுடைய பொறுப்புகளும், கடமையுணர்வும் சில சமயங்களில் கவலைகளையும், அழுத்தங்களையும் உருவாக்கும். இதைக்கையாளச் சிறந்த வழி அதை எதிர்த்துப் போராடாமல் இருத்தல். சிறிது நேரம் அழுத்தத்துடன் இருப்பதால், ஒன்றும் மோசமில்லை. ஆனால், அதுவே உன்னை அழுத்திவிடாமல் கவனி.

வாழ்க்கையில் உண்மையான விடயங்களை சிந்தித்தல், தியானம் செய்தல் போன்ற ஆன்மீக விடயங்கள் வாழ்க்கைக்குப் பெரிதும் உதவும். பிரார்த்தனை செய்வதும் அப்படித்தான். நீ எந்த அளவு நிகழ்காலத்திலிருக்கிறாயோ, அந்த அளவு உன் நினைவுத்திறன் கூர்மையடையும்; உன் கவலைகள் குறையும். எதிர்காலத்தைப் பற்றிய உன் நோக்கு தெளிவடையும். இயற்கை உன்னை அந்த விதமாகப் படைத்திருக்கிறது. பல சமயங்களில் திருப்தியான மனநிலை மெத்தனத்தைக் கொண்டு வருமென நினைக்கிறாய், அப்படி அல்ல. அதிருப்தியான மனநிலை ஆக்கத்திறனையும் கொண்டு வருவதும் இல்லை. அப்படியிருந்தால், அதிக அழுத்தத்தில் உள்ள நாடுகள் அதிக ஆக்க சக்தியுடனிருக்கும். உதாரணம் 25 வருடங்களாக யுத்தத்தால் சூறையாடப்பட்டுவரும் ஆப்கானிஸ்தான்.

உன் பழகும்திறனை மேம்படுத்தி, பரஸ்பரம் சொந்தமான உணர்வை எல்லாரிடமும் ஏற்படுத்திக்கொள். நீ முன்னமேயே தெரிந்த மக்களுடன் இருப்பதை விரும்புகிறாய்- அப்போது உன்னால் சொந்தத்தைப் பல மடங்காக பெருக்க முடியாது. உன்னுடைய நண்பர்களுடன் மட்டுமே இருப்பதைத் தவிர்த்தால், புதுப்புது நண்பர்களை ஏற்படுத்திக்கொள்ளலாம். உன் உள்ளார்ந்த ஞானத்தாலும், புன்னகையாலும அவர்களை உன் வசமாக்கு. ஒளிவீசும் மெழுகுவர்த்தி மற்றொன்றை ஒளி வீசச்செய்வது போல்- அவர்களுடன் அப்படியே இரு.

பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

(தொடரும்)


# உங்கள் 'கைரேகை பலன்கள் 37

### இருதய இரேகை அமைப்பும் பலாபலன்களும்

**6.** இருதய இரேகைபுதன் மேட்டில் உற்பத்தியாகிக் குறுக்கே, பின்னமின்றி நேரே குருமேட்டையுங் கடந்து இறுதிவரை சென்றிருந்தால் இருதய சக்தியின் ஆட்சிக்குட்பட்டிருப்பவர் என்பதைக் குறிக்கும். சுலபத்தில் பொறாமைக்குட்படுவார். அவ்விதமே மிகச் சுலபமாய் நேசங் கொள்வர். இச்சைப்பட்டுக்கிட்டாத வஸ்துக்காகச் சங்கடப்படுவர். இத்தகையோர் இருதய உணர்ச்சிக்குட்பட்டிருப்பதால், புத்திக்கு வேலையில்லை. எனவே, ஆராயுந் தன்மையிராது. முடிவான தீர்மானத்தில் புத்தி நின்றுவிடும். நினைத்த மாத்திரம் எவ்வேலையையும் செய்து முடித்திடுவர். ஆழ்ந்து யோசிப்பதென்பது கிடையாது. இருதய இரேகை முன்னிலும் நன்கு பதியாமல் மிக மெல்லியதாகக் காணப்பட்டு, சந்திர மேடும் வலுத்திருந்தால் பொறாமைக் குணமே மிகுந்திருக்கும். எந்தக் காரியத்திலும் சித்திபெறுவது அபூர்வம். வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வையும் அதன் பலாபலன்களையும் அடுத்தடுத்து அனுபவிப்பார். பொதுவாய் நீண்ட இருதய இரேகையுடையோர் முன் கோபியாயும், அவசரக்காரராயும், மூர்க்ககுணமுள்ளவராயுமிருப்பர். தளகர்த்தர், யுத்தவீரர் முதலியவர்களுக்கும் இருதய இரேகை ஒரு நீளமாகக் கையில் குறுக்கே அமைந்திருக்கும். ஏவினவுடன் செய்து முடிக்கத்தக்கவராவர்.


சக்தி

இருதய இரேகை யாதாமொரு கிரகமேட்டை மேல்நோக்கி வளைந்து செல்லும். இதனால் அந்தக்கிரக ஆதிக்கம் அந்தக்கால அளவில் ஏற்படுமெனக்குறிக்கும். இவ்விதம் எல்லாக் கிரகங்களையும் பாதிக்காது. கிரகச் சார்பில் சென்ற இருதய இரேகை யதாஸ்தானத்தில் திரும்பிச்செல்லும். கிரகச் சார்பில் எவ்வளவு காலமிருக்கிறது என்பதையும் அக்காலத்திய வயதையும் கண்டறிய வேண்டும். கிரகாதிக்கத்துக்குட்பட்ட காலத் தைக் கவனமாகக் குறிப்பிடத்தக்கது. இது நல்ல சந்தர்ப்பத்தை அனுசரித்து நிற்கும் கிரக வலிமைக்குட்பட்டு உயிர்ப்புள்ள சக்தி செல்வதாகும்.



**7.** இருதய இரேகை தாழ்ந்து புத்தி இரேகைக் கருகில் படிந்து சென்றிருந்தால், அந்தக்கால அளவில் புத்தியின் ஆட்சியைக் காட்டும். இந்தக்காலத்தில் திடஞானமற்று, தன்னலமும் பொறாமையும் அலட்சிய புத்தியும் குடிகொள்ளும்.

**8.** இருதய இரேகை உற்பத்தியில் புத்தி இரேகையில் கலந்து பிறகு தனித்து விடுமாயின் சுதந்திரமிழந்து புத்திப் போக்கில் திருப்பிவிடும். இருதய இரேகை தனித்துச் செல்லுங்கால், அந்தக் கால அளவிலிருந்து மேன்மையைக் கொடுக்கும். இருதய




### ரேகைகளும் கிரகங்களும்

இரேகை குறுக்கீடாய் செல்லுங்கால் உயர்வு தாழ்வு காட்டாதிராது. நான்கு விரலுக்குரிய மஹாதெசையில் வீரமுள்ள கிரகம் தன் வசமாக்காமல் விடாது. இரேகையோடு சோதிட ஆராச்சி செய்வோருக்கு ஒத்திட்டுப் பார்க்குங்கால் இது புலனாகும்.

சுக்கிர ஆதிக்கமுண்டானால் புத்திதான் ஆட்சிக்குரியதாகும். இருதயம் வேலைசெய்வதில்லை. இருதய இரேகையின் மாறுபாடான வித்தியாசங்கள் ஒரு எல்லைக்குட்படா. கையில் பொதுவாகப் பல இரேகைகளின் அமைப்பைக் கொண்டு சித்தவிர்த்திக்கு இடைஞ்சல் அல்லது மாறுபாடு யாதெனக் கவனிக்க வேண்டும். இருதய இரேகை இராஜாவானாலும், புத்தி இரேகை மந்திரியாகும். இருதய இரேகை வாதத்தில் சர்வாதிகாரமுடையது. இதன் அமைப்பைக் கொண்டே வாழ்வின் மர்மங்களை அறியவேண்டும். இருதய இரேகை இட்ருற்றதுபோல் இரண்டு துண்டாயும், ஒன்று மேல்நோக்1கியும், மற்றது அதற்குத் தாழ்ந்தபடியில் அமைந்திருக்கும். வாழ்க்கையின் காலத்தையும் இரண்டாகப்பிரித்து ஒரு காலத்தில் வரும் உயர்வையும் மற்றொரு காலத்தில் வரும் தாழ்வையுங்குறிக்கும்.

(தொடரும்)

## அதிசய உலகம்...

# சாதனை படைத்த தேனீ மனிதன்



சீனாவைச் சேர்ந்த சீ பிங் என்ற நபர் தனது உடல் முழுவதும் சுமார் 3 இலட்சத்து 30 ஆயிரம் தேனீக்களை பரப்பி சாதனை படைத்துள்ளார்.

32 வயதாகும் பிங் முதலில் இராணி தேனியை தனது உடலில் விட்டு பேசின் வடிவான பாத்திரத்தில் தேனீக்களுடன் ஏறி நின்றுள்ளார். அப்போது ஏனைய தேனீக்களும் இராணித் தேனி இருக்கும் இடத்தை நோக்கி நகரலாயின. எனினும் இறுதியில் சில தேனீக்கள் அவரின் உடலில் இருந்து வெளியேறிவிட்டன.

# தந்திரோபாயமான விளையாட்டு வீரன்




இளைஞன் ஒருவன் தந்திரோ பாயமாக Tricking எனும் விளையாட்டில் ஈடுபட்டு வியப் பில் ஆழ்த்துகின்றான். Tricking எனப்படுவது ஜிம்னாஸ்ட் டிக்கிற்கு ஈடான சுழற்சி, உதைகள், திருப்பங்கள் என்பவற்றை உள்ளடக்கியதான விளையாட்டு ஆகும்.


இதில் கரணம் தப்பினால், மரணமும் நிகழலாம். ஆனால் பிரண்டன் மக்கியூன் என்ற இளைஞன் மிகவும் தந்திரோபாயமான யுக்திகளைக் கையாண்டு அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையில் விளையாடுகின்றான்.

# பிரமாண்டமாக தயார் செய்யப்பட்ட பேர்கன்



பேர்கன் எனப்படுவது சிற்றுண்டி வகைகளுள் அடங்கும் ஒரு உணவுப்பொருளாகும். இவ் உணவானது ஜப்பானைச் சேர்ந்த மக்களால் அதிகளவில் விரும்பி உண்ணப்படுகின்றது. இதனை மிகப்பிரமாண்டமாக உருவாக்கி ஜப்பான் வாசி ஒருவர் சாதனை படைத்துள்ளார். சுமார் 1050 தட்டுக்களைக் (அடுக்கில்) கொண்டதாக இந்த பேர்கனை தயாரித்து அசத்தியுள்ளார்.

# தேளை உயிருடன் உண்ணும் மனிதன்



இந்த உலகில் எத்தனையோ விசித்திரமான உணவு பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன.

ஆனால், தேளை உயிருடன் உண்ணும் அதிசய மனிதனை காண்பது கடினம். இவர் ஊரில் பட்டினிப்பஞ்சம் ஏற்பட்டால் கூட அது இவரை பாதிக்காதாம்.

# சியோலை 3 நிமிடத்தில் சாம்பல் ஆக்குவோம்; தென்கொரியாவிற்கு வடகொரியா மிரட்டல்



கொரிய தீபகற்பத்தில் வடகொரியாவும் தென் கொரியாவும் எதிரி நாடுகளாக உள்ளன. கடந்த சில நாட்களுக்கு முன்பு வடகொரியா நிறுவன தலைவர் கிம் 2 சங் 100 ஆவதுபிறந்த தினத்தை விமர்சையாக கொண்டாடியது. இது குறித்து கருத்து தெரிவித்த தென்கொரிய ஜனாதிபதி லீ மியுஸ்பக்,

மறைந்த வடகொரிய தலைவர் கிம் 2 சங் குறித்து அவதூறாக பேசியதாக தெரிகின்றது. இதற்கு அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் தென்கொரியா மீது தாக்குதல் நடத்துவோம் என வடகொரியா பகிரங்கமாக அறிவித்தது.

அதற்குப் பதிலளித்த தென் கொரிய ஜனாதிபதி,

வடகொரியா தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க 4 ஆயிரத்து 250 கோடி ரூபா செலவில் தயாரிக்கப்பட்ட ஏவுகணை சோதனை நடத்தப் போவதாக சமீபத்தில் அறிவித்தார்.

அதற்குப் பதில் அளிக்கும் வகையில் வடகொரியா இராணுவம் நேற்று முன்தினம் மீண்டும் மிரட்டல் விடுத்தது. தலைவர் கிம் 2 சங்கை அவதூறாகபேசியதென்கொரியாவுக்கு விரைவில் பாடம் புகட்டுவோம். அந்த நாட்டின் தலைநகர் சியோலை 3 அல்லது 4 நிமிடத்தில் சாம்பல் மேபாக்குவோம் என கடும் எச்சரிக்கை விடுத்தது. இதனால் கொரிய தீபகற்பத்தில் கடும்போர் பதற்றம் நிலவுகின்றது. (அ-2)

# சிரியா மீது ஐரோப்பிய கூட்டமைப்பு பொருளாதாரத்தடை விதித்தது

உள்நாட்டு சண்டைகள் நடந்து வரும் மத்திய கிழக்கு நாடான சிரியா மீது புதிய பொருளாதார தடைகளை ஐரோப்பிய கூட்டமைப்பு விதித்தது.

இந்தக்கூட்டமைப்பு சிரியா மீது விதிக்கும் 14 ஆவது சுற்றுப் பொருளாதாரத் தடை இதுவாகும்.

ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் குடும்பத்தினரின் சொகுசு வாழ்க்கையைத் தடுக்கும் வகையில் ஆடம்பரப் பொருட்களை அந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு ஐரோப்பிய கூட்டமைப்பில் உள்ள 27 நாடுகள் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

ஆனால் சிரியாவில் சண்டை நிறுத்தத்தை கண்காணிப்பதற்கு ஐ.நா. பார்வையாளர்களை அங்கு அனுப்புவதற்கு சம்மதித்திருக்கும் ரஷ்யா, இந்த புதிய தடைகளுக்கு கண்டனம் தெரிவித்திருக்கின்றது.

சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் இந்தத் தடைகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை என்று ரஷ்யாவின் வெளிவிவகாரத்துறைஅமைச்சக செய்தித் தொடர்பாளர் அலெக்ஸாண்டர்லுகாஷெவிச்தெரிவித்துள்ளார்.

எனினும் சிரியாவில் அரசின் அடக்குமுறைகளுக்கு பதிலடி தருவதற்கு இதுபோன்ற உறுதியான நடவடிக்கைள் அவசியம் என்று ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளின் பிரதிநிதிக்ள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# சர்கோசிக்கு தேர்தலில் பின்னடைவு இரண்டாவது தேர்தல் மே மாதம்



பிரான்ஸ் நாட்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி சர்கோசி பின்தங்கியுள்ளார். எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி இரண்டாவது கட்ட தேர்தல் நடைபெறவுள்ளது.

பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசியின் பதவிக்காலம் முடிவடைவதை யொட்டி நேற்று முன்தினம் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. நேற்று முன்தினம் வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் சர்கோசிக்கு 27 சதவீத வாக்குகளும் இவரை எதிர்த்து போட்டியிட்ட பிராங்காய்ஸ் ஹோலண்டுக்கு 28.56 சதவீத் வாக்குகளும் லீ பென் என்பவருக்கு 18.12 சதவீத வாக்குகளும் கிடைத்தன.


இந்த தேர்தலில் 50 சதவீத வாக்குகள் யாருக்கும் கிடைக்காததால் மறு தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இரண்டாவது கட்ட தேர்தலில் சர்கோசி, பிராங்காய்ஸ் ஹோலண்ட் ஆகிய இரண்டு பேருக்கும் இடையே தான் போட்டி. மற்றவர்கள் இந்த தேர்தலில் போட்டியிட முடியாது.

எனவே 18 சதவீத வாக்குகள் பெற்ற லீ பென்னின் ஆதரவை சர்கோசி பெறவிளைவார் என எதிர் பார்க்கப்படுகின்றது. (அ-2)

# போர் புரிந்தகாலம் முடிந்தது; பேச்சுவார்த்தை நடத்தத்தயார்

## கிலானி தெரிவிப்பு



போர்க்காலம் முடிந்து விட்டது. காஷ்மீர் பிரச்சினை, தீவிரவாதம் உட்பட எல்லாவற்றுக்கும் இந்தியாவுடன் இனிமேல் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி கூறினார். பாகிஸ்தானின் வளர்ச்சியில் தொண்டு நிறுவனங்களின் பங்கு என்ற தலைப்பில் இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் ஒரு மாநாடு நடந்தது. இதில் அந்நாட்டு பிரதமர் யூசுப் ரசா கிலானிகூறுகையில்,

இந்தியாவுடன் போர் புரிந்த காலம் எல்லாம் முடிந்து விட்டது. காஷ்மீர், சியாச்சின், தண்ணீர், தீவிரவாதம் என்றுஎந்த பிரச்சினையாக இருந்தாலும் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதற்கு பாகிஸ்தான் தயாராகி விட்டது. இரு நாடுகளின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு எல்லாவற்றையும் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பது என்று கொள்கை முடிவெடுத்து விட்டோம். இந்திய பிரதமருக்கு நட்புடன் கை நீட்டுகிறோம்.

சியாச்சின் பனிமலைப்பகுதியில் பாகிஸ்தான் வீரர்கள் 138 பேர் பலியான நிலையில் அங்கிருந்து இராணுவத்தை வாபஸ் பெறுவதற்கு மக்கள் விரும்புகின்றனர். இதற்கு இந்தியாவுடன் பேச்சு நடத்த தயாராக உள்ளோம். தீவிரவாதம், பிரிவினைவாதத்திற்கு அறியாமையும் வறுமையும்தான் காரணம். அதை போக்குவதற்கு நடவடிக்கை எடுப்போம் என அவர் கூறினார். (அ-2)

# 3 ஆயிரத்திற்கு அதிகமானோர் எச்.ஐ.வி.தொற்றுக்கு ஆளாகினர்

இலங்கையில் 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் எச்.ஐ.வி வைரசால் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் எச்.ஐ.வி நோயாளர்கள் பட்டியலில் தினமும் ஒரு நோயாளி புதிதாக இணைவதாக வைத்திய பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விபரங்கள் தொடர்பிலான அவதானிப்புகள் எயிட்ஸ் தடுப்பு பிரிவுத் தலைவர் வைத்தியர் நிமல் எதிரி சிங்கவால் இனங்காணப்பட்டதுடன் அண்மையில் எயிட்ஸ் தொடர்பில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த வருடம் இலங்கையில் 150 எயிட்ஸ் நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். அத்துடன் 50 குழந்தைகள் எச்.ஐ.வி வைரசுடன் பிறந்துள்ளனர். இனங்காணப்பட்ட எச்.ஐ.வி.நோயாளிகளில் 61 சதவீதமானோர் மேல் மாகாணத்திலேயே இனங்காணப்பட்டுள்ளதாக இவ்வறிக்கை தெரிவித்திருக்கிறது. தவறான உடலுறவு மற்றும் தவறான குருதிப் பரிமாற்றம் எச்.ஐ.வி நோயினை பரவச் செய்கிறது.

இது குறித்து ராகம வைத்தியசாலை வைத்திய நிபுணர் ஜயதாதரி ரணதுங்க கருத்து தெரிவிக்கையில், கடந்த வருடத்தில் ராகம வைத்தியசாலையில் எச்.ஐ.வி வைரஸால் பாதிக்கப்பட்ட 8 பேர் இனங்காணப்பட்டதுடன் இவ் வருடத்தின் இரு மாதங்களுக்குள் 5 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றுடன் 79 சிபிலிசு நோயாளிகளும் 156 ஹேர்ப்ஸ் நோயாளிகளும் ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக அவர் தெரிவித்தார். (அ-2)

# வெளிநாடு சென்றவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படும்

## சமூக காப்புறுதிச்சபை தெரிவிப்பு

(கொழும்பு)

ஓய்வூதியம் பெறாத அனைத்து வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களுக்கும் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொடுக்க சமூக காப்புறுதிச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாடு சென்ற இலங்கையர்களுக்கான இத்திட்டத்தை செயற்படுத்தவென தூதரகம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, பிரதிநிதிகளின் சங்கம், சேவை புரிவோர் சங்கம் உள்ளிட்டவைகளின் உதவிகள் பெறப்படவுள்ளன.

குவைத் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கான வேலைத்திட்டம் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சமூக காப்புறுதிச் சபையின் பதில் தலைவர் மொன்டெகு சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் வெளிநாடு சென்றுள்ள அனைத்து இலங்கை பிரஜைகளுக்கும் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ-2)

# கரப்பந்தாட்டப் போட்டிகள்

மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழகத்தினால் யாழ். மாவட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட (செற்றப்) போட்டிகள் எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட முன்னணி அணிகள் பங்குபற்றவுள்ளன. இதில் ஆவரங்கால் மத்தி, ஆவரங்கால் இளைஞர், புத்தூர் கலைமதி, சாவகச்சேரி வளர்மதி, சாவகச்சேரி மோகனதாஸ், அச்சுவேலி ஸ்ரார், கே.கே. எஸ், நீர்வேலி ஐக்கியம், உடுப்பிட்டி நவஜீவன், சிவகுமாரன் போன்ற அணிகள் பங்குபற்றவுள்ளன. (அ-3-24)

# கமக்கார அமைப்பினருக்கு விசேட பொதுக்கூட்டம்

(மாங்குளம்)

மாங்குளம் கமக்கார அமைப்பின் விசேட பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கமக்கார அமைப்புத் தலைவர் சிவானந்தம் தலைமையில் மாங்குளம் கிராம சேவையாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

HNB, BOC வங்கிகளின் கடன் அறவிடல் தொடர்பாகவும் புதிய கடன்பெறல் தொடர்பாகவும் நீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவி பாவனை தொடர்பாக ஆராய்தல், முறியாக்குளம் புனரமைப்பு தொடர்பாக ஆராய்தல், புதிய விதை நெல் களஞ்சியப்படுத்தும் பை தேவையான விவசாயிகளை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

எனவே, இதற்கு கமக்கார அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(அ-9-261)

# விழுந்தது இடி முறிந்தது மரம்

வவுனியா நொச்சுமோட்டை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடி விழுந்ததன் காரணத்தால் பாடசாலைக்கு அருகில் இருந்த மரம் முறிந்து விழுந்து பாடசாலை கட்டடத்திற்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடியுடன் கூடிய மழை பெய்து வந்த நிலையில் மாலை 4 மணியளவில் நொச்சுமோட்டை அ.த.க.பாடசாலையின் அருகில் இருந்த மரம் திடீரென முறிந்து பாடசாலை கட்டடத்தினை சேதப்படுத்தும் வகையில் வீழ்ந்துள்ளது.

மழையின் பின்னர் ஊர் மக்கள் சென்று பார்த்தபோது இடி தாக்கியதிலேயே இம்மரம் முறிந்துள்ளமை கண்டறியப்பட்டது. இதனை அடுத்து அயலவர்கள் ஒன்று திரண்டு முறிந்த மரத்தினை அகற்றி பாடசாலை செயற்பாட்டுக்கு வழி சமைத்து கொடுத்தனர். (அ-9-266)


# உங்கள் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் பற்றி உங்களுக்குத் தெரியுமா ?



**இந்த அறிவிப்பு பொதுமக்களின் கவனத்திற்காக வெளியிடப்படுகிறது.**

1. பணத்தை வைப்பிலிடும் போது, வைப்புக்களை ஏற்கும் நிறுவனம் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கான அனுமதியைக் கொண்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், வைப்புக்கள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும்.

   கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய தகவல்கள்:
   - வருடாந்த வட்டி வீதம் மற்றும் வருடாந்த பயன்தரும் வட்டி வீதம்
   - வட்டிக் கொடுப்பனவு வழங்கப்படும் திகதி அல்லது கணக்கில் வட்டி வரவு வைக்கப்படும் திகதி
   - வட்டி வழங்கப்படாத சந்தர்ப்பங்கள்
   - நிலையான வைப்புக்கள் தொடர்பில், வைப்புக்காலம் மற்றும் முதிர்வுத் திகதிக்கு முன்னதான மீளப்பெறுகை தொடர்பான நியதிகள் என்பன
   - மேலதிக சேவைக் கட்டணங்களும் அறவீடுகளும்

2. கடன்களைப் பெற்றுக் கொள்ளும் போது, அக்கடன்கள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும்.

   கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய தகவல்கள்:
   - செலுத்த வேண்டிய மாதாந்த அல்லது வருடாந்த வட்டி
   - வட்டி வீதம் நிலையானதா அல்லது மாறக் கூடியதா என்பது
   - வட்டி கணிப்பீட்டு முறை
   - கடனின் காலம்
   - தவணைக் கட்டணங்களின் எண்ணிக்கை
   - தவணைக் கட்டணத் தொகை
   - தவணைக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டிய திகதிகள்
   - பிணைகள் மற்றும் உத்தரவாதமளிப்பவர்கள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்
   - தவணைக் கட்டணங்களின் கொடுப்பனவுகளில் தாமதம் ஏற்படின் அது தொடர்பான நிபந்தனைகள்
   - உரிய திகதிக்கு முன்பதாக கடன்கள் மீளச் செலுத்தப்பட்டால் அது தொடர்பான நிபந்தனைகள்
   - மேலதிக சேவைக் கட்டணங்களும் அறவீடுகளும்

3. ஒரு அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்துடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது கீழ்கண்ட நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.
   - எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களையும் மேற்கொள்ள முன்னர், அக்கொடுக்கல்வாங்கல் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய உங்கள் சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்ளல்.
   - விண்ணப்பப்படிவங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை கவனமாக வாசித்து அறிந்த பின்னர் அவற்றை பூர்த்தி செய்தல்.
   - எந்தவொரு வெற்றுப் படிவங்களிலும் கையொப்பமிடாது இருத்தல்.
   - கணக்குகள் தொடர்பான தனிநபர் அடையாள இலக்கங்கள் மற்றும் கடிதப் போக்குவரத்துக்களை பாதுகாத்தல்.
   - அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்திற்கு உண்மையான தகவல்களை வெளிப்படுத்துதல்.
   - முகவரி மாற்றங்களை அறிவித்தல்.
   - சந்தேகத்திற்கிடமான அல்லது மோசடியான கொடுக்கல்வாங்கல்களை அறிவித்தல்.
   - எந்தவொரு பிரச்சனையையும் முதலில் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்துடன் கலந்துரையாடி தீர்ப்பதற்கு முடியுமானவளவு சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுதல்.

மேற்குறிப்பிட்ட முறையில் பிரச்சனைகள் தீர்க்கப்படாது போனால் கீழ்கண்டவற்றுடன் தொடர்பு கொள்ள முடியும்:

➢ நிதிசார் குறைகேள் அதிகாரி, இல. 143ஏ, வஜிர வீதி, கொழும்பு 5.
தொலைபேசி: 011 2595624-5, மின்னஞ்சல்: forsril@sltnet.lk

➢ கடன்கள் தொடர்பான பிரச்சனைகளுக்கு மாத்திரம்:
கடன் ஆலோசனை நிலையம், இல. 58, சிறி ஜயவர்த்தனபுர மாவத்தை, இராஜகிரிய.
தொலைபேசி: 011 2887006, மின்னஞ்சல்: upadeshana@gmail.com

**மேற்கூறப்பட்டவை உங்களது நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான முக்கிய தகவல்கள் மாத்திரம் என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும். உங்களது கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக மேலதிக விபரங்களை கேட்டறிதல் முக்கியமானதாகும்.**

இலங்கை மத்திய 'வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1
தொலைபேசி: 0112477100, 0112398539, 0112477115
தொலைநகல்: 0112477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk, இணையத்தளம்: www.cbsl.gov.lk

(சி-6435)

முட்டாள் என்பவன் யார் தெரியுமா? தன் வியாதிக்காக டாக்டரிடம் போய் தன் சொத்துக்களுக்கு அவரையே வாரிசாக்குகிறானே அவன்தான். ~ பெஞ்சமின் பிராங்ளின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஆலயம் இருக்கு வழிபாடு இல்லை தனியார் மருத்துவமனை இருக்கு தரம் இல்லை!

எங்கள் பற்றிய சுய மதிப்பீட்டைச் செய்வதிலும் அதில் இருக்கக்கூடிய பலவீனங்களை இனங்கண்டு அதனை நிவர்த்திப்பதிலும் எங்களிடம் 'புத்திஜீவிகளின் அமைப்பு' இல்லை என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

எங்கள் பற்றிய எங்கள் மதிப்பீடுகள் இல்லாமல் போக, எங்களைப் பற்றி வெளிநாட்டவர்கள் மதிப்பிடுவதை ஏற்று அது பற்றிக் கதைத்து சுவைத்துவிட்டுப் போகும் பரிதாப நிலை நீக்கப்பட வேண்டும்.

உதாரணமாக யாழ்ப்பாணத்தில் ஆலயங்களின் புனரமைப்பு மற்றும் புதுப்புது இடங்களில் கோயில் கட்டுதல் ஆகிய பணிகள் ஏராளமாக நடந்து கொள்கின்றன.

ஒருகாலத்தில் ஒற்றை மண்டபத்தோடு இருந்த ஆலயங்கள் இன்று மூடிக்கட்டி வானுயர்ந்த கோபுரத்தோடு பூட்டப்பட்டு இருப்பதைக் காண முடிகின்றது.

பூசை நேரத்தில் வழிபாடு செய்வதற்கு ஆட்களில்லை. திருவிழாக் காலத்தில் சுவாமி காவுவதற்கு இளைஞர்கள் கிடையாது.

நான்கு சில்லு வாகனங்களில் கடவுளை வைத்து வீதியால் உருட்டி ஆகம ஒழுங்கு நிறைவேற்றப்படுகிறது.

ஏதோ கடமை என்ற வகையில் இவை நடைபெறும் அதேநேரம், வழிபாட்டுக் குறைவுகள் தெய்வ நம்பிக்கையீனங்கள் மனிதனை ஒழுங்குபடுத்தும் பாவ;புண்ணிய எண்ணக்கருக்களை உடைத்தெறிந்துவிட்டன.

இதற்கு யாழ்ப்பாணத்தில் இயங்கும் பெரும்பாலான தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ ஆலோசனை, பரிசோதனை நிலையங்களையும் கூறலாம்.

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற தனியார் மருத்துவமனைகள், மருத்துவ ஆலோசனை மற்றும் மருத்துவப் பரிசோதனை நிலையங்களில் 90 வீதமானவற்றில் பயிற்சி பெற்ற பணியாளர்கள் இல்லை.

நோயாளர்களுடன் எப்படிக் கதைப்பது, பொதுசனத் தொடர்பை எப்படி ஏற்படுத்துவது என்ற அடிப்படை அறிவு இல்லாதவர்களே அங்கு பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதுதவிர மருத்துவப் பரிசோதனையை நினைத்தால் தலை சுற்றும்.

எந்தவிதமான பயிற்சியும் பெறாத இரண்டு பெண் பிள்ளைகள் கூடியிருந்து வீட்டுக் கதை கதைத்து இரத்தப் பரிசோதனைக்கு புள்ளியிட வேகமாக வரும் எம்.எல்.ரி அதில் தனது கையொப்பத்தைக் கிறுக்கிவிட்டுப் போகிறார். இதனை நம்பிச் சிகிச்சை நடக்கிறது.

என்ன செய்வது! யாழ்ப்பாணத்தில் மருத்துவ சேவைதான் இன்று உன்னதமான வியாபார சேவையாக மாறிவிட்டது.

அதன் விளைவாக மரணங்கள் தாராளம் என்றாகிவிட்டது.

ஆம், வழிபாட்டிற்குரிய ஆலயங்களும் தெய்வீகத்திற்கு இணையான மருத்துவ சேவைகளும் இங்கு அர்த்தமற்றதாகிப் போயின என்பது தீராத் துயரமே.

# இருதரப்பு விவகாரங்கள் குறித்து கொரியா - இலங்கை ஜனாதிபதிகள் பேச்சு

(சியோல்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் தென்கொரிய ஜனாதிபதி லீ மயுங் பக்கினுக்கும் இடையில் இருதரப்புப் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் தென் கொரியாவுக்கு சென்றிருந்தனர்.

இந்நிலையில் ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினரை வரவேற்பதற்கான உத்தியோகபூர்வ அரசாங்க நிகழ்வின் பின்னர் இச்சந்திப்பு சியோல் நகரிலுள்ள தென் கொரிய ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இவ்விரு நாடுகளுக்கும் இடையில் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு நாடுகளுக்கும் இடையில் விமான சேவைகளை ஆரம்பிப்பது, தென் கொரியாவில் இலங்கையர் களுக்கு வழங்கப்படும் வருடாந்த வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மற்றும் இலங்கையின் பழவகைகள் மற்றும் காய்கறி வகைகளை தென் கொரியாவுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பிலும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையில் தீவிரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தையும் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியமைக்கு இதன்போது மகிந்த ராஜபக்ஷவுக்கு தென்கொரிய ஜனாதிபதி பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்க தென் கொரியா இணக்கம் தெரிவித்துள்ளது.

இந் நிதி கல்வி, சுகாதாரம், விவசாயம் மற்றும் பொதுவேலைத் திட்டங்கள் போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூசான் வணிக மற்றும் கைத்தொழில் சபையின் அனுசரணையுடன் நடைபெறும் இலங்கை - கொரிய வர்த்தக சங்கக் கூட்டத்திலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றவுள்ளமை தெரிந்ததே. (எ-11)

# காளை மாட்டை கடத்திய ஆறு பேருக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

கட்டாக்காலி காளை மாடு ஒன்றினை திருட்டுத்தனமாக கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் கைதாகி இரு நாட்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆறு நபர்களுக்கும் யாழ்.நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த சனிக்கிழமை அன்று குறித்த அறுவரும் அரியாலை கிழக்குப் பகுதியில் கட்டாக்காலி மாடு ஒன்றினை சிறிய ரக உழவு இயந்திரத்தில் ஏற்றி கடத்திச் செல்ல முற்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக கிராம சேவகர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின்படி குறித்த ஆறு இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட அறுவரும் யாழ். பொலிஸாரினால் யாழ்.நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரணி ரெமீடியஸ் ஆஜராகி பிணை விண்ணப்பம் செய்திருந்த நிலையில் வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதிவான் மா.கணேசராஜா குறித்த அறுவரையும் தலா 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஒவ்வொரு ஆட்பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

மாடு கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட சிறிய ரக உழவு இயந்திரமும் காளை மாடும் பொலிஸாரின் கண்காணிப்பில் உள்ளதோடு குறித்த வழக்கிலுள்ள அறுவரில் இருவருக்கு ஏற்கெனவே இவ்வாறு மாடு கடத்திய குற்றச்சாட்டில் யாழ்.நீதிமன்றில் வழக்கு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (எ-4)

# போலிக்கடவுச்சீட்டை பயன்படுத்திய நபருக்கு கடூழிய சிறையும் அபராதமும்

(கொழும்பு)

போலிக்கடவுச்சீட்டை பயன்படுத்தி இத்தாலிக்குச் செல்ல முற்பட்ட இளைஞர் ஒருவருக்கு நீர்கொழும்பு பிரதான நீதிவான் ஏ.எம். என்.பி. அமரசிங்க ஒரு இலட்சம் ரூபா ,அபராதமும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத் தண்டனையும் வழங்கியுள்ளார்.

சந்தேக நபர் 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி இத்தாலி செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையம் வந்தபோது இவரின் கடவுச்சீட்டை குற்றப் புலனாய்வு பிரிவினர் பரிசீலித்தனர்.

அப்போது இக்கடவுச்சீட்டு போலியானது என கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் குடிவரவு, குடியகல்வு சட்டதை மீறிய குற்றச்சாட்டில் இவருக்கு எதிராக வழக்குத்தொடரப்பட்டது. கடந்த 18 ஆம் திகதி இவர் மீதான வழக்கு விசாரணையின் போது நீதிமன்றில் இத்தண்டனை விதிக்கப்பட்டது. (அ-2)

# உரிய பதில் கிடைக்கவில்லை; விரைவில் தொ.ச.நடவடிக்கை

## விரிவுரையாளர் தொழிற்சங்கம் எச்சரிக்கை

தமது கோரிக்கைகளுக்கு இதுவரை உரிய பதில் கிடைக்காததால் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் மே மாதம் 26 ஆம் திகதி பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் டெரன்ஸ் மதுஜித் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சம்பள உயர்வு உள்ளிட்ட தமது பிரச்சினைகள் குறித்து மூன்று தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளபோதும் இதுவரை தீர்வுகள் எதுவும் வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தொடர்ச்சியாக வாக்குறுதிகளை மாத்திரம் வழங்கி வரும் அரசாங்கம் தங்களை ஏமாற்றி வருவதாக அந்த சங்கம் ஏற்கெனவே கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அலங்கார உற்சவம்

(புன்னாலைக்கட்டுவன்)

ஊரெழு கிழக்கு நாவலம்பதி ஸ்ரீ ஞான வைரவப் பெருமான் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (அ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உன் கடமை புனிதமானது



கடவுள் மீது அன்பு செலுத்த வேண்டும். அது நமது கடமை என்று எண்ண வேண்டும்.

வெற்றியில் உனக்கு விருப்பம் இருக்குமானால் வாழ்க்கையில் ஆணவத்தை முற்றிலும் ஒழித்துவிடு.

வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களுக்கு மத்தியிலும் தெய்வத்தன்மையை மறக்காமல் இருக்க வேண்டும்.

எந்தச் சூழ்நிலையிலிலும் எவருடைய குணம் உயர்ந்தாக இருக்கின்றதோ அவனே உண்மையில் சிறந்த மனிதன்.

நாம் நம்மைப்பற்றி எண்ணாத நேரங்களில் மட்டுமே நன்மையையும் உண்மையான வாழ்க்கையையும் அனுபவிக்கின்றோம்.

இறைவனிடம் அனைத்து இயல்புகளும் இருந்தாலும் அவற்றை மனித இயல்பு மூலமாகத்தான் காண முடியும்.

நீ செய்யும் கடமை ஒவ்வொன்றும் புனிதமானது: அதை பக்தியுடன் செய்வது மிக உயர்ந்த தெய்வ வழிபாடு.

# செங்கல்பட்டு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழ சொந்தங்களை விடுதலை செய்ய வேண்டும்

## சீமான் கோரிக்கை



(சென்னை)

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்ய நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை,

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் சட்டத்திற்குப் புறம்பாக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ்ச் சொந்தங்கள் 13 பேர் தங்களை விடுதலை செய்யக் கோரி மீண்டும் ஒரு முறை பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இன்றோடு 10 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அவர்களில் பலரின் உடல் நிலை மிகவும் நலிவுற்றுள்ளது என்கிற செய்தி வருத்தத்தையும் ஆதங்கத்தையும் ஏற்படுத்துகின்றது.

போரின்போது இலங்கைக்கு மண்ணெண்ணை கடத்தினார்கள், மருந்து கடத்தினார்கள், காயப்பட்டவர்களைக் காப்பாற்ற குருதி கடத்தினார்கள் என்பது போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஐயத்திலுமே இவர்கள் பல ஆண்டுகளாக செங்கல்பட்டிலுள்ள சிறையில் சிறப்பு முகாம் என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இதுதவிர குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றம் சென்று பிணை விடுதலை உள்ளிட்ட சட்ட ரீதியான நிவாரணங்களைப் பெறக்கூட தமிழக பொலிஸார் க்யூ பிரிவு அனுமதிக்க மறுக்கிறது. தங்களை விடுவிக்கக்கோரி ஒவ்வொரு முறையும் இவர்கள் பட்டினிப் போராட்டம் நடத்தும் போது அவர்களோடு மாவட்ட நிர்வாகம் பேச்சுவார்த்தை நடத்தி விடுதலை செய்வது தொடர்பாக அரசுடன் பேசி முடிவெடுக்கிறோம் என்றுதான் உறுதியளிக்கிறது.

அவர்களின் உறுதிமொழியை ஏற்று இவர்கள் பட்டினிப் போராட்டத்தை கைவிட்டுள்ளனர். ஆனால் அதன்பின்னர் அவர்களைப் கண்டு கொள்வதில்லை. அரசு நிர்வாகத்தின் இப்படிப்பட்ட பொறுப்பற்ற போக்குத்தான் இப்போது நடைபெற்றுவரும் பட்டினிப் போராட்டத்திற்குக் காரணமாகும்.

தாங்கள் வாழ்ந்த நாட்டில் உரிமை மறுக்கப்பட்டு உயிர் பறிக்கப்படும் நிலையில் இங்கு ஓடி வந்த நம் சொந்தங்களை நம்மால் தேர்வு செய்யப்பட்ட அரசின் பொலிஸ் இப்படி சித்திரவதைக்கு உள்ளாக்குவது வேதனையைத் தருகின்றது. ஈழ மண்ணில் கொடுமை என்று இங்கு ஓடி வந்தால் தாய்த் தமிழ் மண்ணில் அதையும் விட கொடுமையான நிலை எங்குதான் போவான் ஈழத் தமிழன்? எனவே, தமிழக அரசு இந்த மக்களின் நிலையை நியாயமான பார்வையுடன் சீர்தூக்கிப்பார்க்க வேண்டும். தமிழக பொலிஸ் துறையின் க்யூ பிரிவின் நடவடிக்கை சட்டப்பூர்வமானதுதானா என்பதை ஆராய வேண்டும். தமிழக அரசு நல்ல முடிவை எடுத்து இவர்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என சீமான் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மேல்படிப்பிற்காக அமெ.செல்லும் வைத்தியர்களுக்கு நிபந்தனை விதிப்பு

(புதுடில்லி)

மேல்படிப்புக்காக அமெரிக்கா செல்லும் வைத்தியர்கள் உறுதிமொழி பத்திரம் வழங்க வேண்டும் என்ற நிபந்தனை இந்த ஆண்டு முதல் அமுலுக்கு வருகின்றது.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத் நேற்று முன்தினம் டில்லியில் கூறியுள்ளார். அவர் வழங்கிய பேட்டியில் கூறியதாவது, கடந்த 3 ஆண்டுகளில் மருத்துவ மேல்படிப்புக்காக 3 ஆயிரம் வைத்தியர்கள் அமெரிக்காவுக்கு சென்றனர். அவர்கள் மீண்டும் இந்தியாவுக்கு திரும்பவில்லை. அமெரிக்காவிலேயே வைத்திய தொழில் செய்கின்றனர்.

ஒரு வைத்தியரை உருவாக்க அரசு இலட்சக்கணக்கில் அவர்களது படிப்புக்காக செலவழிக்கின்றது. ஆனால் தாய்நாட்டுக்கு சேவை செய்ய சிலர் விரும்பவில்லை. இதை தடுக்க இந்த ஆண்டு முதல் மேல்படிப்புக்காக அமெரிக்கா செல்லும் மாணவர்கள் படிப்பு முடிந்தவுடன் இந்தியா திரும்பி வருவதாக உறுதி மொழிப்பத்திரம் வழங்க வேண்டும்.

மேலும் உறுதி மொழிப்பத்திரம் வழங்கி விட்டு அதன்படி இந்தியாவுக்கு திரும்பாத வைத்தியர்களும் அமெரிக்காவில் தொழில் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றார். (அ-2)

# தர்மபுரியில் நிலநடுக்கம்; அச்சத்தில் மக்கள்

(தர்மபுரி)

தர்மபுரியில் திடீர் நில அதிர்வு நேற்று முன்தினம் ஏற்பட்டது. தர்மபுரியில் இந்த திடீர் நில அதிர்வால் பொதுமக்கள் பீதியடைந்தனர். இந்த நிலநடுக்கத்தால் வீடுகள் குலங்கியபொதுமக்கள் இரவு வெகுநேரம் வீட்டிற்குள் செல்லாமல் அச்சத்துடன் வீதியில் இருந்தனர். இந்த நில அதிர்வில் இருந்து இன்னும் மீளவில்லை என பொதுமக்கள் கூறியுள்ளனர்.

தர்மபுரி மற்றும் அதனை சுற்றியுள்ள குமாரசாமிப்பட்டி, காந்திநகர், நெடுமாறன் நகர் உள்ளிட்ட பகுதிகளில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த நேரத்தில் வெடிச்சத்தம் போன்று பயங்கர சத்தமும் ஏற்பட்டதாக கூறப்படுகின்றது. (அ-2)

# விண்ணில் பாயத் தயாராகும் ரிசாட்-1 செயற்கைக்கோள்

(சென்னை)

இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகம் (இஸ்ரோ) இந்திய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி முதல்முறையாக ராடர் செயற்கைக்கோள் ஒன்றைத் தயாரித்துள்ளது.

ஆயிரத்து 858 கிலோ எடை கொண்ட இந்த செயற்கைக் கோளுக்கு ரிசாட்-1 என பெயரிடப்பட்டுள்ளது. ரிசாட்-1 செயற்கைக் கோள் பி.எஸ்.எல்.வி.சி 19 ரொக்கெட் மூலம் ஸ்ரீ ஹரிகோட்டா சத்தீஸ் தவான் விண்வெளி ஏவுதளத்தில் இருந்து நாளை அதிகாலை 5.47 மணிக்கு விண்ணில் செலுத்தப்படுகிறது.

இந்நிலையில் இதற்கான 71 மணி நேரம் கவுன்டவுன் நேற்று காலை 6.47 மணிக்கு தொடங்கியுள்ளது. ரிசாட்-1 செயற்கைக் கோள் பூமியிலிருந்து 536 கிலோ மீற்றர் சுற்றுவட்ட பாதையில் நிலை நிறுத்தப்படவுள்ளது.

இந்த செயற்கைக் கோள் கடந்த 20 ஆம் திகதியே விண்ணில் செலுத்தப்படும் என்று இஸ்ரோ அறிவித்திருந்தது. ஆனால் ரிசாட்-1 செயற்கைக் கோளை விண்ணில் ஏவும் திகதியை இஸ்ரோ மாற்றியது. ரிசாட்-1 செயற்கைக்கோள் வேளாண்மை, நீர்வள நிர்வாகம் உட்பட பல்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

இச் செயற்கைக் கோள் இரவு, பகல் என எந்த காலநிலையானாலும் மேகம் மூட்டமாக இருந்தாலும் பூமியின் நிலப்பரப்பை துல்லியமாக படம் பிடித்து அனுப்பும் திறன் கொண்டது என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## பாரதச் செய்தி

# நீண்ட தூர ஏவுகணையை பரிசோதிக்க பாக்.முடிவு

(புதுடில்லி)

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக பரிசோதித்துள்ளதையடுத்து பாகிஸ்தானும் நீண்ட தூர ஏவுகணையை பரிசோதிக்க முடிவுசெய்துள்ளது.

அடுத்தடுத்த 5 நாட்களில் இந்தியப் பெருங்கடலில் நீண்டதூர ஏவுகணையை பரிசோதிக்க உள்ளதாக இந்தியாவிடம் பாகிஸ்தான் தகவல் அளித்துள்ளது. ஏவுகணையை பரிசோதிக்க உள்ளதால் அப்பகுதியில் விமானங்கள் பறக்காமல் பார்த்துக் கொள்ளும் இந்தியாவை பாகிஸ்தான் கேட்டுக் கொண்டுள்ளது. (அ-2)




டில்லிக்கு அரசு முறைப் பயணமாக வந்துள்ள அமெரிக்க கடற்படை தளபதி அட்மிரல் ஜொனத்தான் கிரீனெட்டை கடற்படை தளபதி அட்மிரல் நிர்மல் வர்மா கடற்படை தலைமையகத்தில் வரவேற்றதைப் படத்தில் காணலாம்.

# ஐ.நா. பொது செயலாளர் இந்தியா செல்லத்திட்டம்

ஐ.நா சபையின் பொது செயலாளர் பான்-கீ-மூன் இரு நாள் சுற்றுப் பயணமாக இந்தியா வர திட்டமிட்டுள்ளார். அவர் அமெரிக்காவில் இருந்து இந்த வாரம் புறப்பட்டு இந்தியா வருகிறார்.

இந்தியாவில் அவர் புதுடில்லி மற்றும் மும்பை செல்லவுள்ளார். டில்லியில் மூத்த அரசியல் கட்சி பிரமுகர்களை சந்திக்கவுள்ளார். அப்போது உலக அளவில் தற்போது நிலவும் பிரச்சினைகள் குறித்து ஆலோசனை நடத்துவார்.

டில்லியில் உள்ள ஜாமியா இஸ்லாமியா பல்கலைக்கழகம்



அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்குகிறது. அதில் அவர் பங்கேற்கிறார். பின்னர் அவர் மும்பை செல்லவுள்ளார். அங்க மராட்டிய முதல் மந்திரி பிரிதிவி ராஜ் சவானை சந்தித்து பேசவுள்ளார்.

மேலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் குறித்து தொழில் அதிபர்களுடன் விவாதிக்கவுள்ளார். பெண்கள் குழந்தைகள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களையும் சந்திக்கவுள்ளார். மலேரியா நோய் தடுப்பு திட்டத்தின் ஐ.நா பொது செயலாளரின் சிறப்பு தூதராக நியமிக்கப்பட்டுள்ள ரிலையன்ஸ் தொழில் அதிபர் முகேஷ் அம்பானியை சந்தித்துப் பேசுகிறார். இந்த நிகழ்ச்சியில் அரசு மற்றும் தனியார் துறை அதிகாரிகள் ஐ.நா சபை பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். (அ-2)

# மழையால் கைவிடப்பட்டது கொல்கத்தா-டெக்கான் மோதல்



(கொல்கத்தா)

ஐ.பி.எல் போட்டித் தொடரின் 32-வது லீக் ஆட்டம் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்றிரவு 8 மணிக்கு ஆரம்பமாவதாக இருந்தது.

இப்போட்டியில் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும், சங்கக்கார தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் ஐதராபாத் அணியும் மோத இருந்தன.

இந்நிலையில் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் மைதானத்தில் மழை பெய்ததால் ஆட்டம் ஆரம்பமாவதில் தாமதம் ஏற்பட்டது.

ஆட்ட நடுவர்கள் அடிக்கடி மைதானத்தை பார்வையிட்ட வண்ணம் இருந்தனர்.

ஆனால் மைதானத்தில் தண்ணீர் தேங்கி இருந்தது.


இறுதியாக இரவு 10.30 மணிக்கு மைதானத்தைப் பார்வையிட்ட நடுவர்கள் போட்டியைக் கைவிட முடிபு செய்தனர்.

இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

இப்போட்டியுடன் சேர்த்து கொல்கத்தா தான் ஆடிய 8 ஆட்டங்களில் 4-ல் வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் 2-ம் இடம் வகிக்கின்றது.

ஆனால் டெக்கான் அணி இதுவரை தான் ஆடிய 5 ஆட்டங்களிலும் தோற்றதால், புள்ளிகளை எதுவும் பெறாமல் கடைசி இடத்தில் இருந்தது.

நேற்றைய போட்டி கைவிடப்பட்டதால் கிடைத்த ஒரு புள்ளியால் டெக்கான் தனது புள்ளிக் கணக்கை ஆரம்பித்தாலும், கடைசி இடத்திலேயே நீடிக்கின்றது.



**இன்றைய ஐ.பி.எல். போட்டிகள்:**
மாலை 4 மணிக்கு சண்டிகரில் நடைபெறும் போட்டியில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி எதிர் மும்பை இந்தியன்ஸ் அணிகளும், இரவு 8 மணிக்கு பெங்களூரில் நடைபெறும் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி எதிர் பெங்களூர் அணிகளும் மோதுகின்றன.

# டில்லி டேர்டேவில்ஸ் இலகுவாக புனே வாரியர்ஸை வென்றது

இந்தியன் பிரிமியர் லீக்கின் 31 ஆவது போட்டியில் டில்லி டேர்டேவில்ஸ் அணி வெற்றி பெற்றது.

டில்லி டேர்டேவில்ஸ் அணிக்கும், புனே வாரியர்ஸ் அணிக்கும் இடையில் நேற்று மாலை இடம்பெற்ற இப்போட்டியில் டில்லி டேர்டேவில்ஸ் அணி 8 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றி பெற்றது.

சுப்ரட்டா ரோய் சஹாரா மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற புனே வாரியர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய புனே வாரியர்ஸ் அணி 20 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.


அவ் அணியின் சார்பாக முதலிரண்டு விக்கெட்டுக்களும் 0 மற்றும் 1 ஓட்டங்களுக்கு இழக்கப்பட அவ் அணி நெருக்கடிகளை எதிர் நோக்கியது.

அதன் பின்னர் ஜோடி சேர்ந்த மனிஷ் பாண்டே மற்றும் ரொபின் உத்தப்பா இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களைப் பெற முனைந்தனர்.

இறுதி நேரத்தில் ரொபின் உத்தப்பா வேண்டியளவு ஓட்டங்களைப் பெறத் தவறியதன் காரணமாக புனே வாரியர்ஸ் அணி போதுமான ஓட்டங்களைப் பெறத் தவறியிருந்தது.

துடுப்பாட்டத்தில் புனே வாரியர்ஸ் அணி சார்பாக மனிஷ் பாண்டே 56 பந்துகளில் 80 ஓட்டங்களையும், ரொபின் உத்தப்பா 58 பந்துகளில் 60 ஓட்டங்களையும் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பந்துவீச்சில் டில்லி அணி சார்பாக இர்பான் பதான் 4 ஓவர்களில் 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், மோர்னி மோர்கல் 4 ஓவர்களில் 34 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.



147 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர்டேவில்ஸ் அணி 16 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் டில்லி டேர்டேவில்ஸ் அணி சார்பாக வீரேந்தர் சேவாக் ஆட்டமிழக்காமல் 48 பந்துகளில் 87 ஓட்டங்களையும், கெவின் பீற்றர்சன் 21 பந்துகளில் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் புனே வாரியர்ஸ் அணி சார்பாக ராகுல் சர்மா 4 ஓவர்களில் 33 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

இப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக டில்லி டேர்டேவில்ஸ் அணியின் தலைவர் வீரேந்திர சேவாக் தெரிவானார்.

# ஆஸி-மே.தீவுகள் மோதும் 3-வது டெஸ்ட் ஆஸி முதல் இன்னிங்ஸ் 328

மேற்கிந்திய தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் செய்துள்ள அவுஸ்திரேலிய அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையிலான 3-வது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

டொமினிக்காவில் இடம்பெற்றுவரும் இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி தனது முதலாவது விக்கெட்டை 2-வது ஓவரிலேயே இழந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் எட் கொவான் ஒரு ஓட்டத்தை மாத்திரம் பெற்று ஆட்டமிழந்தார். அதன் பின் ஜோடி சேர்ந்த டேவிட் வோர்னர் மற்றும் ஷேன் வோற்சன் ஜோடி 83 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தது.

எனினும் இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டதும் அவ்வணி விக்கெட்டுகள் தொடர்ந்தும் வீழ்த்தப்பட்டன.

அவுஸ்திரேலிய அணி ஒரு கட்டத்தில் 7 விக்கெட்டுகளை இழந்து 169 ஓட்டங்களை பெற்றுக் காணப்பட்டது.

எனினும் இணை சேர்ந்த விக்கெட் காப்பாளர் மத்தியூ வேட் மற்றும் வேகப் பந்து வீச்சாளர் மிற்சல் ஸ்ராக் இருவரும் பிரிக்கப்படாத 43 ஓட்டங்களை இணைப்பாட்டமாக புரிந்து நேற்றுமுன்தின முதல் நாள் ஆட்ட நேர முடிபில் அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்களை இழந்து 212 ஓட்டங்களை பெற உதவினர்.

இந்நிலையில் நேற்று தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலியா 226 ஓட்டங்களுக்கு 8-வது விக்கெட்டாக ஸ்ராக்கை இழந்தது.

அடுத்து சதம் அடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை தூக்கி நிறுத்திய வடே 106 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

இறுதியாக ஹில்பென்ஹஸ் 19 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 328 ஓட்டங்களைப் பெற்றது.

இதைத் தொடர்ந்து மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது முதல் இன்னிங்ஸை ஆடத் தொடங்கியது.

# எப்போதும் இலங்கைக்கே முன்னுரிமை -மலிங்க



இலங்கை கிரிக்கெட் சபையுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திடாவிட்டாலும் இலங்கை தேசிய அணிக்காக சகல போட்டிகளிலும் தான் விளையாடத் தயார் என்று வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளிலிருந்து மலிங்க விலகியுள்ள நிலையில் அவரின் தரத்திலான ஏனைய முன்னிலை வீரர்களின் ஊதியத்தில் 60 சதவிகிதத்தையே மலிங்கவுக்கு வழங்க இலங்கை கிரிக்கெட் சபை முன்வந்துள்ளது.

இலங்கையின் முதல்நிலை வேகப்பந்து வீச்சாளரான அவர், நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் 40,000 டொலர்களுக்கு ஒப்பந்தம் செய்யப்படுவார்.

ஒப்பந்தம் செய்யப்படாத வீரர்களுக்கு போட்டிகளுக்காக ஊதியத்தில் 25 சதவிகிதம் மேலதிக கொடுப்பனவும் நாளாந்த படியும் வழங்கப்படும்.

அதேவேளை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தல், அனுமதியன்றி வெளிநாடுகளுக்கு பிரத்தியேக பயணம் மேற்கொள்ளல் போன்றவற்றுக்கான தடைகள் போன்ற இலங்கை கிரிக்கெட்டின் இறுக்கமான நிபந்தனைகளுக்கும் கட்டுப்படத் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சபையுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு தான் மறுத்ததாக ஊடகங்களில் செய்தி வெளியான போதிலும், அவ்வாறு மறுப்பதற்கு இவ்வருடம் வீரர்களுக்கு ஒப்பந்தம் எதுவும் வழங்கப்படவில்லை என்று மலிங்க கூறினார்.

ஒப்பந்தம் இருந்தாலும் இல்லாவிடிலும் கடந்த வருடம் போன்று அனைத்து சர்வதேச ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளிலும் இலங்கைக்காக விளையாட நான் 100 சதவிகிதம் தயார் என்று தெரிவித்துள்ளார்.

# சச்சின் 39ஆவது பிறந்தநாளை எளிமையாகக் கொண்டாடினார்



உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் நேற்று தனது 39 ஆவது பிறந்த நேற்று மிகவும் எளிமையுடன் கொண்டாடினார்.

மும்பை இந்தியன்ஸ் அணி மோதும் 7-வது லீக் ஆட்டத்தில் கிங்ஸ் லெவின் பஞ்சாப்புடன் இன்று மோதுகின்றது.

இந்த ஆட்டம் மொகாலியில் நடக்கிறது.

இதனால் டெண்டுல்கர் தனது 39-வது பிறந்த நாளை சண்டிகாரில் கொண்டாடினார். அங்குள்ள அகார்ட் ஹோட்டலில் பிறந்தநாள் கொண்டாட்டம் நடந்தது. மனைவி அஞ்சலியுடன் வந்து பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டார் சச்சின்.

மும்பை அணியைச் சேர்ந்த தினேஷ் கார்த்திக் பிராங்ளின், ஓஜா, பொல்லார்ட் உள்பட வீரர்கள் டெண்டுல்கரை சூழ்ந்து கொண்டு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு சாய் பாபா இறந்ததால் டெண்டுல்கர் தனது பிறந்தநாளை கொண்டாடவில்லை 39 வயதான டெண்டுல்கர் 23 ஆண்டுகளாக விளையாடி வருகிறார்.




சச்சினுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து பட்டங்களை பறக்க விடத் தயாரான சிறுவர்கள்



ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் மகள் ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் அவரது ஆதரவாளர்கள் இணைந்து தேங்காய் உடைத்து பிரார்த்தனை நடத்தும் நிகழ்வொன்று நேற்றுப் பிற்பகல், கொழும்பு நீதிமன்றத்துக்கு முன்னால் இடம்பெற்றது.

தனக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தவர்களுக்கு கடவுள் உரிய தண்டனையினை வழங்க வேண்டும் என்ற பிரார்த்தனையை முன்வைத்தே ஹிருணிகாவினால் இந்த வேண்டுதல் முன்வைக்கப்பட்டது. இதன் போது ஹிருணிகா உட்பட அவரது ஆதரவாளர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

# இலங்கைப் பயணம்...

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் கடந்த வாரம் இலங்கை சென்றது.

தமிழர்களின் மறுவாழ்வு, மீள்கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆய்வு செய்த அந்தக் குழு, பொது மக்களிடமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளிடம் ஆலோசனை நடத்தியது. இறுதியில் மகிந்த ராஜபக்ஷவிடம் பேசியது.

இந் நிலையில் அந்தப் பயணம் தொடர்பாக, இந்தியப் பிரதமரைச் சந்தித்து சுஷ்மா சுவராஜ் ஆலோசனை நடத்தினார். அப்போது, வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மத்தாய் மற்றும் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் ஆகியோரும் உடனிருந்தார்கள்.

அது தொடர்பாக நேற்று பிடிஐ செய்தி நிறுவனத்திடம் பேசிய சுஷ்மா சுவராஜ், தங்களது இலங்கைப் பயணத்தின் போது, வடக்கில் இராணுவப் பிரசன்னத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என்பது குறித்து ஜனாதிபதியிடம் பேசியதாகத் தெரிவித்தார்.

பிறந்தநாள் நிகழ்ச்சிகளுக்கு இராணுவத்தினர் அழையா விருந்தாளிகளாக வருவதாகவும், கோயில்களுக்குள் நுழைவதாகவும் சுட்டிக்காட்டியதாகத் தெரிவித்தார். மேலும் 13-வது அரசியல் சட்டத் திருத்தம் குறித்துப் பேசியதாகவும் சுஷ்மா தெரிவித்தார்.

அதேநேரத்தில், 13-வது அரசியல் சட்டத் திருத்தம் குறித்துப் பேசியதாக இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட தகவல் தவறு என்று, இலங்கை அரசவட்டாரங்களைமேற்கோள்காட்டி, திஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்தியக் குழுவினர் 13-வது அரசியல் சட்டத் திருத்தம் குறித்துப் பேசவில்லை என்றும், அது தொடர்பாக அரசுத் தரப்பில் எந்த உறுதி மொழியும் அளிக்கப்படவில்லை என்றும் அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பனிடம் கேட்ட போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளை மீண்டும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெறச் செய்து பேச்சுவார்த்தையைத் தொடர வேண்டும் என்று வலியுறுத்தியதாகவும், அவ்வாறு பேசும்போது 13-வது அரசியல்சட்டத்திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பாகத்தான் விவாதிக்கப்படும் என்றும் தெரிவித்தார். (எ-11)

# இனந்தெரியாதோர் தாக்...

கொடுத்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போதே குறித்த நபர் தாக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தடுக்க முயன்ற வயோதிபர் ஒருவருக்கு தாக்குதலை மேற்கொண்டோர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற பகுதியிலிருந்து 50 மீற்றர் பகுதியில் இராணுவக் காவலரண் ஒன்று அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நபர் அண்மையில் டுபாயில் இருந்து நாடு திரும்பியதாக தெரியவருகின்றது.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-11,24)

# இந்துக்களின் சுதந்...

மதத் துவேஷ நிகழ்வுகளுக்கு இந்துமா மன்றம் கண்டனம் எனும் தலைப்பிலான அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

60வருடகால பெருமைவாய்ந்தபிள்ளையார் ஆலயத்தை அகற்றுமாறு அரசாங்கமோ, எந்த ஒரு அதிகார சபையோ உத்தரவு பிறப்பிக்க இந்த நாட்டின் சட்டமோ அல்லது எந்த நீதி நியாயமோ இடம் தரவில்லை.

தம்புள்ளையில் இருக்கும் இந்து ஆலயத்தை அகற்ற வேண்டும் என்ற கோஷம் சம்பந்தமான செய்தியறிந்தும் வேதனை அடைகின்றோம்.

பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ்வர ஆலயச் சூழலில் பௌத்த சமயத்தைப் பரப்பும் நோக்குடன் அரசாங்கத்தினதோ, இராணுவத்தினதோ ஆதரவால் எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளை அறிந்தும் கவலையடைகின்றோம். கண்டிக்கின்றோம்.

இந்த நாட்டில் சம உரிமையுடனும் சுதந்திரத்துடனும் வாழும் உரிமை இந்து மக்களுக்கு உண்டு. இந்தச் சுதந்திரத்தை பறிகொடுக்க இந்த நாட்டின் எந்தவோர் இந்துவும் தயாரில்லை. இந்து மக்களின் சுதந்திரத்தை பாதிக்கின்ற எந்தவொரு முயற்சியையும் பொறுக்க முடியாது.

இந்த நாட்டின் அனைவரது அடிப்படை உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதாக வாக்குறுதியளித்திருக்கின்ற ஜனாதிபதியோ அவரின் அமைச்சர்களோ, அமைச்சின் செயலாளர்களோ இப்படியான மதத்துவேஷ நடவடிக்கைகளுக்கு கட்டளை பிறப்பித்திருப்பார்களென்று எம்மால் நம்ப முடியாது. உடனடியாக இந்த துவேஷ நடவடிக்கைகளை நிறுத்துமாறு பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மேலும், இதில் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சகல தமிழ் அரசியல் தலைவர்களையும் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (எ-11)

# இந்திய கடற்பரப்புக்குள்...

பி.புகழேந்தி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐந்தாயிரம் வடமாகாண மீனவர்களுடன் ஆயிரம் படகுகளில் சென்று, இராமேஸ்வரத்தில் வைத்து ஆர்ப்பாட்டம் நடத்த விருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.

எனினும், அவர் அவ்வாறு ஆர்ப்பாட்டம் நடத்தும் பட்சத்தில், சென்னை மேல் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள சூளைமேடு கொலை சம்பவம் தொடர்பிலான வழக்கில் அவர் கைது செய்யப்படுவார் என தமிழக சட்டத்தரணி தெரிவித்திருந்தார்.

இதேவேளை, 2009 ஆம் ஆண்டு வன்னியில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் இராமேஸ்வரம் கடல்வழியாக யுத்தத்தால் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் கொண்டு செல்ல முற்பட்ட போது பழ.நெடுமாறன் உட்பட பலர் கைது செய்யப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-11)


**இலவச கணனி பயிற்சி வகுப்பு**

வயது வேறுபாடின்றி மகளீர் மட்டும் பங்குபற்றலாம்

இலவச பாடக் குறிப்புகள்

பயிற்சி நெறியில் இணைய விரும்புவர்கள் 27.04.2012 வெள்ளி காலை 10.30 மணிக்கு கீழ் உள்ள முகவரிக்கு நேரில் வரவும்

**பெண் அலுவலகர் தேவை**

கணனி பயிற்சி நிலையத்துக்கு பெண் அலுவலகர் தேவை.
27.04.2012 வெள்ளி காலை 10 மணிக்கு நேரில் வரவும்

"நவமங்கை நிவாசம்" கல்வியற்கல்லூரிக்கு அருகாமையில் இராசபாத வீதி கோப்பாய்
மேலதிக விபரங்களுக்கு - 0756700198

**காணி விற்பனைக்கு**

பத்தமேனி அச்சுவேலி சன்னதி வீதியில் 2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

**0777242025**

(8229)

**Van வாடகைக்கு தேவை**

யாழ் நகரிற்கு அண்மையில் இயங்கும் Telecom கம்பனி ஒன்றிற்கு மாதத்தில் 25 நாட்களுக்கு, சாரதி மற்றும் எரிபொருள், பராமரிப்பு ஆகியன உரிமையாளரால் பொறுப்பேற்கப்பட்ட van வாடகைக்கு தேவை. நாளொன்றிற்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை வழங்கப்படும். மாதமொன்றிற்கு 1250 km இற்கு மேற்பட்ட ஓட்டத்திற்கு மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்.

**தொடர்பு: 0718521535**

(8231)


# 13ஆவது திருத்த...

இலகுவாக இருக்கும். நாம் எமது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளோம்.

செயற்படுத்தக் கூடிய பரிந்துரைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுமாயின் அதற்கு பூரண ஆதரவு வழங்கப்படும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் நடைமுறைப்படுத்தக் கூடியவற்றை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல்களை ஆரம்பிக்க வேண்டும்.

வெற்றிடமாகியுள்ள சபையில் உரையாற்றுவதை விடுத்து, அரசாங்கம் என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்று தெளிவுபடுத்தி அந்த விடயங்களை எழுத்து மூலமாக வெளிப்படுத்த வேண்டும்.

அதனைச் செய்யாது, வெற்று மேசையில் அமர்ந்து விருப்பு, வெறுப்புக்களையும், கருத்துக்களையும் கூறுங்கள் என கோருவது முறையற்றது. தீர்வு காண முனைவது சிறந்தது. ஆனால் பரிந்துரைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்காக நாடாளுமன்றத்தில் பிரேரணை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார். (எ-11)

# மதங்களிடையே சக...

கத்தையும் சகவாழ்வையும் எதிர்பார்க்கின்ற நிலையில் அவர்களுக்கிடையில் அவநம்பிக்கையும் சந்தேகத்தையும் ஏற்படுத்துவது துரதிர்ஷ்டவசமானது.

யுத்தத்திற்குப் பின்னரான காலத்தில் நாட்டின் பெரும் எண்ணிக்கையான மக்கள் எதிர்பார்க்கும் விடயம் இதுவல்ல. தம்புள்ளையில் நடைபெற்ற சம்பவத்தை நாம் பக்கச்சார்பின்றி அவதானித்தால் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த மக்களிடையே சகவாழ்வை கட்டியெழுப்புவதற்கான உபாயம் அரசாங்கத்திடம் இல்லையென்பது நிருபணமாகிறது.

வெவ்வேறு இன, மதக் குழுக்களைச் சேர்ந்த மக்களிடையே நிலவும் ஐக்கியத்திற்கு இடையூறு ஏற்படுத்தாமல் நாட்டை ஆள்வதற்கும் சட்டரீதியான தீர்வுகளைக் காண்பதற்கும் உத்தரவுகளைப் பிறப்பிப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்திற்கு அக்கறையில்லை என்பது தம்புள்ளையில் இடம்பெற்ற சம்பவம் உணர்த்துகிறது. அத்துடன் கோரிக்கைக்கும் உத்தரவுக்கும் இடையிலான வித்தியாசத்தையும் அரசாங்கம் புரிந்து கொள்ளத் தவறிவிட்டது.

இந்நாட்டின் மக்கள் மற்றும் மதங்களிடையே பிணக்கு ஏற்படும்போது உத்தரவை விட கோரிக்கையின் பொறுமானமே மோதலில் ஈடுபடும் தரப்பினரை களத்திற்குள் கட்டுப்படுத்தி வைக்கும்.

விடுதலைப் புலிகளால் மூன்று தசாப்த காலமாக துன்பப்பட்ட மக்களிடையே வித்தியாசமான வழிகளில் பிரிவினைகளை ஏற்படுத்தி மீண்டும் அவர்களை துன்பத்திற்குள் தள்ளக் கூடாதென நாம் அரசாங்கத்தை வலியுறுத்துவதுடன் நாட்டில் இடையூறுகளையும் ஒற்றுமையின்மையை ஏற்படுத்துவதற்கு எந்தவொரு வெளிச்சக்திகளாலும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளை தடுப்பது அரசாங்கத்தின் மாற்ற முடியாத பொறுப்பாகும் என்றுள்ளது. (எ-11)

# ரூபாயின்...

இந்த நிலையில் நேற்றுக்காலை முதலீட்டாளர்கள் டொலரைவாங்குவதற்கு முண்டியடித்தனர்.

இதனால் நேற்று முன்தினம் மாலை 131.35 ரூபாயாக இருந்த அமெரிக்க டொலர் ஒன்றுக்கு எதிரான இலங்கை ரூபாயின் மதிப்பு நேற்றுக்காலை 132.20 ரூபாயாக வீழ்ச்சியடைந்தது. அமெரிக்க டொலருக்கு எதிராகப் பதிவாகியுள்ள இலங்கை நாணயத்தின் ஆகக்குறைந்த மதிப்பு இதுவே ஆகும்.

ஏற்கெனவே கடந்த மார்ச் 19ஆம் திகதி அமெரிக்காடொலர்ஒன்றுக்குஎதிரான இலங்கை நாணய மதிப்பு 131. 60 ரூபாயாக வீழ்ச்சியை சந்தித்தது. அதன்பின்னர் சற்று நாணய மதிப்பு வீழ்ச்சி தடுக்கப்பட்ட போதும் கடந்த இரு வாரங்களாக மீண்டும் வீழ்ச்சி கண்டுவருகிறது. (எ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.